சுவடி : 40

ஏடு : 8

பிப்ரவரி 2017

*

ஆசிரியர்

**வே.ஆனைமுத்து**

*

ஆசிரியர் குழு

**க. முகிலன்**
**தமிழேந்தி**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**

*

அலுவலக
நிருவாகப் பொறுப்பு

**ப. வடிவேலு**
94441 05892

*

அனைத்துத் தொடர்புகளுக்கும்

**'சிந்தனையாளன்'**

2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர்,
எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு,
அம்பத்தூர், சென்னை - 53.

தொடர்புக்கு :
94448 04980
044-2625 2119

மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly
@gmail.com

*

இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179


*

இணையத்தில் படிக்க
**www.keetru.com**

*




# மார்க்சிய – பெரியாரிய – அம்பேத்கரியச் சிந்தனையாளர்களின் சீரிய சிந்தனைக்கு !



*மார்க்சும் - எங்கல்சும் 1848இல் முதன் முதலாகத் தம் கொள்கைகளை அறிவித்தனர். அது கம்யூனிஸ்ட் அறிக்கை (Communist Manifesto) என அழைக்கப்படுகிறது.*

*மூலதனக் குவிப்பு என்பது உழைப்பாளியின் உழைப்பு நேரத்தில் அவருக்குச் சேரவேண்டிய முழு உழைப்புக்குரிய கூலி கொடுக்கப்படாமல், உழைப்புநேரத்தில் பெரும்பகுதிக்கான கூலியை நிறுவனத்தின் உரிமையாளரே திருடிக் கொள்ளையடித்துக் கொண்டதால் குவிந்ததே அவருடைய செல்வம் என்பதை உறுதிசெய்து, அந்த அறிக்கை அறிவித்தது.*

*அத்துடன் உலக வரலாறு (அ) மானிடப் போராட்ட வரலாறு என்பது சுரண்டுவோர்க்கும் - சுரண்டப்படுவோர்க்கும் இடையே இடையறாது நடந்த போர்களின் ஒட்டுமொத்த வரலாறுதான் - அந்த வரலாற்றை, அதனால் அமைந்த சமூக அமைப்பை அடியோடு மாற்றி அமைத்திடப் போராடுவதே மார்க்சியர்களின் குறிக்கோள் எனவும், 1848இல் மார்க்சும் - எங்கல்சும் வெளியிட்ட பொதுவுடைமை அறிக்கை கூறியது.*

**ஒரு நாடு அல்லது தேசத்திலுள்ள எல்லா வகை உற்பத்திச் சாதனங்களும் இயற்கை வளங்களும் சமூகத்தின் உடைமையாக ஆக்கப்பட்டால்தான் – அதற் கான அரசை அந்த நாட்டில் அமைத்தால்தான் அந்தக் குறிக்கோளை அடைய முடியும் என்பதை, உலக வரலாற்றில், முதன்முதலில், 7–11–1917இல் இரஷ்ய தேசத்தில் நிலைநாட்டிக் காட்டியவர்தான் புரட்சியாளர், வி.இ.லெனின்.**

*இரஷ்ய நாட்டில் சுரண்டப்படுவோரான ஆலைத் தொழிலாளர்களும், குறு, சிறு வேளாண் நில உடைமையாளரும், சொந்த நிலம் அற்ற வேளாண் கூலிகளும்; குறு, சிறு தொழிற் சாலைக்காரர்களும்; இரஷ்யன் மொழி அல்லாத வெவ்வேறு தேசிய மொழிகளைப் பேசுவோரும் ஆன பெருங்கூட்டத்தாரை ஒன்று திரட்டினால்தான் இரஷ்யாவில் புரட்சி வெல்லும் என்பதை 1907க்கும் 1914க்கும் இடையே, தம் பட்டறிவால் இலெனின் கண்டார்.*

*மார்க்சியத் தத்துவத்தை வடிவமைத்த மார்க்சும் - எங்கல்சும் தந்த "அனைத்து நாடுகளின் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்!" என்ற முழக்கத்துடன் "தொழிலாளர்களே! சிறு விவசாயிகளே ஒன்று சேருங்கள்!"*

**"ஒடுக்கப்பட்ட தேசியஇன மக்களே ஒன்று சேருங் கள்!" என்ற புதிய இரண்டு போராட்ட முழக்கங்களை யும் சேர்த்து முழங்கினார், இலெனின். ஏன்?**

*1905இல் தொடங்கப்பட்டு 1907இல் தோற்றுப் போன முதலாவது புரட்சியின் பட்டறிவு காரண மாகவே அன்றைய இரஷ்யாவில் இருந்த மேலே கண்ட சமூக அமைப்பைக் கணக்கில் எடுத்துக் கொள்ளச் செய்தது. இலெனின் அதைச் செய்தார்.*

*அதனால்தான் - "Workers of All Countries, Unite" என, மார்க்சும் - எங்கல்சும் தந்த முழக் கத்துடன், "Workers and Peasants, Unite" என்னும் இரண்டாவது முழக்கத்தை உருவாக்கினார்.*

**அன்றைய இரஷ்யா பெரிதும் வேளாண்மை சார்ந்த நாடாகவே இருந்தது.**

**தொழிற்சாலைகளில் தொழிலாளர்களாக இருந் தோர், சில இலக்கம் பேர்.**

**குறு, சிறு விவசாயிகள் பல கோடி பேர்.**

**குறு, சிறு விவசாயிகளும் தொழிலாளர்களோடு சேர்ந்தால் புரட்சிக்கு வேண்டிய பெரும்படை உருவாகி விடும் என உணர்ந்தார் இலெனின்.**

**அன்றைய இரஷ்யாவிலும், இன்றைய இரஷ்யா விலும் இரஷ்யமொழி பேசுவோர், சிறுபான்மையினர், இரஷ்யாவில் மற்ற மொழிகளைப் பேசுவோரை, புரட்சிக்குப்பின் அமைக்கப்படப்போகும் அரசு, தங்கள் தங்கள் மொழிக்குச் சமமான – ஒத்த உரிமையைத் தராமல் அடக்கி ஆளும் என்கிற அச்சத்தை நீக்க வேண்டும் – புரட்சிக்கு முன்னரே நீக்கிட வேண்டும் எனத் தம் பட்டறிவால், இலெனின் கண்டார்.**

**எனவே, "All Oppressed Nations Unite!" என்னும் இன்னொரு புரட்சிமுழக்கத்தையும் இலெனின் தந்தார்.**

**இம்மூன்று முழக்கங்களும் பெரும்பான்மையான இரஷ்ய மக்களை – இலெனினின் பின்னால் அணி திரட்ட உதவின.**

*1917 நவம்பரில், இரஷ்யாவில், 10 நாள்கள் போராட்டத்தில் சோசலிசப் புரட்சியை அவர் வென்றெடுத்தார்.*

*"நிரந்தரமான புரட்சி - அனைத்து நாடுகளி லும் ஒரே நேரத்தில் புரட்சி வரவேண்டும்" என்ற கோட்பாட்டை முன்னிறுத்தியவர், மேதை டிராட்ஸ்கி.*

*ஆனால், ஒரே நாட்டில் கூட, சோசலிசப் புரட்சி வெல்லும் என்பதை இரஷ்யாவில் செயல்படுத் திக் காட்டிவிட்டார், மாமேதை இலெனின்.*

*எப்படி? எதனால்?*

*அன்றைய இரஷ்யாவில் இருந்த குறு, சிறு விவசாயிகள் "குலாக்குகள்" (Kulaks) அல்லர் எனக் கண்டார். அவர்கள் ஆண்டில் ஆறு மாதம் வேளாண் பண்ணையில் கூலிக்கு வேலை செய்யும் பகுதிநேர வேளாண் தொழிலாளர்கள் எனக் கண்டு கொண்டார். அவர்களும் உழைக்கும் வகுப்பு என்பதை உறுதி செய்து கொண்டார்.*

*அதேபோல், அன்றைய இரஷ்யாவிலிருந்த குறு, சிறு வணிகர்கள் "பூர்ஷ்வாக்கள்" அல்லர் எனவும், அவர்கள் சொந்தமாக ஊதியம் தேடும் உதிரிப் பாட்டாளிகள் எனவும் கண்டார். அவர்களும் இணைந்தனர். சோசலிசப் புரட்சி வென்றது.*

*சமூகஅமைப்பு நிலைமைகள் எல்லா நாடு களிலும் ஒரே தன்மையில் இருக்காது - இருக்க முடியாது-வேறு வேறு வடிவங்களில் இருக்கும் எனவும் துல்லியமாகச் சொன்னார், மாமேதை இலெனின். அது என்ன?*

**"மார்க்சியத் தத்துவம், அறிவியல் பார்வைக் கான அடிக்கல்லைப் பதித்துள்ளது.**

**சோசலிசவாதிகள் அந்தத் தத்துவத்தை எல்லாத் துறைகளிலும்–எல்லாத் திசைகளிலும் வளர்த்தெடுக்க வேண்டும்.**

**பொதுவான வழிகாட்டுக் கொள்கைகளைத்தான் மார்க்சியத் தத்துவம் கொண்டுள்ளது. குறிப்பாக, இங்கிலாந்தில் அந்தத் தத்துவத்தைச் செயல்படுத்து வதைப்போல் அன்றி வேறுபட்ட தன்மையில்தான் பிரான்சில் செயல்படுத்தமுடியும்; பிரான்சில் செயல் படுத்துவதைப் போலன்றி வேறுபட்ட தன்மையில் தான் செர்மனியில் செயல்படுத்தமுடியும்; இரஷ்யா வில் செயல்படுத்துவதுபோலன்றி வேறுபட்ட தன்மை யில்தான் செர்மனியில் செயல்படுத்தமுடியும். இரஷ் யத் தொழிலாளர் வர்க்கத்தின் இறுதி இலக்கு இரஷ் யாவில் தொழிலாளர் வர்க்கம் அதிகாரத்தைக் கைப் பற்றுவதும், அங்கு ஒரு சோசலிச சமுதாயத்தைக் கட்டமைப்பதுமே ஆகும்."** (லெனின்–1899).

மேலேகண்ட செய்திகளின் வெளிச்சத்தில் பெரியாரியம், அம்பேத்கரியம் பற்றிய கோட் பாடுகளை - கொள்கைகளை இனி பார்ப்போம்.

*1919 செப்டம்பர் முதல் 1925 நவம்பர் 22 வரை காங்கிரசுக் கட்சியிலிருந்த ஈ.வெ.ரா., காந்தியாரின் நிர்மாணத்திட்டங்களான 1) கள் ஒழிப்பு, 2) கதர் உற்பத்தி-விற்பனை, 3) தீண்டாமை ஒழிப்பு, 4) ஒவ்வொரு மக்கள் அமைப்பிலும் பார்ப்பனர் அல்லாதாருக்கு 50 விழுக்காடு பங்கு என்பவற்றை, காங்கிரசின் வேலைத் திட்டங்களாகக் கொள்ளப்பட முயன்றார்.*

*கள் ஒழிப்புக்காகத் தமிழகத்தில் - இந்தி யாவில் முதன்முதலாகப் போராடியவர் அவர்; கதர் வளர்ச்சி-விற்பனை இரண்டிலும் முதலாவது உழைப்பாளியாக இருந்தவர் அவர்.*

*"கோவில்களில் தீண்டாமையை ஒழித்திட காங்கிரசு திட்டம் தீட்ட வேண்டும்" என்ற அவருடைய*

*தீர்மானத்தை ஏற்கமறுத்தது, திருப்பூரில், 1922 திசம்பரில் நடந்த தமிழ் நாட்டுக் காங்கிரசு மாநாடு.*

*மாநாட்டுத் தலைவர் வாசுதேவ அய்யர், எஸ்.சீனிவாச அய்யங்கார், சி.இராசகோபாலாச்சாரியார் ஆகியோர் அத்தீர்மானத்தை வன்மையாக எதிர்த்தனர்.*

**அம் மாநாட்டுத் தீர்மானங்களை விளக்கி அன்று மாலையில் நடைபெற்ற காங்கிரசுப் பொதுக்கூட்டத்தில், ''மநுநீதி, இராமாயணம் இரண்டும் நால்வருண சமூக அமைப்பையும், தீண்டாமையையும், பாதுகாக்கின்றன. இவற்றை எரிக்கவேண்டும்'' என்று, முதன் முதலாக ஈ.வெ.ரா பேசினார்.**

*1924இல் திருவண்ணாமலையில் நடை பெற்ற தமிழ்நாடு காங்கிரசு மாநாட்டிலும், பெல்காமில் நடைபெற்ற அகில இந்தியக் காங்கிரசு மாநாட்டிலும் - ''பார்ப்பனரல்லாதாரின் சிறப்பான ஆட்சியை நீதிக்கட்சி நடத்துகிறது. அவர்களின் சாதனைகளைப் பொறுக்க மாட்டாத காங்கிரசுப் பார்ப்பனத் தலைவர்களின் சூழ்ச்சிகளைச் சுட்டிக் காட்டிக் காங்கிரசை அம்பலப்படுத்தினார்.*

*22-11-1925இல் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற காங்கிரசு மாநாட்டில் மயிலாடுதுறை எஸ்.இராமநாதனும் தானும் இணைந்து முன்மொழிந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் தீர்மானத்தை காங்கிரசு மாநாடு தள்ளுபடி செய்தது. வெகுண்டெழுந்த ஈ.வெ.ரா, தம் குழுவினருடன் அன்றே - அங்கேயே காங்கிரசிலிருந்து வெளியேறினார்.*

*சென்னைமாகாணத்தில் நடைபெற்ற 1926 தேர்தலில் நீதிக் கட்சி தோல்வி அடைந்தது.*

*''பார்ப்பனரல்லாதாருக்குச் சுயமரியாதை - தன்மதிப்பு உணர்ச்சிகளை ஊட்டவேண்டும்'' என விரும்பிய ஈ.வெ.ரா, 5-12-1926 முதல் தொடர்ந்து முயன்றார். எம்.டி.சுப்பிரமணிய முதலியார், ஏ.இராமசாமி முதலியார், பனகல் அரசர், ஊ.பு.அ.சௌந்தரபாண்டியன் ஆகியோரின் ஒத்துழைப்புடன், 26-12-1926இல், மதுரையில் ஏ.பி.பாத்ரோ தலைமையில் நடைபெற்ற ''நீதிக்கட்சி பத்தாவது மாகாண மாநாட்டில்'', பார்ப்பனரல்லாதார் விடுதலைக்காக ''சுயமரியாதை இயக்கம்'' தோற்றுவிக்கப்பட்டது.*

*அவ்வியக்கத்தின் முதன்மையான கொள்கைகள் நான்கு.*

**1. பார்ப்பனரல்லாதவரைவிடப் பிறவியால் உயர்ந்தவராக நினைக்கும் எவரையும் பார்ப்பனரல்லாதார் வீட்டு நிகழ்ச்சிகளுக்கு அழைக்கக்கூடாது. 2. தீண்டாமை ஒழிப்பு, 3. பெண்ணடிமை ஒழிப்பு, 4. கதர் வளர்ச்சி.**

**1927 சூலையில் பெங்களூரில் காந்தியாரை ஈ.வெ.ரா.வும், எஸ்.இராமநாதனும் நேரில் கண்டு பேசிய பிறகு, கதர் ஒழிப்பு, காங்கிரசு ஒழிப்பு, நால் வருண ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு, பெண்ணடிமை ஒழிப்பு இவற்றில் தீவிர நாட்டங்கொண்டார், ஈ.வெ.ரா.**

*1927இல் திருநெல்வேலியில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் ''சமதர்மம்'' பற்றி முதன்முதலாக ஈ.வெ.ரா. பேசினார்.*

*1928 முதல் பார்ப்பனப் புரோகித ஒழிப் பில் தீவிர நாட்டங் கொண்டார் ஈ.வெ.ரா.*

*இந்தியாவில் 1947 வரையில் இந்துக்கள் 70%; முஸ்லிம்கள் 25%; சீக்கியர்கள் 2.0%; கிறித்துவர்கள் 2%; பார்சி, சமணர், பவுத்தர் 1% இருந்தனர். இந்துக்களுள் தென்னாட்டில் பார்ப்பனர் 3%, பார்ப்பனர் அல்லாதார் 85%.*

*மொத்த இந்துக்களில்-வருணத்துக்கு வெளியே உள்ள தீண்டப்படாதார் 12% பேராக இருந்தனர்.*

**தென்னாட்டு இந்துக்கள், மநுநீதிப்படி, பார்ப்பனர் – சூத்திரர் என்கிற இரண்டு வருணத்தாராகவும்; தீண்டப்படாதார் ஆகிய 3 பிரிவினர்களாகவும் உள்ளனர்.**

**பார்ப்பனர், சூத்திரர் தங்களுக்குள் சமூக சமத்துவம் இல்லாதவர்கள். தீண்டப்படாதார் – பாப்பனர், சூத்திரர் இரு சாதியராலும் சமூக சமத்துவ உரிமை மறுக்கப்பட்டவர்கள்.**

*26-12-1925இல், இந்தியாவில் நிறுவப்பட்ட இந்தியப் பொதுவுடைமைக் கட்சி, மேலே கண்ட சமூக அமைப்பில், பெரும்பான்மையின ரான சூத்திரர் என்கிற இழிந்த சாதியாகவும்; பெரிய சிறுபான்மையினரான தீண்டப்படாதாராகவும், வேத - ஆகம - சுருதி - ஸ்மிருதி -இதிகாச நெறிப்படியும், இந்துச் சட்டப்படியும் வைக்கப்பட்டு, அப்படியே நடத்தப்படுவது பற்றி என்ன நிலைப்பாட்டை மேற்கொண்டது? ஏன் மேற் கொள்ளவில்லை? என்பது சிந்தனைக்கு உரியது.*

*இந்தியாவில், புத்தருக்குப்பின் முதன்முதலாக வேதம், ஆகமம் - சாத்திரம் - வருண சாதி, உள் சாதி - கோத்திரம் - மூடநம்பிக்கை இவற்றை 1865இல் கண்டனம் செய்தவர் வள்ளலார் இராமலிங்க அடிகள். அடுத்து மகாத்மா சோதிபா புலே (1870), அ.வேங்கடாசல நாயகர் (1882), அயோத்தி தாசப் பண்டிதர் (1906), ஈ.வெ.ரா.(1922), மேதை பி.ஆர்.அம்பேத்கர் (1927).*

இவற்றையெல்லாம் பின்னுக்குத் தள்ளும் தன்மையில், பேரறிஞர் காரல் மார்க்சு, இந்தியாவைப் பற்றி, 10-5-1853இல், முதலாவதாக எழுதிய கட்டுரையில் – மநு ஸ்மிருதியில் பத்தாவது அத்தியாயத்தில்

**உள்ள சூத்திரத்தை மேற்கோளாகக்காட்டி, "மேல்சாதி மக்களுக்குக் கீழ்ச்சாதி மக்கள் எந்தப்பயனும் கருதாமல் தொண்டூழியம் செய்யும்படி விதிக்கப்பட்டிருப்பதையும் - அப்படிச்செய்தால் மோட்சம் அடையலாம் என அவர்கள் நம்புகின்றனர்" என்று கூறப்பட்டிருப்பதையும் கண்டனம் செய்துள்ளார் என்பது போற்றத் தக்கதும் பாராட்டத்தக்கதும் ஆகும்.**

("மூலதனம்-" CAPITAL - VOLUME-II)

*மேதை அம்பேத்கர், 1927இல் மகத் குளத்தில் தீண்டப்படாதார் குடிநீர் அள்ளும் போராட்டத்தின்போது, மநுஸ்மிருதிக்குத் தீயிட்டார்.*

*பெரியார் ஈ.வெ.ரா. நால்வருணம், பழக்க வழக்கச் சட்டம் இவற்றுக்குப் பாதுகாப்புத் தரும் இந்திய அரசமைப்புச்சட்ட விதிகளைத் தனித்தாளில் அச்சிட்டு, 26.11.1957இல் எரித்தார்; 3000 பேரைச் சிறைக்கு அனுப்பினார். இவ்வளவையும் நேரில் கண்ட பொதுவுடைமைக் கட்சியின் கற்றறிந்த தலைவர்கள் இவற்றைப் பற்றி என்ன நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர் என்று சொல்லாதது வருத்தத்திற்கு உரியது.*

*மேலும், வகுப்புவாரி விகிதாச்சார இட ஒதுக்கீடு என்கிற கொள்கைப்படி, சென்னை மாகாணத்தில் உள்ள பெரும்பான்மையான மக்களுக்கு அவரவர் வகுப்புக்கு ஏற்ற விகிதாச்சாரம் அளிக்கவேண்டும் என்பதை வலியுறுத்தியும்; நீதிக்கட்சி ஆட்சியினர் சமூகத்திலும் கல்வியிலும் பின்தங்கிய சாதிகளுக்குத் தனி இடஒதுக்கீடு கொடுக்காத அநீதியைக் கண்டித்தும், 1934-இல் "குடி அரசு" இதழில் ஈ.வெ.ரா. கண்டனம் தெரிவித்து எழுதினார்.*

*அவருடைய மேலேகண்ட கோரிக்கையை, 1935-இல், நாகை முருகேசன் அவர்களால் வெளியிடப்பட்ட "புதுஉலகம்" என்னும் ஏட்டின் முதலாவது இதழில் மாமேதை ம.சிங்கார வேலர் கண்டனம் செய்தார்.*

**"சாதியை ஒழிக்கவேண்டும் என்கின்ற ஈ.வெ.ரா. சாதியின்பேரால் இடஒதுக்கீடு கேட்பது முரணானது" என்று கூறியே, அப்படிக் கண்டித்தார்.**

*நீதிக்கட்சி ஆட்சி அளித்த வகுப்புவாரி உரிமைக் கொள்கையின்படி பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார், இசுலாமியர், கிறித்துவர் மற்றும் ஆங்கிலோ இந்தியர், ஆதித் திராவிடர் என்கிற வகுப்புகளின் அடிப்படையில்தான் ஒதுக்கீடு வழங்கப்பட்டதே அன்றி, ஒவ்வொரு உள்சாதிக்கும் சாதி அடிப்படையில் வழங்கப் படவில்லை என்பதை, மேதை சிங்காரவேலர் அறிந்திருந்தார் எனினும், பிறழ உணர்தல்* (Perverted understanding) *என்கிற கண்ணோட்டத்தில், மேதை சிங்காரவேலர் அப்படிக் கருதினார் என்றே நாம் நினைக்கிறோம். நிற்க.*

**இந்தியாவில் "நாடு", "நாட்டரசு", "இந்திய அரசு" என்று இருப்பது "ஒற்றை இந்திய அரசு" மட்டுமே.**

**இந்திய அரசுத்துறைப் பணிகளில் சென்னை மாகாண எல்லைக்குள் இருக்கிற எல்லாத் துறைகளிலும் பார்ப்பனருக்கு 16%, பார்ப்பனர் அல்லாதாருக்கு 44%, இசுலாமியருக்கு 8%, கிறித்தவருக்கு 8%, ஆதித்திராவிடர்களுக்கு 16%, இதர சிறுபான்மை மதத்தினருக்கு 8% என்கிற விகிதத்தில் பெரியார் ஈ.வெ.ரா. வும், பொப்பிலி அரசரும் சர்.ஏ.இராமசாமி முதலியாரும், டாக்டர் ஏ.கிருஷ்ணசாமியும் முயன்று, 1935இல், பெற்றுத் தந்தனர். இந்த வரலாற்று உண்மையை எல்லாக் கட்சியினரும் மலைமீது நின்று சொல்லக் கடமைப்பட்டவர்கள் ஆவர்.**

*அடுத்து, இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் அமைக்கப்பட்ட போர்க்கால அமைச்சரவையில் ஒரு கேபினட் அமைச்சராக மேதை அம்பேத்கர் அமர்த்தப்பட்டார். அவர் அனைத்திந்திய அரசுப்பணிகளில் பட்டியல் வகுப்பினருக்குத் தனியே 12.5% ஒதுக்கீடு கோரி, அரசப் பிரதிநிதியிடம்* (Viceroy) *கோரிக்கை வைத்தார். அதைக் கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டு, மய்ய அரசின் அலுவலகங்களில் மட்டும் 11-8-1943இல் 8.33% விழுக்காடு பட்டியல் வகுப்பினருக்கு இடஒதுக்கீடு செய்து ஆணை அளிக்கப்பட்டது.*

*இவ்வளவு நீண்டகாலமாக இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டும், இன்றைய இந்தியாவில் 19% உள்ள பட்டியல் வகுப்பினருக்கு, 2016 கணக்குப்படி, 13% அளவுக்கே இந்திய அரசுப் பணிகளில் இடம்பெற்று உள்ளனர் என்பது மிகமிக இழிந்த நிலையாகும்.*

*"கல்வியிலும் சமூகத்திலும் பிற்படுத்தப்பட்டோர் யார்?" என்கிற பட்டியல் இல்லாத நிலையில், அப்படி ஒரு பட்டியலை இந்திய அரசு உருவாக்கித்தரவேண்டும் என்று விரும்பி, மேதை அம்பேத்கர் 1949ஆம் ஆண்டில் 340 ஆம் விதியை எழுதினார். அரசமைப்புச் சட் டம் 26-1-1950இல் நடப்புக்கு வந்துவிட்ட நிலையில், பார்ப்பனரான பிரதமர் பண்டிதர் நேரு, 1953 இல் தான் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலை உருவாக்கும் ஆணையத்தை அமைத் தார். காகா கலேல்கர் தலைமையில் அமைந்த அந்த ஆணையம் தமது அறிக்கையையும் பரிந் துரைகளையும் 1955இல் பிரதமர் நேருவிடம் அளித்தது.*

*காகா கலேல்கர் உருவாக்கிய உள்சாதிப் பட்டியலில் - பார்ப்பனர்களில் ஏழைகளாக உள்ள பிரிவினரையும் அறிக்கையில் சேர்க் காத காரணத்தால், அந்த அறிக்கையை உடனே அமல்படுத்த பிரதமர் நேரு முன்வரவில்லை.*

*ஆனால், குதிரை கீழே தள்ளியதும் அல்லாமல் குழியும் பறித்த கதையாக, பிரதமர் நேரு 1961 மே திங்களில் மய்ய அரசு அமைச்சரவையைக் கூட்டி, ''காகா கலேல்கர் அளித்த சாதிப் பட்டியலை மய்ய அரசு ஏற்கவில்லை எனவும், பிற்படுத்தப்பட்டோருக்கு மய்ய அரசில் இடஒதுக்கீடு கொடுக்கப்படமாட்டாது எனவும்'' தீர்மானம் நிறைவேற்றினார். அத்துடன் நில்லாமல் அப்போதைய எல்லா மாநில முதலமைச்சர்களுக்கும் கமுக்க மடல்* (Demmy Official Letter) *எழுதி, ''எக் காரணத்தைக் கொண்டும் அந்தந்த மாநிலப் பிற்படுத்தப்பட்டோருக்குச் சாதி அடிப்படையில் இடஒதுக்கீடு கொடுக்கக்கூடாது'' என்றும், ''அவர்களுக்கு ஏதாவது உதவிஅளிக்க விரும்பினால் பணஉதவி அளிக்கலாம்'' என்றும் அறிவுறுத்தினார். இந்தச் செய்தியை, அப்போதே முதலமைச்சர் கு.காமராசர், கோட்டையில் வே.ஆனைமுத்துவிடம், மறைமுகமாகத் தெரிவித்தார். இது உண்மை.*

**மண்டல் குழு அமைக்கப்பட மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியும், பீகார் மாநிலப் பிற்படுத்தப்பட்டோர் பேரவையும் இணைந்து முறையே வே.ஆனைமுத்து, இராம் அதேஷ் சிங் எம்.பி ஆகியோர் தலைமையில் பீகாரில் போராடியது ஒன்றே காரணமாகும்.**

*மண்டல் குழு அறிக்கையை நாடாளுமன்றத்தில் வெளியிடுவதற்கும், நடப்புக்குக் கொண்டு வருவதற்கும் அப்போதைய உள்துறை அமைச்சர். கியானி ஜெயில்சிங்கிடம் 4-3-1982இல் வே.ஆனைமுத்து வைத்த கோரிக்கையை ஏற்று, அன்று மாலையே ''மண்டல்குழு அறிக்கையை அரசு நாடாளுமன்றத்தில் வெளியிடும்'' என்று அறிவித்தார். அதைப் பொறுத்துக்கொள்ள முடியாத பிரதமர் இந்திராகாந்தி, கியானி ஜெயில் சிங்கை உள்துறை அமைச்சர் பதவியிலிருந்து விலக்கி, எந்த அதிகாரமும் இல்லாத குடிஅரசுத் தலைவராக ஆக்கினார்.*

*எதிர்பாராத தன்மையில், 1989இல் பிரதமராகப் பொறுப்பேற்ற வி.பி.சிங் அவர்கள், எம் ஒடுக்கப்பட்டோர் பேரவையின் அனைத்திந்தியத் தலைவர் இராம் அவதேஷ்சிங், மாநிலங்களவையில் அன்றாடம் இடஒதுக்கீடு பற்றி எழுப்பிய கோரிக்கையை நெஞ்சில் கொண்டு, 6-8-1990இல், மய்ய அரசின் வேலையிலும் பொதுத்துறை நிறுவனங்களின் வேலையிலும் பிற்படுத்தப்பட்டோருக்கு 27% ஒதுக்கீடு அளித்து அறிவித்தார். அது 1994இல் தான் நடப்புக்கு வந்தது.*

**இந்திய அளவில் 57% உள்ள - எல்லா மதங்களையும் சேர்ந்த பிற்படுத்தப்பட்டோருக்கு அனைத்திந்திய ஆட்சிப் பணியில் 2016ஆம் ஆண்டின் கணக்குப்படி 6% மட்டுமே இடஒதுக்கீடு கிடைத்துள்ளது என்பது எல்லோரும் நாணப்படவேண்டிய நிலையாகும்.**

*இவ்வளவு செய்திகளையும் நேரில் கண்டறிந்துள்ள பொதுவுடைமைக் கட்சியினர், நாடாளுமன்றத் தேர்தல் அரசியலில் ஈடுபட்டபின்னரும், அனைத்திந்திய அளவில் இது பற்றி இணக்கமான ஒரு கொள்கையினையும் வேலைத்திட்டத்தினையும் மேற்கொள்ளாதது தவறு அல்லவா என்று, அவர்கள் எல்லோரும் சிந்திக்கவேண்டுமாய் அன்புடன் வேண்டுகிறோம்.*

*மேலும், தமிழகத்தில் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் தனிப்பட்ட முயற்சியால், பிற்படுத்தப்பட்டோருக்கான ஒதுக்கீடு 50 விழுக்காடாக உயர்த்தப்பட்ட இடஒதுக்கீட்டுக் கொள்கை பற்றியும்; கேரளாவில் 5 உள்சாதிகளுக்கு மட்டும் தனித்தனியாக விகிதாசார இடஒதுக்கீடு கல்வியிலும் வேலையிலும் அளிக்கப்படுவதையும், மீதமுள்ள 68 உள்சாதிகளுக்கு குறிப்பிட்ட விழுக்காடு இடஒதுக்கீடு அளிக்கப்படுவதையும் தெரிந்திருந்தும்-பொதுவுடைமைக் கட்சிகளின் ஆட்சிகள் நடந்த மேற்கு வங்கத்திலும், திரிபுராவிலும், மற்ற வட மாநிலங்களிலும் பிற்படுத்தப்பட்டோருக்கு 57% ஏன் வழங்கப்படவில்லை என்கிற வினாவை, அவரவர் சார்ந்த கட்சியின் இந்திய தேசியக் குழுவில் எழுப்பாமல் போனதும் - இருப்பதும், அந்தக்குறை நீக்கப்படப் பாடுபடாமல் போனதும் - இருப்பதும் சரியா என்பது பற்றியும்; இதில் இந்தியச் சமூக அமைப்பைப் பற்றிய மார்க்சிய-லெனினியர்கள் என்ன நிலைப்பாடு கொண்டுள்ளனர் என்பதையும் இனியேனும் வெளியிடுமாறும்; முன்னேறிய பிரிவினர் உள்ளிட்ட நான்கு வகுப்புகளுக்கும் விகிதாசார வகுப்புவாரி இடப்பங்கீடு வந்து சேர இணக்கமான நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வருமாறும் வேண்டுகிறோம்.*

**5-1-2017** **- வே.ஆனைமுத்து**

# மாணவர்கள்-இளைஞர்களின் தமிழர் உரிமை மீட்புப் போராட்டமும் தமிழக அரசு கட்டவிழ்த்துவிட்ட கண்டனத்துக்குரிய வன்முறையும்

- க. முகிலன்

1917ஆம் ஆண்டு இரஷ்யாவில் நடந்த அக்டோபர் புரட்சி வரலாற்றில் நிலையான இடம்பெற்றுவிட்டது. அதுபோல் தமிழ்நாட்டில் 2017இல் மாணவர்கள் - இளைஞர்கள் நடத்திடிய 'தைப்புரட்சி'யும் தமிழக உரிமை மீட்பு வரலாற்றில் நிலையானதோர் இடத்தைப் பெறும்.

பாரதிய சனதா, காங்கிரசு ஆகிய தேசிய அரசியல் கட்சிகளும், அ.தி.மு.க., தி.மு.க. உள்ளிட்ட தமிழக அரசியல் கட்சிகளும் வெறும் ஏழு நாள்கள் மட்டும் நடந்த போராட்டமாக இதை ஒதுக்கிவிடமுடியாது. ஏனெனில், தில்லியில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது காங்கிரசும், பாரதிய சனதா கட்சியும் தமிழர்களின் உணர்வுகளுக்கும் உரிமைகளுக்கும் எதிராக வஞ்சகமாகச் செயல்பட்டதையும், தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் வெறும் வாய்வீரம் பேசிக்கொண்டு தமிழர்களின் உரிமைகள் பறிக்கப்படுவதைத் தடுக்கத் தவறியதையும் ஏழு நாள் போராட்டக் காலத்தில், இளைஞர்கள் அம்பலப்படுத்தினார்கள். கட்சி அரசியல் என்கிற குறுகிய வட்டத்தை உடைத்தெறிந்து, மக்களுக்கான அரசியலுக்காகத் தமிழர்கள் அணிதிரள வேண்டும் என்கிற உரத்த சிந்தனையை விதைத்திருக்கிறார்கள்.

1965இல் மாணவர்கள் தலைமையேற்று நடத்திய இந்தி எதிர்ப்புப் போராட்டம் தமிழக அரசியலையே புரட்டிப் போட்டது. சுதந்தரம் பெற்றது முதல் ஆட்சியில் இருந்த காங்கிரசுக் கட்சி மீண்டும் தமிழகத்தில் ஆட்சிக்கு வரமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டது. 2017 தைப்புரட்சி அரசியலில் வெளிப்படையான மாற்றங்களை உண்டாக்காவிட்டாலும், ஓர் உள்ளுறை ஆற்றலாக அரசியலை வழிநடத்தும் என்பது உறுதி.

பாத்திரத்தில் உள்ள தண்ணீர் ஒரு குறிப்பிட்ட கொதி நிலையில் தன்மீது மூடப்பட்டுள்ள தட்டைத் தூக்கி எறியும். ஆனால், சமூகத்தில் மக்கள் மனங்களில் அழுத்தம் பெற்றுவரும் உணர்வுகள் எப்போது வெடித்துக் கிளர்ந்தெழும் என்று அறுதியிட்டுக் கூற முடியாது. ஆயினும், பெரிய நீர்த்தேக்கத்தின் அணையில் ஓரிடத்தில் ஏற்படும் சிறு பிளவால், அணையை உடைத்துக் கொண்டு நீர் பெருவெள்ளமாய்ப் பாய்கிறது. அதுபோல், பல ஆண்டுகளாகத் தமிழர்களின் உணர்வுகள் நசுக்கப்பட்டதாலும், உரிமைகள் பறிக்கப்பட்ட



தாலும் படிப்படியாகப் பெருகிவந்த உள்ளக் குமுறல்கள், வாடிவாசலில் சல்லிக்கட்டுக் காளைகள் சீறிப் பாய்வது போல், சல்லிக் கட்டுக்கான தடையை நீக்கு என்கிற போராட்டத்தின் வாயிலாக வீறுகொண்டு வெளிப்பட்டன.




பீட்டா அமைப்புத் தொடுத்த வழக்கில், உச்ச நீதிமன்றம் 2014 மே 7 அன்று தமிழ்நாட்டில் சல்லிக் கட்டு நடத்துவதற்குத் தடைவிதித்தது. அப்போதுதான் நரேந்திர மோடி தலைமையில் நடுவண் அரசில் பா.ச.க. தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்தது. உச்சநீதிமன்றத்தின் தடை காரணமாக 2015, 2016 ஆம் ஆண்டுகளில் தை மாதத் தில் உலகப்புகழ்பெற்ற அலங்காநல்லூரிலோ வேறு எந்த இடத்திலோ சல்லிக் கட்டை நடத்த முடியவில்லை.

எனவே 2016ஆம் ஆண்டின் தொடக்கம் முதலே நடுவண் அரசும், மாநில அரசும் உச்சநீதிமன்றம் சல்லிக்கட்டு நடத்த விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கிட உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சல்லிக்கட்டு ஆர்வலர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். நடுவண் அரசில் துணை அமைச்சராக உள்ள பொன். இராதாகிருட்டிணன் 2017 தை மாதம் சல்லிக்கட்டு உறுதியாக நடக்கும் என்று உறுதிமொழி அளித்துவந்தார். முன்னாள் முதலமைச்சர் செயலலிதா வின் மறைவுக்குப்பின் முதலமைச்சரான ஓ. பன்னீர் செல்வமும் சல்லிக்கட்டு நடைபெறும்; நம்பிக்கையுடன் இருங்கள் என்று கூறி வந்தார்.

ஆனால் நடுவண் அரசும், தமிழக அரசும் சல்லிக் கட்டு நடைபெறுவதற்கான திட்டவட்டமான முயற்சிகளை மேற்கொள்ளவில்லை. தாம் வஞ்சிக்கப்பட்டதாக உணர்ந்த மதுரை மாவட்டத்தின் அலங்காநல்லூர் மக்கள் தடையை மீறி, 16.1.2017 திங்கள் கிழமை அன்று சல்லிக்கட்டு நடத்திட திரண்டனர். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளி லிருந்தும் மக்கள் அங்கு சென்றனர். அலங்காநல் லூரில் சில காளைகள் அவிழ்த்து விடப்பட்டன. தடையை மீறிச் சல்லிக்கட்டு நடத்தியதற்காக அலங்காநல்லூரில் 224 பேரைக் காவல் துறையினர் கைது செய்தனர். இச்செய்தி இணையதளம் மூலம் இளைஞர்களிடையே காட்டுத் தீயாகப் பரவி அவர்களைக் கொந்தளிக்கச் செய்தது.

அதன் விளைவாக, அடுத்த நாள் 17.1.2017 செவ்வாய்க்கிழமை காலையே சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருப்பூர், சேலம், வேலூர் என தமிழகம் முழுவதும் மாணவர்களும் இளைஞர்களும் போராட்டத்தில் குதித்தனர். தன்னெழுச்சியாக உருவான இப்போராட்டத்தில் சல்லிக்கட்டுக்கான தடையை நீக்கவும், பீட்டா அமைப்புக்குத் தடைவிதிக்கவும் முழக்க மிட்டனர். ஒருநாள் போராட்டமாக ஓய்ந்துவிடும் என்று அரசு நினைத்தது. ஆனால் மாணவர்களும் இளை ஞர்களும் இரவு பகலாக அங்கேயே தங்கினர். சல்லிக் கட்டு நடத்துவதற்கான சட்டம் பிறப்பிக்கப்படும் வரை தொடர்ந்து போராடுவோம் என்று அறிவித்தனர்.

சென்னை மெரினா கடற்கரையில் 17.1.2017 அன்று இரண்டாயிரம் பேருடன் தொடங்கிய போராட் டத்தில் அடுத்த நாளே இலட்சக்கணக்கில் இளைஞர்கள் குழுமினர். மெரினா கடற்கரையில் மட்டுமின்றி, சென்னையில் பல்வேறு இடங்களில் சல்லிக்கட்டுக் கான தடையை நீக்கக் கோரி போராட்டங்கள் நடந்தன. எல்லா மாவட்டங்களிலும் போராட்டம் தீவிரமடைந்தது. எனவே முதலமைச்சர் பன்னீர்செல்வம் 18.1.2017 புதன்கிழமை அன்று மாலை தில்லி சென்றார்.

19.1.2017 அன்று பிரதமர் மோடியைச் சந்தித்து நடுவண் அரசு அவசரச் சட்டம் இயற்றுமாறு கோரினார். உச்சநீதிமன்றத்தில் சல்லிக்கட்டு தொடர்பான வழக்கு இருப்பதால், நடுவண்அரசு அவசரச் சட்டம் கொண்டு வர முடியாது என்று கூறி தன் பொறுப்பைத் தட்டிக் கழித்தார். உச்சநீதிமன்றம், காவிரி வழக்கில் நடுவண் அரசு உடனடியாக காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்க வேண்டும் என்று அறிவுறுத்திய போது, அவ்வாறு கூறுவதற்கு உச்சநீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை என்று கூறியவர்தான் இந்த மோடி.

ஆயினும் மோடி, தமிழக அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு நடுவண் அரசு துணை நிற்கும் என்று முதலமைச்சர் பன்னீர்செல்வத்திடம் தெரிவித்தார். அன்று மாலையே நடுவண் அரசின் ஒப்புதலுடனும், குடியரசுத் தலைவரின் ஒப்புதலுடனும் தமிழ்நாடு அரசே சல்லிக்கட்டு நடத்துவதற்கான ஒரு அவசரச் சட்டத்தைப் பிறப்பிப்பது என்று முடிவு எடுக்கப்பட்டது. 20.1.2017 அன்று அவசரச் சட்ட வரைவு நடுவண் அரசின் ஒப்புதலுடன் குடியரசுத் தலைவருக்கு அனுப் பப்பட்டது. 21.1.2017 சனிக்கிழமை மாலை தமிழக ஆளுநர் அவசரச் சட்டத்தைப் பிறப்பித்தார்.

இதற்கிடையில், சென்னை மெரினா கடற்கரையில் 19.1.2017 அன்று 5 இலட்சம் மக்கள் திரண்டனர்; அதற்கு அடுத்த நாள் இந்த எண்ணிக்கை 7 இலட்ச மாக உயர்ந்தது. தமிழகத்தின் ஒட்டுமொத்த மக்களும் தங்கள் ஆதரவைத் தெரிவிக்கும் வகையில் 20.1.2017 வெள்ளிக்கிழமை முழு அடைப்புப் போராட்டம் நடத்தினர். மாவட்டங்களில் பல்லாயிரக்கணக்கில் இளைஞர்கள் கூடினர். இலட்சக்கணக்கில் குடும்பம் குடும்பமாக மெரினா கடற்கரையில் திரண்டனர். இப்போராட்டத்தின் மய்யக் களமாக மெரினா கடற்கரை விளங்கியது.

சல்லிக்கட்டுக்கான தடையை நீக்க வேண்டும் என்பதை முதன்மைப்படுத்தியே இதுவரை தமிழகம் கண்டிராத அளவில் மக்கள் போராட்டக் களத்தில் திரண்டனர் என்பது பொதுவான உண்மையாகும். 1930இல் காந்தியார் உப்பை மய்யப்படுத்தி மக்களை அணிதிரட்டினார். அதன் நோக்கம் ஆங்கில அரசுக்கு எதிரான சுதந்தரப் போராட்டமாக இருந்தது. அதுபோல் சல்லிக்கட்டை மய்யப்படுத்தி மக்கள் திரண்டபோதிலும், பல ஆண்டுகளாக நடுவண் அரசு தமிழர்களின் உணர்வுகளைப் புறக்கணித்தது, தமிழர்களின் - தமிழ் நாட்டின் உரிமைகளைப் பறித்தது குறித்து மக்களிடம் கனன்று கொண்டிருந்த சினம் சல்லிக்கட்டுப் போராட் டத்தினூடாக வெடித்துக் கிளம்பியது.

2009இல் இந்தியப் படையின் துணையுடன் ஈழத்தில் முள்ளிவாய்க்காலில் ஒரு இலட்சம் ஈழத் தமிழர் சிங்களப் படையினரால் படுகொலை செய்யப் பட்டமையும், அதற்குப் பின்னரும் சிங்களப் பேரின வாத அரசுக்கு ஆதரவாக இந்திய அரசு செயல்பட்ட மையும், காவிரி, முல்லைப் பெரியாறு, பாலாறு, மீத்தேன், கெயில் முதலான பிரச்சனைகளில் தமிழர் களின் நலன்களை நடுவண் அரசு புறக்கணித்தமை யும், 2014இல் மோடி ஆட்சிக்கு வந்தபின் கூர்மைப் படுத்தப்பட்ட இந்தி ஆதிக்கம், சமற்கிருத திணிப்பு, இந்துத் துவ ஆதிக்கம், புதிய கல்விக் கொள்கை, மருத்துவப் படிப்புக்கான நுழைவுத் தேர்வு, பணமதிப்பு நீக்க நடவடிக்கை முதலானவை நடுவண் அரசின் மீது தமிழர்கள் மனக்கொதிப்படையச் செய்திருந்தன. எனவே மெரினா போராட்டக் களத்தில் மோடிக்கு எதிராகவும், நடுவண் அரசின் ஆதிக்கத்துக்கு எதிராகவும் முழக் கங்கள் எழுப்பப்பட்டன. தமிழர்களை இனி அடக்கி ஒடுக்க முடியாது என்பதன் வெளிப்பாடாக ‘‘தமிழன்டா’’, ‘‘தமிழச்சிடா’’ என்கிற கொடிகள் பறந்தன; இவையே முழக்கங்களாக ஒலித்தன. தமிழர்களின் உரிமைகளை மீட்டெடுக்க முடியாத நிலையில் இந்திய ஆட்சியில் ஏன் இருக்க வேண்டும்? தமிழ்நாடு தனிநாடாகிட வேண்டும் என்றும் பேசினர்.



*இளம் பெண்களைத் தடியடி நடத்தி அப்புறப்படுத்தும் ஆண் காவலர்கள்*

அதேபோன்று ஆதரவளிக்க வந்த தமிழக அரசியல் கட்சிகளையும் தவிர்த்தனர். கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டதாக இப்போராட்டத்தை முன்னெடுத்தால் தான் அனைத்துத் தரப்பு மக்களின் முழு ஆதரவும் கிடைக்கும் என்று போராட்டக்கள இளைஞர்கள் கருதினர். மேலும் தமிழர்களின், தமிழ்நாட்டின் உரிமைகள் பறிக்கப்பட்ட போது தடுத்து நிறுத்தத் தவறிய தி.மு.க., அ.தி.மு.க. ஆட்சிகள் மீதும் வெறுப்பு கொண்டிருந்தனர்.

ஆயினும் மெரினா கடற்கரையில் பல இலட்சம் மக்கள் ஆர்த்தெழுந்து திரண்ட போதிலும், இளைஞர் கள் இப்போராட்டத்தை அமைதியான முறையில், கண்ணியம் கட்டுப்பாடுடன் உலகமே வியக்கும் வண்ணம் நடத்தினர். எல்லா வகையிலும் தங்களைத் தாங்களே ஒழுங்குபடுத்திக் கொண்டனர். ஆண், பெண் என இளைஞர்கள் தோளோடு தோள் நின்று இரவும் பகலுமாகப் போராட்டக் களத்தில் கூடியிருந்த நிலையிலும் பாலியல் தொடர்பான நெறிபிறழ்ந்த சிறு நிகழ்வும் உண்டாகாமல், தோழர்களாகவே இருந்தனர். திருட்டு என்பதே நடக்கவில்லை. மது அருந்திய ஒரு இளைஞன்கூட களத்தில் இல்லை. போதிய கழிப்பறை வசதிகள் இல்லை என்பதையும் பொருட்படுத்தாது கடுங்குளிரையும் வெய்யிலையும் இன்னல் எனக் கருதாது, இளைஞர் பட்டாளம் போராடியமை பொது மக்களை வியப்பிலும் மகிழ்ச்சியிலும் ஆழ்த்தியது. வாக்கு வங்கி அரசியல் கட்சிகளையோ அதிர்ச்சியில் உறைய வைத்தது.

21.1.2017 சனிக்கிழமை மாலை சல்லிக்கட்டை நடத்துவதற்கான அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதாக அறிவிப்பு வெளிவந்தது. போராட்டக் களத்தில் இருந்த இளைஞர்களிடம் இந்த அவசரச் சட்டம் தற்காலிகமான தாக இருக்குமோ என்கிற எண்ணம் எழுந்ததால், நிரந்தரத் தீர்வு வேண்டும் என்ற முழக்கத்தை முன் வைத்தனர்.

அய்ந்து நாள்களாக அல்லும் பகலும் பேரெழுச்சி யுடன் போராடிக் கொண்டிருந்த இளைஞர்களிடம், இந்த அவசரச் சட்டம் சல்லிக்கட்டு நடத்துவதற் கான தடைகளை எவ்வாறெல்லாம் தகர்த்துள்ளது என்று தமிழக அரசு விளக்கிக் கூறத் தவறிவிட்டது. குறைந்தது முதலமைச்சர் பன்னீர்செல்வம் காணொளிப் பதிவு மூலம் விளக்கியிருக்கலாம். அவ்வாறு செய் திருந்தால் போராட்டம் அமைதியான முறையில் முடிவுக்கு வந்திருக்கும்.

மாறாக, சல்லிக்கட்டுக்கான தடையை நீக்கும் வகையில் பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டத்திற்கான புகழையும் பெருமையையும் அ.தி.மு.க. ஆட்சி தனக்கு மட்டுமே உரியதாக்கிக் கொள்ள முனைந்தது. அவசரச் சட்டத்தின் கூறுகளைக்கூட தமிழக அரசு வெளியிடாமல் கமுக்கமாக வைத்திருந்தது. சனிக் கிழமை மாலை அவசரச் சட்ட அறிவிப்பு வெளியான வுடன் முதல மைச்சர் பன்னீர்செல்வம் ஞாயிறு (22.1.2017) காலை அலங்காநல்லூரில் சல்லிக்கட் டைத் தொடங்கி வைக்கப் போவதாகவும், காளை கள் துள்ளிக்குதிக்கும் என்று செய்தியாளர்களிடம் கூறிவிட்டு மதுரைக்குப் பறந்தார். அதேபோன்று ஞாயிறு காலை பல்வேறு இடங்களில் அமைச் சர்கள் சல்லிக்கட்டு நிகழ்ச்சியைத் தொடங்கி வைக் கவும் அரசும், அ.தி.மு.க.வினரும் ஏற்பாடுகளை விரைந்து செய்தனர்.

இளைஞர்களின் வீறார்ந்த போராட்டத்தின் அழுத் தத்தின் காரணமாகத்தான் தமிழக அரசும் நடுவண் அரசும் நெருக்கடிக்குள்ளாகி, ஒரே நாளில் அவசரச் சட்டம் பிறப்பிக்கும் முடிவை எடுத்தன. ஆனால் இந்த வெற்றிக்கனியை அ.தி.மு.க. அரசு தட்டிப்பறித்துத் தனதாக்கிக் கொள்ள முனைந்தது. அதனால் அ.தி.மு.க. அரசின் இந்த அடாவடித்தனத்தை முறியடிக்கும் வகையில், அலங்காநல்லூரில் முதல மைச்சர் பன்னீர்செல்வம், நத்தம் கோவில்பட்டியில் முன்னாள் அமைச்சர் நத்தம் விசுவநாதன், புதுக் கோட்டை மாவட்டத்தில் ராப்பூசலில் அமைச்சர்கள் விசயகுமார், பாண்டியராசன், ஆத்தூர் கூலமேட்டில் அமைச்சர் எடப்பாடி கே.பழனிச்சாமி ஆகியோர் தொடங்கி வைப்பதாக இருந்த சல்லிக்கட்டு நிகழ்ச்சிகளைப் போராட்டக்காரர்களும் பொது மக்களும் ஒன்றுதிரண்டு நடக்கவிடாமல் செய்துவிட்டனர். இதைத் தனக்கும் அமைச்சர்களுக்கும் நேர்ந்த அவமானமாகக் கருதிய முதலமைச்சர் பன்னீர்செல்வம் 22.1.2017 ஞாயிறு இரவு, தமிழகம் முழுவதும் ஆறு நாள்களாக அமைதி யாக இளைஞர்களால் நடத்தப்பட்டு வந்த போராட் டத்தைக் காவல்துறை மூலம் வன்முறையை ஏவி ஒடுக்குவது என்று முடிவு செய்தார்.



*மெரினாவில் நடுக்குப்பத்தில் மீன் சந்தையின் 150 கடைகளைக் காவல் துறையினர் தீயிட்டுச் சாம்பலாக்கினர்*

அத்திட்டத்தின்படி 23.1.2017 திங்கள்கிழமை விடியற்காலை சென்னை மெரினா கடற்கரையில் பத்தாயிரம் காவல் துறையினர் குவிந்தனர். மெரினா கடற்கரைக்கு எவரும் வரமுடியாதபடி வழிகள் அனைத் தும் அடைக்கப்பட்டன. இரவில் சில ஆயிரம் பேர்களாகத் தங்கி இருந்த இளைஞர்களிடம் காவல் துறையினர், ‘‘அவசரச் சட்டம் சல்லிக்கட்டுக்கான தடையை நீக்கி விட்டது; அதனால் உடனே கலைந்து செல்லுங்கள்’’ என்று ஒலிபெருக்கி வாயிலாக அறிவித்தனர். அமைச் சர்கள் செய்ய வேண்டிய வேலையைக் காவல்துறை அதிகாரிகள் கையில் எடுத்துக் கொண்டனர். வழக்கறி ஞர்கள், மற்றவர்களுடன் கலந்துபேசி முடிவு எடுக்க

எங்களுக்கு நான்கு மணிநேரம் இடைவெளி கொடுங்கள் என்று மாணவர்கள் கேட்டனர். பிறகு இரண்டு மணி நேரமாவது கொடுங்கள் என்று காவல்துறை உயர் அதிகாரியிடம் கூறினர். காவல் துறை ஆணவத்துடன் இதை ஏற்க மறுத்து அவர்களை விரட்டியடித்தது. ஒரு பகுதி இளைஞர்கள் கலைந்து சென்றனர்.

இதன் எதிர்வினையாக ஐஸ்அவுஸ் காவல் நிலையம் முன் இருந்த இருசக்கர வாகனங்கள் தீயிட்டு எரிக்கப் பட்டன. அதன்பின் சென்னையின் பல்வேறு பகுதி களில் இளைஞர்களும் பொதுமக்களும் சாலைகளில் மறியலில் ஈடுபட்டனர். காவல்துறையினர் போராட் டத்தை ஒடுக்குவது என்ற பெயரில் பொதுமக்களின் வாகனங்களை அடித்து நொறுக்கினர்; தீயிட்டுக் கொளுத்தினர். காவல் துறையினரின் அட்டூழியச் செயல்கள் வீடியோக் காட்சிகள் மூலம் அம்பலமாயின. மெரினா கடற்கரையில் உள்ள நடுக்குப்பம் மீனவர்கள் திங்கட்கிழமை போராடிக் கொண்டிருந்த இளைஞர் களுக்குத் தண்ணீரும் உணவும் கொடுத்தார்கள் என்ற காரணத்தால், நடுக்குப்பத்தில் மீன் சந்தையின் 150 கடைகளையும், வீடுகளையும் காவல்துறையினர் எரித்துச் சாம்பலாக்கினர். வீடுகளுக்குள் புகுந்து பெண் களைக் கண்மூடித்தனமாகத் தாக்கினர். ஆண்களைக் கைது செய்தனர்.

இளைஞர்களின் போராட்டத்தை அரசு வேண்டு மென்றே திட்டமிட்டு வன்முறை மூலம் ஒடுக்க முனைந் ததன் நோக்கம், மாணவர்களோ, இளைஞர்களோ இனி எதிர்காலத்தில் போராடுவதற்குப் அஞ்சக்கூடிய மனநிலையை உண்டாக்குவதே ஆகும்.

திங்கள் மாலை ஓய்வுபெற்ற நீதிபதி அரிபரந் தாமன் மெரினா கடற்கரையில் இருந்த சில ஆயிரம் போராட்டக்காரர்களிடம் அவசரச் சட்டம் குறித்து விளக்கிப் பேசிய பின் பெரும்பாலானவர்கள் கலைந்து சென்றனர். மாணவர்கள் - இளைஞர்களின் தொடர் போராட்டத்தின் நெருக்கடி காரணமாக 25.1.2017 அன்று சட்டமன்றத்தில் நிறைவேற்றப்படுவதாக இருந்த அவசரச் சட்டம் 23.1.2017 திங்கள் மாலை 5 மணிக்குச் சிறப்புக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

23.1.2017 திங்கள் கிழமை மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களில் காவல்துறையினரின் விளக்கத்தை ஏற்று, போராட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். ஆனால் மதுரை, கோவை, ஈரோடு போன்ற இடங்களில் காவல்துறை வன்முறையை ஏவியும், கைது செய்தும் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது.

ஏழு நாள்கள் நடந்த வரலாற்றுச் சிறப்புமிக்க இளைஞர்களின் போராட்டத்தைத் தமிழக அரசு பேச்சுவார்த்தை மூலம் முடிவுக்குக் கொண்டு வராமல், காழ்ப்புணர்ச்சியுடன் காவல்துறையின் வன்முறை மூலம் ஒடுக்கியது கண்டிக்கத்தக்கது ஆகும்.

தமிழகம் முழுவதும் கைது செய்யப்பட்ட அனை வரையும் விடுதலை செய்ய வேண்டும். நடுக்குப்பத் தில் காவல்துறை எரித்த மீன் கடைகளை அரசே கட்டித்தர வேண்டும். நடுக்குப்பம் மற்றும் அம்பேத்கர் பாலம் பகுதிகளில் வீடுகள் தாக்கப்பட்டதற்கு இழப்பீடு வழங்க வேண்டும். பதவியில் உள்ள உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையில் விசாரணைக்குழு அமைக்க வேண்டும்.

எது எப்படியாயினும் வரலாற்றில் இடம்பெற்று விட்ட இளைஞர்களின் வீறார்ந்த இந்த மாபெரும் போராட்டம் தமிழர், தமிழர் உரிமை என்கிற சிந்த னையை மக்களிடம் கொழுந்துவிட்டெரியச் செய்துள்ளது. அரசியல் கட்சிகளுக்கு ஒரு எச்சரிக்கையையும் விடுத் திருக்கிறது.

## வள்ளுவர் ஆண்டை வழங்கிடுக!

*தமிழர் விழாவும் தமிழர்புத் தாண்டும்*
*அமிழ்தினிய தைம்முதலில் ஆமே! - உமிழும்*
*வடவர் திணித்த வருடத்தைக் கொள்ளல்*
*மடமையே ஆகும் மதி.*

*பொங்கல் விழாவும் பொதுமைத் தமிழாண்டும்*
*தங்குமே தைம்முதலில் தாமென்று - மங்கா*
*மறைமலையார் சொன்னார்! மதியுடையார் ஏற்றார்!*
*குறையில்லை என்றும் குறி.*

*தைம்முத லாண்டே தமிழர்க்குப் புத்தாண்டாம்!*
*ஐயமே யின்றி அறிந்திடு! - பொய்ப்புனைவாம்*
*பார்ப்பனர் ஆண்டுதனைப் பாராதே! எஞ்ஞான்றும்*
*ஈர்ப்பன எந்தமிழாண்டு.*

*அஞ்சல் எழுதுகையில், ஆவணம் ஆக்குகையில்,*
*எஞ்சா தெழுதி இயற்றுகையில் - துஞ்சாது*
*வள்ளுவ ராண்டை வழங்கிடுக! இல்லையேல்*
*எள்ளுவர் பின்னோர் இகழ்ந்து!*

*ஆங்கில ஆண்டை அலுவலிற் கொண்டிடினும்*
*நீங்காது கொள்க நின்ஆண்டை! - தீங்கான*
*பார்ப்பன ஆண்டைப் பகராதீர்! என்றென்றும்*
*வேர்ப்பன வேண்டா! விடுக.*

*தந்தைப் பெரியார், தமிழ்நிறை நற்சான்றோர்*
*தந்தது வள்ளுவர் தம்ஆண்டே! - செந்தமிழா,*
*தாயை மதியாமல் தந்தைசொற் கேளாமல்*
*பேயை மதிப்பரோ? பேசு.*

- **சிலம்பூர்க்கிழான்,** கல்லக்குறிச்சி

# நெறியற்ற ஊடகங்களா?

- குட்டுவன்

உலகளவில் இன்றும் செய்தி ஊடகங்கள் அன்றாட அரசியல் சமூக பொருளாதாரக் கருத்துக்களை முன்மொழி கின்றன. உலகளவில் ஏறக்குறைய 15 ஆயிரம் தொலைக் காட்சி நிறுவனங்கள் ஒளி ஊடகங்களை இயக்கி வருகின்றன. இந்தியாவில் பல இந்திய மொழிகளில் 832 தொலைக்காட்சி நிறுவனங்கள் உள்ளன.

இந்தி, மராத்தி, குஜராத்தி, உருது, கன்னடம், தெலுங்கு, தமிழ், வங்கம், மலையாளம் ஆகிய மொழிகளில் நாளேடுகள், வாரஏடுகள், மாதமிருமுறை இதழ்கள், மாத இதழ்கள் வெளி வருகின்றன. உலகளவிலும் இந்தியாவிலும் அதிக எண்ணிக் கையில் விற்பனையாகும் ஏடு "டைம்ஸ் ஆப் இந்தியா" என்ற ஆங்கில நாளேடாகும். ஒளி ஊடகங்களில் பெரும்பாலும் சினிமா, கேளிக்கை, விளையாட்டு நிகழ்ச்சிகள் முதன்மைப்படுத் தப்படுகின்றன. பொது அறிவு, அறிவியல் சார்ந்த கருத்துகள் போன்றவை இரண்டாம் அல்லது மூன்றாம் நிலையில்தான் உள்ளன. ஒளி ஊடகங்களின் வளர்ச்சியும் மிகப் பெரிய அளவில் மக்களிடத்தில் செல்வாக்குப் பெற்று வந்தாலும் இந்த ஊடகங்களைப் பெரும்பாலும் கேளிக்கைகளின் கருவியாகத் தான் மக்கள் பார்க்கிறார்கள்.

அமெரிக்காவின் நியுயார்க் டைம்ஸ், டைம்ஸ் வார இதழ் ஆகியன அரசியல் கருத்துக்களை நடுநிலையோடு வெளி யிடுவதில் முதலிடம் வகிக்கின்றன. ஊடக முதலாளிகளுக்கும் ஊடகத்தில் பணியாற்றுகிற செய்தியாசிரியர்களுக்கும் அடிக்கடி மோதல்கள் ஏற்படுவதுண்டு. ஊடக செய்தியாளர்களின் அமைப்பு மேலைநாடுகளில் தனித்த அடையாளங்களுடன் செயல்படுகின்றன. அமெரிக்கா அரசு செய்த வாட்டர் கேட் ஊழல், குடியரசுத் தலைவர் கிளிண்டன் மேற்கொண்ட ஒழுக்கம் தவறிச் செய்த முறைகேடுகள் ஆகியவற்றை வெளிக் கொணர்ந்தனர். அமெரிக்க அரசியலின் கேடுவிளைவிக்கும் செயல்களை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்தன. இதனால் செய்தி ஆசிரியர்களின் செல்வாக்கு அமெரிக்கா நாட்டில் பெருகி வருகிறது. தனித்துவமானதாக இருக்கிறது. இவர்கள் எந்தவித அரசியல் அழுத்தங்களுக்குப் பணியாமல் பணியாற்றுவதிலும் பல ஊழல் தொடர்பான செய்திகளை வெளியிடுவதிலும் முழு அளவில் சுதந்திரமாக இயங்குகிறார்கள். ஆனால் பெரும் பாலான ஊடகங்கள் முதலாளித்துவ நிறுவனங்களால்தான் நடத்தப்படுகினறன. தமிழ்நாட்டில் தினத்தந்தி 82 இலட்சம் வாசகர்களுடன் முதலிடம் பெற்றுள்ளது. மலையாள மனோரமா 88 இலட்சம் வாசகர்களைத் தொடர்ந்து பெற்று வரும் ஏடாக இந்தியாவில் முதல் நிலையில் உள்ளது.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்..

காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீதான் இந்தப்
பாரிடைத் துயில்வோர் கண்ணிற்
பாய்ந்திடும் எழுச்சி நீ தான்!
ஊரினை நாட்ட இந்த
உலகினை ஒன்று சேர்க்கப்
பேரறிவாளர் நெஞ்சிற்
பிறந்த பத்திரிகைப் பெண்ணே.
அறிஞர்தம் இதய ஓடை
ஆழநீர் தன்னை மொண்டு
செறிதரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக்
குவலயம் ஓங்கச் செய்வாய்
நறுமண இதழ்ப்பெண் ணேஉன்
நலம்காணார் ஞாலம் காணார்.

என்று பாடிச் செய்தி ஊடகங்களுக்கு இலக்கணம் வகுத் தார். ஆனால் இந்தியாவில் ஊடகங்கள் முதலாளிகளின் கைகளி லும் ஆசிரியர் பொறுப்பு உயர்சாதியினர் ஆதிக்கத்திலும் இருப் பதினால் ஆதிக்கச் சக்திகளின் செய்திகளும் அதனைத் தொடர்ந்து வெளியிடப்படும் கருத்துகளும் முன்னிலைப்படுத்தப்படு கின்றன. மக்களாட்சியில் நான்காவது தூணாகப் போற்றப் படுகிற ஊடகம் உயர்சாதி - ஒரு சார்பு நிலையால் மேலை நாடுகளைப் போல் மக்களின் மதிப்பைப் பெற இயலவில்லை.

ஆளுங்கட்சி அளிக்கும் விளம்பரத்திற்காகவும் மற்ற சலுகை களுக்காகவும் நடுநிலையோடு ஊடகங்கள் இயங்கவில்லை என்ற கருத்து நாள்தோறும் உறுதிப்படுத்தப்படுகிறது. டைம்ஸ் நௌ என்ற (Times Now) ஒளி ஊடகத்தில் தலைமை ஆசிரிய ராகப் பணியாற்றிய அர்னாப் கோசுவாமி பல ஊழல்களையும் அன்றாட அரசியல் தொடர்பான செய்திகளையும் தனது உரத்த குரலில் நாள்தோறும் ஒலித்தவர். அண்மையில் அந்த ஊடகத்திலிருந்து வெளியேறி ஒரு முதன்மையான கருத்தை வெளியிட்டுள்ளார். இந்தியாவில் உள்ள அனைத்து ஊடகங் களும் நடுநிலையோடு நேர்மை யோடு செயல்படவில்லை என்று உறுதிபடக் கூறுகிறேன் என்று கோசுவாமிக் கூறி யுள்ளார். தான் தொடங்கும் புதிய ஒளி ஊடகம் உறுதியாக நேர்மையுடனும் நடுநிலையுடனும் செயல்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார். இது ஊடகங்களின் ஒரு சார்பு நிலைப்பற்றி ஒரு மூத்த ஊடக ஆசிரியரின் ஒப்புதல் வாக்குமூலம் என்றே எடுத்துக் கொள்ளலாம்.


ஆங்கில ஒளி ஊடகங்கள் பெரும்பாலும் வடநாட்டுச் செய்திகளையே பெரிதுபடுத்தி வெளியிடுகின்றன. இந்தியாவில் தென்னாடு என்ற ஒன்று இருப்பதாகவே அவர்கள் கருது

வதில்லை. பெரும்பான்மையான மக்களின் சமூக, பொருளாதார, பண்பாட்டுப் பிரச்சினைகளைத் தொடர்ந்து இருட்டடிப்பு செய்து வருகின்றன. குறிப்பாக இடஒதுக்கீடு பிரச்சினை, இந்தி, சமஸ்கிருதத் திணிப்பு, தலித் இன மக்கள் மீது நடத்தப்படும் கொடுந்தாக்குதல்கள் கார்ப்பரேட் சாமியார்களின் அட்டகாசங்கள் பற்றிய செய்திகளை மறைத்தும் அவைகளை முதன்மைச் செய்திகளாக வெளியிடாமலும் விவாதிக்காமலும் தவிர்த்து விடுகின்றன. அச்சு ஊடகங்களும் இதே போக்கினைத்தான் பின்பற்றி வருகின்றன. அம்பானி-நியூஸ் 18 தொலைக்காட்சி நிறுவனத்தை வாங்கி இந்தி உட்பட பல மொழிகளில் ஒளிபரப்பில் அம்பானிக் குழுமம் தனது ஆதிக்கத்தைப் பெருக்கி வருகிறது.

வணிகம் வளருவதற்காக தொடக்கக் காலக் கட்டத்தில் சிறந்த ஆசிரியர்களை வைத்து ஊடகத்தை வளர்த்தெடுப்பதும் பின்பு அவர்களைத் துரத்திவிடுவதும் முதலாளிகளின் வாடிக்கையாகிவிட்டது. ஏற்கெனவே தொழில் குழுமங்களில் தலைமைப் பதவிகளிலும் உயர் அலுவலர்களை நினைத்த நேரத்தில் வேலையை விட்டு நீக்குகிற போக்கினை நாம் காண்கிறோம். இப்படிப்பட்ட முதலாளிகள் செய்தி ஊடகங்களினுள் நுழைந்தால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதைத் தற்போது நடைபெற்று வரும் பல நிகழ்வுகள் மெய்ப்பித்து வருகின்றன. அரசியலில் இருப்பவர்கள் ஊடகத்துறையைச் சார்ந்தவர்களைப் பகைத்துக் கொள்வதற்கு பயப்படுகிறார்கள். இந்தக் கருத்தை மெய்ப்பிக்கும் விதமாக கடந்த 20 ஆண்டுகளாக செய்தி ஊடகங்கள் எப்படி செயல்பட்டுள்ளன என்பதை எல்டுமென் (Eldmen Trust) அறக்கட்டளையால் 38 நாடுகளில் நடத்தப்பட்ட கள ஆய்வு உறுதிபடுத்தியுள்ளது. 2017இல் உலக பொருளாதார மையம் (World Econimic Forum Survey of Indian Media) அந்தக் கள ஆய்வினை-ஆய்வறிக்கையை வெளியிட்டுள்ளது.

இவ்வறிக்கையில், ‘‘மக்களின் நம்பிக்கையை இந்திய ஊடகங்கள் இழந்து வருகின்றன. உலகிலேயே நம்பகத் தன்மையை இழந்த ஊடகங்கள் வரிசையில் இரண்டாம் இடத்தை இந்திய ஊடகங்கள் பெற்றுள்ளன. பொய்யான கதைகளைப் பரப்புவது, தவறான கருத்துகளைத் திணிப்பது போன்ற காரணங்களால் இந்த நிலையை ஊடகங்கள் எட்டியுள்ளன’’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சமூக ஊடகங்கள் (Social Media) வந்த பிறகு முழுமையாக ஒளி அச்சு ஊடகங்கள் கடைபிடிக்கும் இரட்டை நிலைப்போக்குத் தோலுரிக்கப்பட்டுள்ளது. தங்களை ஊடகச் செய்தியார்கள் என்று அழைத்துக்கொள்பவர்கள் சில நன்மைகளைப் பெறுவதற்காகச் சில அரசியல் கட்சிகளின் தொடர்பாளராகவே மாறிவிட்டனர் என்றும் இந்த ஆய்வறிக்கையில் வெளி வந்துள்ளது.

1940ஆம் ஆண்டு கோவிந்த ரானடேவின் 101ஆவது பிறந்தநாள் விழாவில் பேசுவதற்காகத் தயாரிக்கப்பட்ட




உரையை 1943ஆம் ஆண்டு அண்ணல் அம்பேத்கர் வெளியிட்டார். அவ்வுரையில் ரானடே காந்தி ஜின்னா ஆகிய தலைவர்களை ஒப்பிட்டு சிறந்த ஆய்வுரையை வழங்கியுள்ளார். காந்தியாக இருந்தாலும் ஜின்னாவாக இருந்தாலும் தனி மனித வழிபாடு மிகவும் ஆபத்தானது. நாட்டை நேசிப்பவன்தான் உண்மையான தேசியவாதி. தலைவர்களை விட நாடு பெரிது என்று ஒரு நாள் மக்கள் உணரும் காலம் வரும். காந்தி ஜின்னா போன்றவர்களை வழிபடும் போக்கும் நிற்கும் என்றும் அவ்வுரையின் அறிமுகத்தில் குறிப்பிட்டிருந்தார். குறிப்பாக ஊடகங்களைப் பற்றி மிகத் தெளிவான பார்வையை அறிஞர் அம்பேத்கர் வைத்திருந்தார். அவ்வுரையில் இதழியல் இந்தியாவில் ஒரு காலத்தில் தொழிலாகப் போற்றப்பட்டது. இன்று அது வணிகமயமாக மாறிவிட்டது. (Jourbalism India was Hce a rHfessiH. It as bHw oecHme a trade- Oaoa Saho ímodkar writbg abd Ëeecesï VHl.1 age 227.) அதற்கு அறநெறி கிடையாது. மக்களுக்கு அறிவுரை வழங்கும் பொறுப்பும் கிடையாது.

எவ்வளவு உயர் பதவியில் இருந்தவராக இருந்தாலும் அவர்களைப் பற்றிக் கவலைப்படாமல் எந்தவித உள்நோக்கமும் இல்லாமல் சமுதாயத்தின் பொது நோக்கோடு செய்திகளை வெளியிடுவதுதான் உண்மையான இதழியலின் கடமை

யாகும். ஒரு கதாநாயகரை ஏற்றுக்கொண்டு அவரை வழிபடும் நோக்குதான் தங்களது முதன்மையான கடமையாக எடுத்துக் கொள்கிறது. அதனடிப்படையில் வரும் செய்திகள் உணர்வைத் தூண்டுகின்றன. செயல்நோக்கம் இல்லாதவர்களின் ஆசை களுக்குத் தீனி போட்டுச் செயல்நோக்கக் கருத்துகளைப் புறக்கணிப்பது பொறுப்பற்றவர்களின் உணர்வுகளைத் தூண்டி, பொறுப்புள்ள மக்களின் எண்ணங்களுக்கு முறையீடு செய்யத் தவறுவதுமே ஊடகங்களின் செயலாக உள்ளது. (Journalism in India was once a profession. It has now become a trade- Baba Sahib Ambdkar writing and speeches, Vol.1 Page 227.).

லார்ட் செல்சுபரி என்பவர் இங்கிலாந்தில் உள்ள இதழியல் துறை பற்றிக் கூறும்போது, அலுவலகச் சிறுவர்களுக்காக அலுவலகச் சிறுவர்கள் எழுதும் கருத்துதான் என்று குறிப்பிட்டார். இந்திய இதழியலோ இதைவிடத் தரந்தாழ்ந்தது என்றே அழைக்கலாம். தாங்கள் வழிபடும் கதாநாயகர்களைத் தூக்கி பிடிக்கத்தான் முரசு கொட்டுகிறார்கள். சில பேர் விதிவிலக்காக இருக்கலாம். அவர்கள் மிகச் சிலரே. அவர்களின் கருத்துக்கள் ஒருபோதும் கேட்கப்படுவதில்லை. தங்களுடைய செல்வாக்கினை உயர்த்திப் பிடிப்பதற்காகப் பெரும் முதலாளிகளிடமிருந்தும் பெரும் வணிகர்களிடமிருந்தும் உதவி பெறுகிறார்கள். அமெரிக்கக் குடியரசுத் தலைவராக இருந்த ரூஸ்வெல்ட் அமெரிக்க மக்களைப் பார்த்துக் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை காண வேண்டும் என்று வேண்டு கோள் விடுத்தார். நம்மை யார் ஆட்சி செய்வது செல்வமா? மனிதனா? நம்மை வழி நடத்துவது பணமா? அறிவா? பொது அவைகளில் படித்தவர்களும் நாட்டுப் பற்றுள்ளவர்களும் இருக்க வேண்டுமா? அடிமைத்தனத்தை வலியுறுத்தும் முதலாளித்துவ நிறுவனங்கள் இருக்க வேண்டுமா?

இவ்வித அறிவுபூர்வமான உரையாடல்களை இணைத்து ஒப்பீடு செய்வது ஆகியன குறித்து இந்திய ஊடகங்களின் பொறுப்புகளையும் கடமைகளையும் அம்பேத்கர் சுட்டியுள் ளார். அன்று அம்பேத்கர் குறிப்பிட்டதைத்தான் இன்று அர்னாப் கோசுவாமி வெளிப்படுத்துகிறார். அறிஞர் அம்பேத்கர் குறிப் பிடும் காலத்திலாவது அரசியலில் நாயகர்கள் இருந்தார்கள். இன்றோ எழுதிக் கொடுத்தால் பேசும்-இயக்கினால் இயங்கும்-அழச் சொன்னால் அழும்-உடனே சிரிக்கச் சொன்னால் சிரிக்கும் அரசியல் பொம்மைகளைத்தான் நாம் காண்கிறோம். மேலும் அறிவற்ற பண்பாடற்ற திறமையற்ற போலிகளை நடிகர்-நடிகைகளை உயர்த்திப் பிடிக்க ஊடகங்கள் செய்து வரும் சாகசங்களைப் பார்க்கும்போது இந்த ஊடகங்கள்தான் மக்களாட்சி முறையைக் காப்பாற்றும் நான்காவது தூண் என்று நம்பவேண்டுமோ?


தமிழ் ஊடகங்களில் அறிவியல் வலியுறுத்தும் கருத்துகள் ஒரு புறம். அறியாமையை வளர்த்தெடுக்கும் சோதிட நட்சத்திரக் கணிப்புகள் ஒரு பக்கம். அறிஞர்களின் கருத்துகள் ஒரு பக்கம்; நாட்டை இருளில் ஆழ்த்தும் சாமியார்களின் அறிவுரை ஒரு பக்கம் என எல்லாவற்றிலும் ஒரு வணிக நோக்கே மேலோங்கி நிற்கிறது. குறிப்பாகப் பள்ளிகளில் அறிவியல் பயிலும் மாண வர்கள் வானியலைப் பற்றி படிக்கிறார்கள். சூரியக் குடும்பத் தைச் சுற்றித்தான் மற்ற கோள்கள் வலம் வருகின்றன என்று படிக்கிறார்கள். பூமியும் ஒரு கோள் என்று தெரிந்து கொள் கிறார்கள். ஆனால் சூரியனை ஒரு கோளாக வானியல் கருத வில்லை. சந்திரன் பூமியின் ஒரு துணைக்கோள். சந்திரனை அடிப்படையாகக் கொண்டு ராசியைக் குறிக்கிறார்கள். இது அறிவியலுக்கு முழுவதும் புறம்பானது என்பதை மாணவர்கள் அறிந்து கொள்கிறார்கள். இதைத் தெரிந்து கொண்டு செய்தி ஊடகங்களையும் ஒளி ஊடகங்களையும் கண்ணுற்றால் இவர்கள் திட்டமிட்டுக் காசுக்காகத் திணிக்கும் மூடநம்பிக்கை என்பதை உணர்வார்கள். இவ்வாறு அறிவியலுக்குப் புறம்பாக மக்களை மூடநம்பிக்கையில் ஆழ்த்தும் கருத்துகளைத் திணிப்பது எவ்வளவு காலம் நீடிக்குமோ? இதுதான் ஊடக விபச்சாரமோ?

500 ரூபாய் 1000 ரூபாய் உயர் மதிப்புப் பண நீக்கம் தொடர்பாக வெளிநாட்டு ஊடகங்கள் நடுநிலையோடும் நேர்மையோடும் கருத்துக்களை வெளியிட்டன. ஆனால் பெரும்பான்மையான மக்கள் அன்றாடம் படும் அல்லல்களை அரசு அறிவிப்புகளால் ஏற்பட்டு வரும் குழப்பங்களையும் சுட்டி, நடுவண் ஒன்றிய அரசு இந்நடவடிக்கையில் முழுத்தோல்வியை அடைந்துவிட்டது என்று கூறுவதற்குப் பெரும்பான்மையான ஒளி அச்சு ஊடகங்கள் முன்வரவில்லை. பட்டிமன்றம் போன்று ஒட்டியும் வெட்டியும் பேசுவதற்குப் பேச்சாளர்களை அழைத்து மக்களைத் திசை திருப்பும் பணியிலேயே முன்னிற்கின்றன. மதவாத சக்திகள் போடும் ஆட்டங்களைக் கண்டுகொள்ளாமல் புறக்கணிக்கின்றன. ஊடக நெறி என்பதே இல்லாமல் செய்து விட்டனர்.

ஆனால் சமூக வலைத்தளங்கள் இன்று கருத்து பரி மாற்றத்தில் பெரும் தாக்கத்தை மக்களிடம் ஏற்படுத்தி வரு கின்றன. ஒளி அச்சு ஊடகங்களை மீறி விஞ்சி வலைத்தளங் கள் வழியாகக் கருத்துகள் பரவுகின்றன. முதன்மையான சமூக வலைத்தளங்களின் கருத்துகளை ஒளிஅச்சு ஊடகங்கள் தினமும் வெளியிட்டு தங்களின் இலாப வேட்டையைத் தொடரு கின்றன.

இவ்வித நெறியற்ற, முறையற்ற ஊடக நடவடிக்கைகளைக் கண்டுதான் அமெரிக்காவின் 'டைம்' இதழ் நரேந்திர மோடியிடம் இந்திய ஊடகங்கள் தாய்ப்பால் குடிப்பதைப் போல கேலிச் சித்திரத்தை வெளியிட்டது. இந்திய ஊடகங்களின் மிக மோசமான இழிநிலையைச் சுட்டிடும் கருத்துப்படம் வெளியிட்ட பின்பும் இனிமேலாவது இந்த முதலாளித்துவ அச்சு ஒளி ஊடகங்கள் தன்மானத்தைப் பெறுமா?

# மற்றவர் நலமாக வாழ மனதார விரும்பியவர் - மாசற்ற பெரியாரின் தன்மானக் கொள்கை மறவர் சிதம்பரம் வீ. இராசாப்பிள்ளை மறைந்தார்!



சிதம்பரத்தில் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்த தன்மான மறவர் - புரட்சிப் பாடல்களைப் புனைபவர் - தெரிந்தவர் உயர உயரப் போவதை நினைத்து நினைத்துப் புகழ்பவர் சிதம்பரம் வீ. இராசாப்பிள்ளை அவர்கள். அன்னார் 17.1.2017 செவ்வாய் அன்று சிதம் பரத்தில் தம் இல்லத்தில் மறைவுற்றார் என்பதை, கடலூர் மாவட்ட மா.பெ.பொ.க. செயலாளர் பா.மோகன் உடனே எனக்கு அறிவித்தார்.

நானும் வீ. இராசாப்பிள்ளையும் ஒரு சாலை மாணக் கர்கள் அல்லர்; உடன்பயின்ற வகுப்புத் தோழர்களும் அல்லர். ஆனால் 1946 சூன் முதல் 1949 முடிய, சிதம்பரம் ‘‘வன்னியர் வளர்ச்சிக் கழகம்’’ என்னும் தங்கும் விடுதி யில், ஒன்றாக உறங்கிய உடனுறைந்த தோழர்கள் ஆவோம். அவர் என்னைப் போன்றே 92ஆம் அகவையை அண்மையில் எட்டியவர். ஒத்த அகவையால் - ஏற்ற தன்மானக் கொள்கையால்-மாந்தநேயத்தால் என்பால் பெரிய அளவில் ஈர்ப்புக் கொண்டவர்.

அந்த மூன்று ஆண்டுகளிலும் எங்களைவிட மூத்த வர்களான பழைய நல்லூர் பால குருசாமி, வடக்கு மாங்குடி அ. பாலகிருட்டிணன், கு. கிருட்டிணசாமி மற்றும் புது. ஏக. தாமோதரன் அங்கு வருவர். கொள்கை பற்றி அளவளாவுவதை ஒவ்வொரு நாளும் நாங்கள் செய்தோம்.

நான், பி.டி. செயராமன்; பின்னாளில் நளன்புத்தூர் பூவராக. பழநியப்பன் ஆகியோர் பல்கலைக்கழகத்தில் படிப்பதை எண்ணியெண்ணி மகிழ்ந்தவர், இராசாப் பிள்ளை. அன்று நாங்கள் அத்திபூத்தாற்போல், பெரிய படிப்பாளிகள்.

எண்ணற்ற தி.க. தோழர்களுடன், வீ. இராசாப் பிள்ளை உணர்வு அளவில் ஒன்றித்துப் பணியாற்றியவர். 1990க்குப் பிறகு, மனதார மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியில் இணைத்துக் கொண்டு, சிதம்பரம் நகரச் செயலாளராகத் திகழ்ந்து கட்சிக்கு ஆக்கம் சேர்த்தவர்.

என்போன்ற தோழர்களுடன், உணர்ச்சியின் வடிவமாக இருந்தே பேசுவார். நான் அன்னாரைக் கடைசியாக நேரில் சந்தித்தது 22.12.2016 அன்று ஆகும். உடல் நைந்த நிலையின்போதும் உணர்ச்சி மேலிட்டு, கட்டிலில் எழுந்து உட்கார்ந்து, நிழற்படம் எடுத்துக் கொண்டார்.

‘‘இனி நாம் இராசாப்பிள்ளையை உயிரோடு பார்ப்பது அரிதாகிவிடும்’’ என்று அன்றே நினைத்தேன். அந்தத் தீய நிகழ்வு 25 நாள்களில் வந்தேவிட்டது. இது, ஒத்த உள்ளம் கொண்டோரிடையே நேரும் ஒரு நேர்ச்சி (Accident) என்று கருதி, நான மனதைத் தேற்றிக் கொண்டேன்.

குறைந்த அளவு கல்வியே பெற்ற அவர், மக்கள் உடல்நலத் துறையில், சுகாதார ஆய்வாளராகப் (Health Inspector) பணியாற்றி ஓய்வுபெற்றவர்.

அரசுப் பணியிலிருந்த போதே, உயர் அலுவலர்கள் ஆணைக்கு அடங்கிப் பணியாற்றிய காலத்திலேயே - ‘‘தொற்றுநோயுரும் குடும்ப நலமும்’’, ‘‘பொதுத் தொண் டும் பொதுநலமும்’’ என்னும் அரிய அறிவுரை நூல்களைப் படைத்தவர். தந்தை பெரியாரைப் பற்றி, ‘‘சமுதாயச் சிந்தனைச் சிற்பி’’ என்னும் சிறந்த நூலைப் படைத்தவர்.

அவருக்கு ஏற்ற துணைவியாக வாய்த்த சேதியூர் ரெங்கநாயகி அம்மாள், எனக்கு மிக நன்றாகத் தெரிந்த குடும்பத்தில் பிறந்தவர்.

சிக்கன வாழ்வுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக வாழ்ந்த இராசாப்பிள்ளை - ரெங்கநாயகி அம்மாள் இணையர் இளங்கோவன், செங்குட்டுவன், புகழேந்தி ஆகிய தம் மக்கட்கு நல்ல கல்வி தந்தனர். மூத்தோர் இருவரும் நல்ல கல்வி பெற்ற மகளிரை மணம் புரிந்து கொண்டனர். இளையவர் புகழேந்தி தலைசிறந்த ஓவியக்கல்வி கற்றவர்.

தாம் பெற்ற மக்கள் ‘‘தந்தை மகற்கு ஆற்றும் நன்றி’’ என்னும் வள்ளுவர் வாக்குக்கு ஏற்ப வாழ்ந்து வரு கின்றனர்.

தம் மக்களையும், மருமகள்களையும், பேரக் குழந் தைகளையும், தம் உடன்பிறந்தவர்களையும், மா.பெ.பொ.க. தோழர்களையும் வருத்தத்துக்கு ஆளாக்கி விட்டு மறைந்தார் - என் தோழர் வீ. இராசாப்பிள்ளை .

**வாழ்க! வாழ்க! வீ இராசாப்பிள்ளை புகழ்!**

**15.1.2017** **- வே. ஆனைமுத்து**



# மனிதநேயத் தொண்டுள்ளத்துக்கு சொந்தக்காரர் மா.பெ.பொ.க.வின் களப்பணிச் செம்மல் வேலூர் இரா. சுந்தரமூர்த்தி விடைபெற்றார்

வேலூர் மாவட்டம், வேலூர் கொசப்பேட்டையில் இராசரத்தினம் - நாகபூஷணி இணையரின் தலைமகனாக, 24.2.1949இல் பிறந்தவர் வேலூர் சுந்தர் என்கிற இரா. சுந்தரமூர்த்தி என்னும் மனிதநேய மாண்பாளர் அவர்கள். அன்னார் 67 ஆண்டுகள் 10 மாதங்ள் 18 நாள்கள் நம்மிடையே வாழ்ந்து, 12.1.2017இல் மறைவுற்றார் என்பதை அறிவிக்க மிகவும் வருந்துகிறோம்.

அன்னார் திடுமென, 6.10.2016 அன்று பிற்பகல் தம் வீட்டு வாசலில் வாந்தி எடுத்து மயங்கி விழுந்து உயிர் மூர்ச்சையானார். உடனேயே வேலூர் பெ. காளியப்பன் மற்றும் தோழர்களால் வேலூர் கிறித்துவ மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் (C.M.C.) சேர்க்கப்பட்டார்.

எவ்வளவோ முயன்றும் அன்னார் 98 நாள்கள் கண்விழித்துப் பார்க்க முடியாமலேயே இருந்து, 12.1.2017 வியாழன் அன்று மறைவுற்றார் என்பது கொடுமையானது; தம் குடும்பத்தார் மற்றும் அவருடைய பயன்கருதாத் தொண்டினைப் பெற்ற எண்ணற்ற மாந்தரும், தேனீயை விடவும் எறும்பை விடவும் விசையாக மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியினர் அனைவர்க்கும் துணை நின்று மானம் கருதாமல் கட்சிக் களப்பணிக்குத் தம்மை ஒப்படைத்துக் கொண்டு பணிபுரிந்தது மறக்கவே முடியாதது.

1981இல் வேலூரில், சிந்தனையாளன் இதழின் சார்பில், “பெரியார் பிறந்த நாள் சிறப்பு மலரை” வெளியிட்டு இரண்டு நாள்கள் மாநாடுகளை நடத்திய போதும், 2008இல் வேலூரில், “சிந்தனையாளன் பொங்கல் சிறப்பு மலர்” வெளியீட்டு விழாவும், அதை ஒட்டி இரண்டு நாள்கள் மாநாடுகள் நடந்த போதும் - ஊண் உறக்கம் இன்றி இரண்டு நாள்கள் நல்ல உணவு அளித்திடும் பொறுப்பை மனமுவந்து ஏற்று, ஓடியாடிப் பணியாற்றிய மாமறவர் ஆவார், இரா. சுந்தர்.

தம் குடும்பம், தமக்கை-தங்கை குடும்பங்கள், இரண்டு தம்பிகளின் குடும்பங்கள் நல்வாழ்வு பெற்றுத் திகழ எல்லாமாய் நின்றவர், அவர். தம்பியருள் ஒருவரான ரவி, 2016இல் மறைந்த போது, அம்மறைவு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட நான், அந்தத் துன்ப நிகழ்ச்சியை மறப்பதற்கு முன்னரே - நானும், மற்றும் வேலூர் நகர, மாவட்ட மா.பெ.பொ.க. தோழர்கள் அனைவரும் - கட்சிக் குடும்பத்தைக் கட்டிக் காத்திடத் துருதுருவென அலைந்து திரிந்து செயலாற்றிய அச்செயல் மறவரை இழந்து கைபிசைந்து வாயடைத்து நிற்கும் துன்ப நிலைக்கு ஆளாகிவிட்டதை எண்ணியெண்ணி ஒவ்வொருவரும் மனவேதனைப் படுகிறோம்.

உடன்பிறவாத நாங்கள் படும் துன்பத்தைவிடப் பன்மடங்கு துன்பத்தை, அன்னாரின் அன்பு மகன்கள் முகில், இனியன் ஆகியோரும், ஆருயிர்த் துணைவியார் சாந்தா அம்மையார், உஷா அம்மையார் ஆகிய இருவரும், மற்றும் உடன்பிறந்தோரின் குடும்பத்தினரும், மற்ற உறவினர்களும் நண்பர்களும் மா.பெ.பொ.க.வினரும் ஆறுதலும் தேறுதலும் ஒருவர்க்கொருவர் கூறிக்கொள்ளும் நிலைக்கு ஆளாகித் தவிக்கிறோம் என்பது முக்காலும் உண்மை.



இரா.சுந்தர் இறந்ததும் அவருடைய கண்கள் கொடையாக அளிக்கப்பட்டன. 13.1.17 அன்று பகல் 2 மணிக்கு சுந்தர் அவர்களின் இல்லத்தின் முன் இரங்கல் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. தோழர்கள் பொ.காளியப்பன், சா.குப்பன், க.முகிலன், இரா.சந்திரசேகரன், நா.இளங்கோ, வே.ஆனைமுத்து ஆகியோர் உரையாற்றினர். இரா.சுந்தரமூர்த்தியின் உடல் சி.எம்.சி. மருத்துவமனைக்குக் கொடையாக வழங்கப்பட்டது.

இவர்கள் அனைவரும் மறைந்த இரா.சுந்தரமூர்த்தி அவர்களைக் காணுந்தோறும் பெறுகிற ஊக்கத்தையும் தெம்பையும் இனி என்றுமே பெற முடியாது; முடியாது.

**வாழ்க, வாழ்க இரா. சுந்தரமூர்த்தி புகழ்!**

**15.1.2017** **- வே. ஆனைமுத்து**

# முன்னாள் அமைச்சர் கடலூர் ஏ. கோவிந்தசாமியின் மகளார் - முன்னாள் தலைமைப் பொறியாளர் மு. பாலசுப்பிரமணியன் துணைவியார் திலகவதி அம்மையார் மறைந்தார்



தமிழகத்தில், 1967 மார்ச்சு 6இல், தி.மு.க. தலைவர் அறிஞர் சி.என். அண்ணாதுரை தலைமையில், தி.மு.க. ஆட்சியில் அமர்ந்தது. அவ் அமைச்சரவையில் வேளாண் துறை அமைச்சராகத் திகழ்ந்தவர் கடலூர் ஏ. கோவிந்தசாமி அவர்கள்.

அவர் கடைசி வரையில் ஏழைப் பங்காளராய் வாழ்ந்தார்; வருவார்க்கெல்லாம் தன்னாலான உதவிகளைக் கவுரவம் கருதாமல் தந்தார்.

அன்னாரின் மூத்த மகளும் முதலாவது குழந்தையும் ஆகத் தோன்றிய திலகவதி அம்மையார் - விழுப்புரம் மாவட்டம், உடையாநத்தம் பெருநிலக்கிழார் முருகேசன் - கிருஷ்ணம்மாள் இணையரின் மூத்த மகனாகத் தோன்றிய பாலசுப்பிரமணியன் அவர்களை வாழ்க்கைத் துணையாக ஏற்றார்.

உடையாநத்தம் மு.பாலசுப்பிரமணியன் - திலகவதி இணையர்-உற்றாரும் உறவினரும் உடையாநத்தம் சிற்றூராரும் மெச்சும்படி, எடுத்துக்காட்டான வாழ்க்கைத் துணைவர்களாக நலவாழ்வு நடத்தினர்.

உடையாநத்தம் வேளாண் தொழிலாளர்கள் குடும்பங்களுக்குப் பாதுகாப்பாக விளங்கினர், பாலசுப்பிரமணியன் - திலகவதி இணையர்.

அண்மைக் காலத்தில் நோய்வாய்ப்பட்ட திலகவதி அம்மையார் தம் 67ஆம் அகவையில் மறைவுற்றார் என்பதை அறிவித்திட மிகவும் வருந்துகிறோம்.

1954இல், என்னை வாழ்க்கைத் துணைவராக ஏற்ற - திலகவதியின் சொந்தப் பெரியப்பா ஏ. சுப்பிரமணியன் - தையல்நாயகியின் ஒரே மகள் சுசீலா அம்மையார், திலகவதியின் மறைவுச் செய்தி கேட்டு அலறித் துடித்தார்.

நானும், என் துணைவியார் ஆ. சுசீலா அவர்களும் 16.1.2017 பிற்பகல் 2 மணி அளவில் உடையாநத்தம் சென்று, மறைந்த திலகவதி அம்மையாருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினோம். வைத்த கண் வாங்காமல் தன் தங்கை திலகவதியின் உடல் அருகே அமர்ந்து, தம் இளமைக்காலத்தில் சீராட்டிக் கொஞ்சிய அவரை நினைந்து நினைந்து வருந்தினார்; அழுதபடியே இருந்தார்.

இத்துயர நிகழ்ச்சியில் விழுப்புரம் மாவட்ட மா.பெ.பொ.க. செயலாளர் சென்னக்குணம் ஆ.கு.ஆறுமுகம் அவர்களும் எங்களுடன் பங்கேற்றார்.

திலகவதி அம்மையாரை இழந்து துயருறும் என் மூத்த சகலர் மு. பாலசுப்பிரமணியன் அவர்கட்கும், அவருடைய உடன்பிறந்தோர்க்கும்; இளைய சகலரும் ஓய்வுபெற்ற இந்திய ஆட்சிப் பணி அதிகாரியுமான ஆதிமூலம் - மல்லிகா இணையர்க்கும்; அன்புக்குரிய என் மைத்துனர்கள் ஆ.கோ. சம்பத் இணையர், அன்பு இணையர், மருத்துவர் இளங்கோ இணையர்க்கும்; திலகவதியின் அன்பு மகன்கள் சதீஷ் கோவிந்தசாமி, இணையர் இராஜேஸ்வரி; இளைய மகன்கள் செந்தில்குமார், வசந்தகுமார் ஆகியோர்க்கும்; எங்கள் காதுபட, மறைந்த திலகவதியின் ஈகப் பண்பைச் சொல்லிச் சொல்லிக் கண்ணீர் சிந்திய உடையாநத்தம் வாழ் பெருமக்களுக்கும் என் சார்பிலும், என் துணைவியார் ஆ.சுசீலா மற்றும் என் மக்கள் சார்பிலும், மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பிலும் ஆழ்ந்த இரங்கலையும் மனங்கசிந்த வருத்தத்தையும் உரித்தாக்குகிறேன்.

**வாழ்க, வளர்க திலகவதி பாலசுப்பிரமணியின் புகழ்!**

**18.1.2017** **- வே. ஆனைமுத்து**

## பொங்கல் வாழ்த்து

இன்று மலர்ந்தது பொங்கல் புதுவிழா
இன்னுயிர் காக்கும் உழவர் திருவிழா!

நன்று செழிக்கநும் நல்லறப் பணியே
நற்புகழ் நல்குமே நும்செயல் துணிவே!

தொன்று தொட்டுவளர் செந்தமிழ் மொழியே
தூய்மைத் தரமுடன் துணைசெயும் விழியே!

என்றும் பொங்கலின் கொடைநலம் சூழ்க
இன்பமே எய்திநூ றாண்டுநீர் வாழ்க!!

அன்பு நிறை
**அ. மறைமலையான்**, திருவல்லிக்கேணி

# திரையரங்குத் தேசியம்

- க. முகிலன்



“தேசாபிமானம், தேசபக்தி என்பவைகள் சுயநல சூழ்ச்சி என்றும், தனிப்பட்ட வகுப்பு மக்களால் தங்கள் வகுப்பு நலத்துக்காகப் பாமர மக்களுக்குள் புகுத்தப்படும் ஒரு (வெறி) போதையென்றும் பல தடவைகள் நாம் சொல்லி வருகிறோம்” என்று பெரியார் ஈ.வெ.ரா. 29.9.1935 நாளிட்ட “குடிஅரசு” ஏட்டில் எழுதினார்.

இந்தியா, இந்திய நாடு என்கிற குறியீட்டுச் சொற்கள், இந்தியத் துணைக் கண்டத்தில் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்டபின் உருவானவைகளாகும். காலங்காலமாக ஆளும் வகுப்பாக இருந்த கூட்டத்தார், ஆங்கிலேயரிடமிருந்து ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றவும், அதற்காகப் பல்வேறு சாதிகளாக, வகுப்புகளாகப் பிரிந்துக்கிடந்த மக்களை ஒன்றுதிரட்டுவதற்காகவும் தேசியம் தேசபக்தி, தேசாபிமானம் போன்ற உணர்ச்சியூட்டும்படியான சொற்களைப் பயன்படுத்தினர்.

ஆளும் வர்க்கத்தினர் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக முன்வைத்த தேசியம், தேசபக்தி என்பவற்றைப் பெரியார் “தேசிய வியாபாரம்”, “தேசியப் புரட்டு” என்று அதன் பொய்மையைத் தோலுரித்துக் காட்டினார். குடிஅரசு ஏட்டில் 29.9.1935 அன்று வெளிவந்த தலையங்கத்தில் பெரியார், “நான் ஒரு தேசாபிமானியல்லன்; அது மாத்திரமல்ல; தேசாபிமானத்தைப் புரட்டு என்றும், அது தனிப்பட்டவர்கள் வயிற்றுச் சோறு வியாபாரம் என்றும் சொல்லியும், எழுதியும் வரும் “தேசத்துரோகி”யாவேன். ஒரு காலத்தில் தேசாபிமானத்துக்காகச் சிறை செல்லும்படியான அவ்வளவு தேசாபிமானியாய் இருந்து, பலமுறை சிறை சென்று வந்துதான் அதன் அனுபவத்தைச் சொல்லுகிறேனே ஒழிய, வெளியில் இருந்து வேடிக்கை மாத்திரம் பார்த்துவிட்டு நான் இப்படிச் சொல்லவில்லை” என்று எழுதினார். பெரியார் தன் இறுதிமூச்சுவரை இதே கருத்தைப் பரப்புரை செய்து வந்தார்.

சுதந்தரப் போராட்டத்தில் பங்கேற்காத ஆர்.எஸ்.எஸ். அமைப்பும், அதன் அரசியல் கிளை அமைப்பான பாரதிய சனதா கட்சியும் 1977இல் அரசியலில் செல்வாக்குப் பெறத் தொடங்கிய காலம் முதல் இந்துத்துவத்தை இந்திய தேசியத்தின் குறியீடாக முன்வைத்து “தேசிய வியாபாரம்” செய்து வருகின்றன. சங்பரிவாரங்களின் இந்துத்துவப் பாசிசக் கொள்கைகளை ஏற்க மறுப்பவர்களையும் எதிர்ப்பவர்களையும் “தேச விரோதிகள்”, “தேசத்துரோகிகள்” என்று சாடுகின்றன. 2016 நவம்பர் 8 அன்று அறிவிக்கப்பட்ட பணமதிப்பு நீக்க நடவடிக்கையின் கேடுகளைப் பற்றிப் பேசியவர்களை, எழுதியவர்களைக் கருப்புப் பணத்தின் ஆதரவாளர்கள், தேசவிரோதிகள் என்று பிரதமர் மோடி சாடினார். எனவே சுதந்தரம் பெற்ற எழுபதாவது ஆண்டிலும் தேசியம், தேசபக்தி என்பவை ஆளும் வர்க்கத்தின் ஆதிக்கத்தை நிலைநாட்டவும், எதிர்ப்பவர்களை ஒடுக்கவும் ஒரு கருவியாகவே பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

உயர்நீதித்துறை அனைவருக்கும் நியாயம் வழங்கக்கூடிய ஒரு பொது அமைப்பு என்கிற ஒருவகையான புனித மயக்கம் ஆளும் வர்க்கத்தினால் மக்களிடம் ஊட்டப்பட்டிருகிறது. ஆனால் ஆளும் வர்க்கத்தின் ஆதிக்க மனப்போக்கைப் பிரதிபலிக்கும் ஒரு கண்ணாடியாகவே உயர்நீதித் துறையின் பல தீர்ப்புகள் அமைந்துள்ளன.

உச்சநீதிமன்ற நீதிபதிகள் தீபக் மிஸ்ரா, அமித்வராய் ஆகியோரைக் கொண்ட அமர்வு ஷியாம் நாராயண் சவுக்கி என்பவர் தொடுத்த ஒரு பொதுநல வழக்கில் 30.11.2016 அன்று ஒரு இடைக்காலத் தீர்ப்பை வழங்கியது. “இந்தியா முழுவதும் உள்ள திரையரங்குகளில் திரைப்படம் தொடங்குவதற்குமுன் தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும். அப்போது திரையில் தேசியக்கொடி காட்டப்பட வேண்டும். தேசிய கீதம் இசைக்கப்படும்போது திரையரங்கில் உள்ள அனைவரும் எழுந்துநின்று மரியாதை செய்ய வேண்டும். தேசிய கீதம் இசைக்கப்படுவதற்குமுன் பொதுமக்கள்

வருவதையும் போவதையும் தடுத்திட திரையரங்கின் வாயில் கதவுகள் மூடப்பட வேண்டும், பத்து நாள் களுக்குள் இந்தியா முழுவதும் இது நடைமுறைக்கு வரவேண்டும்'' என்று நீதிபதி தீபக் மிஸ்ரா தலைமையிலான அமர்வு ஆணையிட்டது. மோடி தலைமையிலான நடுவண் அரசும் இந்த ஆணையை உடனடியாகச் செயல்படுத்துமாறு மாநில அரசுகளுக்கு அறிவுறுத்தியது.

இந்த வழக்கின் வரலாற்றையும் ஷியாம் நாராயண் சவுக்கி, நீதிபதி தீபக் மிஸ்ரா ஆகியோரின் பின்னணியையும் பார்ப்போம்.

2003ஆம் ஆண்டில் ஷியாம் நாராயண் சவுக்கி, மத்தியப்பிரதேச உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தொடுத்தார். ''கபி குஷி கபி கம்' என்ற திரைப்படத்தில் தேசிய கீதத்தை ஒரு பள்ளி மாணவன் பாடுவதாக ஒரு காட்சி இருக்கிறது. திரைப்படத்தில் தேசிய கீதம் பாடப்பட்ட போது திரையரங்கில் அமர்ந்திருப்போர் எழுந்து நின்று தேசிய கீதத்துக்கு மரியாதை செய்ய வில்லை. இக்காட்சி தேசிய கீதத்தை அவமதிப்பதாகும்'' என்று சவுக்கி வாதிட்டார். அப்போது மத்தியப் பிரதேச உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக இருந்த தீபக் மிஸ்ரா சவுக்கியின் வாதத்தை ஏற்று, அத்திரைப் படத்தில் தேசியகீதம் பாடப்படும் காட்சியை நீக்குமாறு ஆணையிட்டார்.

இவ்வழக்கு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. உச்சநீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு, நீதிபதி தீபக் மிஸ்ரா அளித்த தீர்ப்பு செல்லாது என்று அறிவித்தது. திரைப்படத்தில் தேசிய கீதம் பாடப்படும் காட்சி வரும்போது திரையரங்கில் அமர்ந்திருப்போர் எழுந்து நின்று மரியாதை செய்வது என்பது நடைமுறையில் இயலாததாகும் என்று 2004 ஏப்ரல் 19 அன்று அளித்த தீர்ப்பில் கூறியது.

அதன்பின், நீண்டகாலம் கழித்து நீதிபதி தீபக் மிஸ்ரா உச்சநீதிமன்றத்தின் நீதிபதியாகப் பதவி உயர்வில் நியமிக்கப்பட்டார். நீதிபதி தீபக் மிஸ்ராவின் ''தேசபக்தி'' மனப்போக்கை நன்கு அறிந்திருந்த ஷியாம் நாராயண் சவுக்கி 2016 அக்டோபரில் உச்சநீதிமன்றத்தில் ஒரு பொதுநல வழக்கைத் தொடுத்தார். அதில், திரையரங்குகளில் தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டியதைக் கட்டாயமாக்கவும், அரசு விழாக்களில் தேசிய கீதம் பாடுவதற்குச் சட்ட வகையிலான நெறிமுறைகளை வகுக்க வேண்டும் என்று கோரியிருந்தார்.

ஒரு செய்தியை விசாரித்த நீதிபதியை, மீண்டும் அதே செய்தி குறித்த வழக்கில் விசாரிக்க அமர்த்தக் கூடாது என்பது நீதித்துறையின் மரபு. ஆனால் இதற்கு மாறாக, மத்தியப்பிரதேச உயர்நீதிமன்றத்தில் தேசிய கீதம் குறித்த வழக்கை விசாரித்த நீதிபதி மிஸ்ராவை, உச்சநீதிமன்றத்தில் அவர் தலைமையில் தேசியகீதம் குறித்து விசாரிக்க அமர்த்தப்பட்டதே ஒரு முறைகேடாகும். உடனடியாக நீதிமன்றத்தின் வழிகாட்டுதல் தேவைப் படாத இந்த வழக்கில் நீதிபதிகள் தீபக் மிஸ்ராவும் அமித்வராயும் இடைக்காலத் தீர்ப்பு வழங்கியிருப்பது என்பது அவர்கள் தேசபக்தி போதைக்கு ஆளாகியிருக் கிறார்கள் என்பதையே காட்டுகிறது.

1962இல் இந்தியா-சீனா இடையே போர் மூண்டபின், தேசபக்தி குரல்கள் ஓங்கி ஒலித்தன. அப்போது திரையரங்குகளில் திரைப்படம் முடிந்தபின் தேசியகீதம் இசைக்கும் நடைமுறை கொண்டுவரப்பட்டது. திரைப் படம் முடிந்ததும் தத்தம் வீடுகளுக்கு விரைந்து செல்ல வேண்டும் என்கிற முனைப்பு காரணமாக, தேசிய கீதம் இசைக்கப்படும் போது பெரும்பாலோர் திரையரங் கைவிட்டு வெளியேறினர். அதனால் இறுதியில் 1975இல் இந்த நடைமுறை கைவிடப்பட்டது. எனவே தான் நீதிபதி தீபக் மிஸ்ரா இப்போது திரைப்படம் தொடங்குவதற்கு முன்னரே தேசிய கீதம் இசைக்கப் பட வேண்டும் என்று கூறியிருக்கிறார்.

நீதிபதி தீபக் மிஸ்ரா தன்னுடைய இடைக்காலத் தீர்ப்பில், ''தேசிய கீதத்திற்கும் தேசியக் கொடிக்கும் மரியாதை செலுத்துவது என்பது தாய்நாட்டை நேசிப்பதும் மரியாதை செய்வதும் ஆகும். தேசிய கீதத்துக்கு மரியாதை செய்வது ஒருவரிடம் தேசியத்தையும் நாட்டுப்பற்றையும் உண்டாக்கும்'' என்று கூறியுள்ளார். மேலும் அரசமைப்புச் சட்ட விதி 51 A(a)-இன்படி, ''அரசமைப்புச் சட்டத்துக்குக் கட்டுப்பட்டு நடப்பதும், அதன் குறிக்கோள்கள், அதன் நிறுவனங்கள், தேசியக் கொடி, தேசிய கீதம் ஆகியவற்றுக்கு மரியாதை செய்வதும் ஒவ்வொரு குடிமகனின் கடமை ஆகும்'' என்று அத்தீர்ப்பில் வலியுறுத்தி உள்ளார். சட்டத்தின் ஆட்சி என்ற பெயரால் அரசு எடுக்கும் எத்தகைய கேடான நடவடிக்கைகளையும் எவரும் எதிர்த்துப் பேசாமல் அடங்கி நடக்கவேண்டும் என்பதே நீதிபதி தீபக் மிஸ்ரா கூறுவதன் நோக்கமாகும்.

திரையரங்குகளில் தேசியகீதம் இசைக்க வேண்டும் என்கிற தீபக் மிஸ்ராவின் தீர்ப்பு வெளியானதும், ஷியாம் நாராயண் சவுக்கி, இந்தியா முழுவதிலும் உள்ள எல்லா நீதிமன்றங்களிலும் காலையில் அலுவல்கள் தொடங்குவதற்கு முன்னர் தேசிய கீதம் பாடுவதற்கு ஆணையிடுமாறு உச்சநீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்தார். விண்ணப்பித்த நடைமுறையில் குறை பாடுகள் இருப்பதாகக் கூறி உச்சநீதிமன்றம் சவுக்கி யின் விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்தது.

அரசமைப்புச் சட்டத்தையும் நாட்டின் இறையாண் மையையும் பாதுகாக்கும் வானளாவிய அதிகாரம் பெற்றிருப்பதாகக் கூறிக்கொள்ளும் உச்சநீதிமன்றம்

நாள்தோறும் காலையில் தேசிய கீதத்தை இசைத்திட முன்வராத போது, மகிழ்ச்சியாகப் பொழுதுபோக்குவதற் காகத் திரையரங்குகளுக்குச் செல்லும் மக்கள் தேசிய கீதத்துக்கு எழுந்து நின்று மரியாதை செய்ய வேண்டும் என்று கூறுவது பைத்தியக்காரத்தனமல்லவா! நீதிமன்றங் களிலும், நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும், சட்டமன்றங்களிலும், அரசு அலுவலகங்களிலும், தனியார் நிறுவனங்களிலும் நாள்தோறும் காலையில் தேசிய கீதம் பாட வேண்டியது தானே என்று நாம் திருப்பிக் கேட்க வேண்டியிருக்கிறதல்லவா!

தீபக் மிஸ்ராவின் இடைக்காலத் தீர்ப்பின் அடிப்படை யில் நடுவண் அரசு பிறப்பித்த ஆணையின்படி இப்போது திரையரங்குகளில் தேசிய கீதம் இசைக்கப்படுகிறது. அப்போது எல்லோரும் எழுந்து நின்று மரியாதை செய்கிறார்களா என்பதைக் கண்காணிக்கும் ஏற்பாடு எதுவும் இல்லை. அதனால் இனி திரையரங்குகளில் சங் பரிவாரத்தின் குண்டர்கள், தேசியகீதம் இசைக்கப் படும் போது எழுந்து நின்று மரியாதை செய்யாதவர் களைத் தாக்கும் நிலை ஏற்படும். ஏனெனில் சங்பரி வாரங்கள் "தேசபக்தி" என்பதை குத்தகைக்கு எடுத்துக் கொண்டதுபோல் கடந்த முப்பது ஆண்டுகளாகச் செயல் பட்டு வருகின்றன.

இரவீந்திரநாத் தாகூர் எழுதிய தேசியகீதம் இந்திய நாட்டின் பன்மைத் தன்மையைப் போற்றுகிறது; வேற்று மையில் ஒற்றுமை காண வேண்டும் என்பதை வலி யுறுத்துகிறது. ஆனால் எதற்கெடுத்தாலும் 'தேசியம்', தேசபக்தி" என்று கூச்சலிடும் இந்துத்துவக் கும்பல் தேசியம் என்பது இந்துத் தேசியமே ஆகும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறது. இதற்கு வித்திட்டவர் வி.டி.சாவர்கர். இந்துக்கள் மட்டுமே இந்த நாட்டைத் தங்களின் தந்தையர் பூமியாக - அதாவது வேதகாலம் முதல் வழிவழியாக வாழ்ந்து வந்த முன்னோர்களைக் கொண்ட பூமியாகவும், தங்கள் புண்ணிய பூமியாகவும் கருதுகின்றனர். அதனால் இந்துக்களுக்கு மட்டுமே தொல்பழம் தேசிய வாழ்வும் நாட்டுப்பற்றும் இருக்கிறது. இத்தகைய நிலை இசுலாமியருக்கும் கிறித்தவர்களுக் கும் இல்லை என்பதால் அவர்களின் தேசபக்தி அய்யத்திற்கிடமானது என்கிற பாசிசக் கருத்தை ஆர்.எஸ்.எஸ். பல ஆண்டுகளாகப் பரப்பி வருகிறது. இசுலாமியரும் கிறித்தவரும் தங்கள் தேசபக்தியை அன்றாடம் மெய்ப்பித்துக்காட்டுமாறு அச்சுறுத்தப்படு கின்றனர்; தாக்கப்படுகின்றனர். 18 கோடி மக்களாக உள்ள இசுலாமியரும், 3 கோடிப் பேராக உள்ள கிறித்துவர்களும் சங்பரிவாரங்கள் கூறும் இந்துத்துவ தேசியத்தை எப்படி ஏற்க முடியும்?

இந்திராகாந்தி பிரதமரானது முதல் மோடி பிரத மராக இருக்கும் இன்றுவரை படிப்படியாக மாநிலங்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு எல்லா அதிகாரங்களையும் நடுவண் அரசில் குவித்து, ஒற்றை ஆட்சி முறை உரு வாக்கப்பட்டிருக்கும் நிலையில், பலகோடி மக்களைக் கொண்ட - மொழிவழியில் அமைந்த மாநிலங்களின் மக்கள் 'இந்திய தேசியம்' என்பதை உளமார எப்படி ஏற்க முடியும்? இம்மாநிலங்களின் தேசிய மொழிகளை அழிக்க இந்தியையும் சமற்கிருதத்தையும் திணிக்கும் தேசியத்தை எப்படி ஒப்ப முடியும்? கோடிக்கணக்கான மக்களின் தாய்மொழி, பண்பாடு, வாழ்க்கை முறை முதலானவற்றை ஒடுக்க முனையும் தேசியத்தைத் தங்களுடையது என்று நினைக்க முடியுமா?

"இந்தியாவில் சாதி அமைப்பு நீடிக்கின்ற வரையில் உண்மையான சனநாயக உணர்வு மலராது" என்று டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் சொன்னார். சுதந்தரம் பெற்று எழுபது ஆண்டுகளான பின்னும் இந்திய நாட்டில் உள்ள ஒவ்வொருவரிடம் மேலோங்கி நிற்கும் முதன்மையான உணர்வு - சிந்தனை என்பது "தான் இன்ன சாதியைச் சார்ந்தவன்" என்பதே ஆகும். பிறவி யில் உயர்வு-தாழ்வு கற்பிக்கும் சாதிய கருத்தியலே சமூகத்தில் முதன்மையான இயங்கு ஆற்றலாக இருக் கிறது. பிறப்பால் இந்நாட்டில் பிறந்த அனைவரும் சமம் என்கிற உணர்வு உருவாகாத நிலையில் தேசியம் என்பது போலியானது மட்டுமல்ல; அது ஆதிக்க வர்க்கம் தன்னுடைய நலனுக்காகத் திணிக்கும் ஒரு மாயக் கருதுகோள்.

தேசியம் என்பதைப் பெரியார் இவ்வாறு விளக்குகிறார்: "ஒரு தேசத்தின் தேசியம் முக்கியமாய் எதைப் பொறுத்திருக்க வேண்டும் என்று பார்ப்போமானால், குறைந்தபட்சம் ஒரு தேச மக்கள் தங்களது மானத் தையும் மனசாட்சியையும் விற்காமலும் விட்டுக்கொடுக் காமலும் வயிறு வளர்க்கும்படியாகவாவது இருக்க வேண்டும். ஈதன்றி அதற்கு மேற்பட்ட தேசியங்கள் எவ்வளவோ இருக்கின்றன. அறிவு வளர்ச்சி வேண்டும், கல்வி வேண்டும், ஆராய்ச்சி வேண்டும், கண்ணிய மான தொழில் வேண்டும், சமத்துவம் வேண்டும், ஒற்றுமை வேண்டும், தன் முயற்சி வேண்டும், உண்மை உணர்வு வேண்டும், ஒருவரை ஒருவர் ஏமாற்றிப் பிழைக்காமலிருக்க வேண்டும், சோம்பேறி கள் இருக்கக்கூடாது, அடிமைகள் இருக்கக்கூடாது, தீண்டாதவர்கள் - தெருவில் நடக்கக்கூடாதவர்கள் முதலியவர்கள் இருக்கக்கூடாது, இனியும் இதுபோன்ற எவ்வளவோ காரியங்கள் செய்யப்பட வேண்டும்" (குடிஅரசு, தலையங்கம் 1.9.1929).

பெரியாரின் அளவுகோலின்படி இன்று உண்மை யான தேசியம் இருப்பதாகக் கூறமுடியுமா?

தேசியம் என்பது தேசிய கீதத்திலோ, தேசியக் கொடியிலோ இல்லை; அது நாட்டின் நிலப்பரப்பை

மட்டும் சார்ந்ததாக இல்லை. நாட்டின் மக்களைச் சார்ந்தது. இந்த நாடு நமக்கானது; இந்த அரசும் ஆட்சியும் நமக்கானது என்று மக்கள் உணர்வதில்தான் தேசியம் இருக்கிறது.

ஆனால் இன்றைய இந்துத்துவ ஆட்சி ஒரே தேசம், ஒரே மொழி, ஒரே கலாச்சாரம் என்பதையே தேசியமாக வரையறுக்கிறது. இந்துத்துவத்தின் இந்த நோக்கு உயர் அதிகாரவர்க்கம், உயர்நீதித்துறை ஆகியவற்றிலும் வேகமாகப் பரவி வருகிறது. இதன் வெளிப்பாடுதான், திரையரங்குகளில் தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும்; எல்லோரும் எழுந்து நின்று மரியாதை செய்ய வேண்டும் என்கிற தீபக் மிஸ்ராவின் தீர்ப்பு.

1929இல் பெரியார் தேசியம் என்பதற்குக் கொடுத்த விளக்கமே இன்றுவரை கிட்டத்தட்ட மாறாமல் நீடிக்கிறது:

‘‘சாதாரணமாக யோசித்துப் பார்த்தோமானால், இந்தியாவில் தேசியமென்கின்ற பதமே தப்பான வழியில் மக்களை ஏமாற்றிப் பிழைக்க ஒரு கூட்டத்தார், அதாவது மேல்சாதியார் என்று சொல்லிக் கொள்ளும் பார்ப்பனர்களால் கற்பனை செய்யப்பட்டு, அவர்களுக்குத் தாசர்களாக இருந்தால்தான் பிழைக்க முடியுமென்று கருதிய சில பார்ப்பனரல்லாத படித்தவர்கள் என்பவர்களால் ஆதரிக்கப்பட்டு, இவ்விரு கூட்டத்தார் சூழ்ச்சியாலும் பாமர மக்களை ஏமாற்றிச் சிலர் பிழைக்க உபயோகப்பட்டுவரும் ஒரு பாதகமும், அபாயகரமான அர்த்தமற்ற ஒரு வார்த்தையாகும்.’’

## காஞ்சியில் திருவள்ளுவர் நாள் விழா

திருவள்ளுவர் ஆண்டு 2048 தை 2ஆம் நாள் (15-01-2017) காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் வடிவேல் நகரில் அமைந்துள்ள திருவள்ளுவர் சிலை எதிரில் திருவள்ளுவர் நாள் விழாக் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு கா.மு.ஏகாம்பரம் தலைமை ஏற்றார். காஞ்சி அமுதன் வரவேற்புரையாற்றினார். காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.அ.பி.எழிலரசன் திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து உரையாற்றினார். மருத்துவர் விமுனாமூர்த்தி, உலக ஒளி, சி.தனசேகரன், முத்து அருணன், பி.எம்.குமார், புஞ்சை கோதண்டன் ஆகியோர் உரையாற்றினர். மா.பெ.பொ.க.தோழர் தீ.கோபாலகிருட்டிணன் நன்றி கூறினார். மா.பெ.பொ.க. தோழர்கள் திரளாகப் பங்கேற்றனர்.

செய்தி : **தீ.கோபாலகிருஷ்ணன்**

## காயடிக்கப்பட்ட காளைகள்

- பாவலர் **வையவன்**

மிகப்பெரிய
பரந்து விரிந்த ஒரு
வணிகச் சந்தைக் கூடத்தை
நீங்கள்
‘தேசம்’ அல்லது ‘நாடு’
என்று கருதுகிறீர்கள்

உங்களை
‘இந்தியன்’ என்றும்
உங்கள் தேசம்
‘இந்தியா’ என்றும்
கருதும் வரை
இப்போதிருக்கும்
நிலைக்கு மேலாக
எதுவும் சாத்தியமில்லை!

‘அனைத்தையும்’
ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும்

தேசிய இனங்களின்
‘அடிமை சாசனத்தின்’
மறுபெயர்தான்
இந்திய ‘இறையாண்மை’!

எப்படிப்பட்ட
அரசமைப்புச் சட்டம்
உங்களை வழி நடத்துகிறது
என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்

ஜெய் ஹிந்த்!
வந்தே மாதரம்!
பாரத மாதா கி ஜே!
கோஷங்களை ஏற்றுக்கொண்ட நீ
தேசிய இனப் பண்பாடுகளுக்காக
ஏன் போராடிக் கொண்டிருக்கிறாய்?

போய்...
இந்திய அரசமைப்புச் சட்டத்தைக்
கூறுகூறாய்ப் படியுங்கள்
காளைகளே...

உங்கள் கொட்டைகள்
சட்டக் கிடுக்கியால்
காயடிக்கப்பட்டிருப்பது தெரியும்!

# வேலூர் மாவட்டம், வாணியம்பாடியில் 07-01-2017 அன்று சிந்தனையாளன் பொங்கல் மலர்-2017 வெளியீட்டு விழா, புதிய கல்விக் கொள்கை எதிர்ப்பு-மருத்துவ நுழைவுத் தேர்வு எதிர்ப்பு இந்தி ஆதிக்கம் - சமற்கிருதத் திணிப்பு எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது




வேலூர் மாவட்டம், வாணியம்பாடி பத்மாவதி-அண்ணாமலை திருமண மண்டபம் 07-01-2017 அன்று விழாக்கோலம் பூண்டிருந்தது. மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் கொடிகள் பேருந்து நிலையம் முதல் திருமண மண்டபம் வரையில் மாநாட்டுக்கு வருவோரை வரவேற்கும் வகையில் நடப்பட்டு இருந்தன. தென்மாவட்டங்களின் மா.பெ.பொ.க. தோழர்கள் முதல் நாள் இரவு முதலே மாநாட்டின் மண்டபத்திற்கு வரத் தொடங்கினர்.

மா.பெ.பொ.கட்சியில் தொடக்கத்தில் பல ஆண்டுகள் பணியாற்றியவரும், தன் இறுதிமூச்சுவரை மா.பெ.பொ.க. வுக்குத் துணை நின்றவரும், மார்க்சிய-பெரியாரிய அறிஞராக விளங்கியவரும், அலிகர் முசுலீம் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இருந்தவருமான முனைவர் து.மூர்த்தியின் பெயர் மாநாட்டு அரங்கிற்குச் சூட்டப் பட்டது. அரங்கில் அவரது புகைப்படம் அணிசெய்தது.

சிந்தனையாளன் பொங்கல் மலர்-2017 வெளியீட்டு விழா நிகழ்ச்சி 07-01-2017 சனிக்கிழமை காலை 10 மணிக்குக் காஞ்சி இசைக்குழுவினரின் எழுச்சிப் பாடல் களுடன் தொடங்கியது. இந்நிகழ்ச்சிக்கு கவிஞர் தமிழேந்தி தலைமை தாங்கினார்.

வாணியம்பாடி தமிழ்ச் சிந்தனையாளர் மன்ற நெறியாளர் புலவர் மு.சு. தங்கவேலன், புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றத்தின் வேலூர் மாவட்டச் செயலாளர் மு. சாமிநாதன், வேலூர் மா. பெ.பொ.க. தோழர் லோ.இர. குமார், வாணியம்பாடி மா.பெ.பொ.க. தோழர் சீனி. பழனி, வழக்குரைஞர் உமர், புலவர் சகாதேவன், வாணியம்பாடி தோழர்கள் நீலகண்டன், ந. செயச்சந் திரன் ஆகியோர் விழா மேடையில் முன்னிலை வகித்தனர்.

பொங்கல் மலர் வெளியீட்டு விழாவும் - மாநாடும் சிறப்புற நடைபெறுவதற்காகப் பல நாள்கள் அல்லும் பகலும் அயராது பாடாற்றிய விழாக்குழுவின் தலை வரும், மா.பெ.பொ.க. வாணியம்பாடி நகரச் செயலா ளருமாகிய தோழர் நா. மதனகவி அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினார். விழாவின் தலைவர் கவிஞர் தமிழேந்தி, முனைவர் மூர்த்தியின் சிறப் பியல்புகளை நெஞ்சு நெகிழ நினைவுகூர்ந்ததுடன், தன் அரிமாக் குரலால் எழுச்சிமிகு தலைமை உரையை நிகழ்த்தினார்.

மேலும் சிந்தனையாளன் 2017ஆம் ஆண்டின் பொங்கல் மலரை கவிஞர் தமிழேந்தி வெளியிட்டார். மலரின் முதல் படியை கு.ப. நாகரத்தினம் பெற்றுக் கொண்டார். தோழர்கள் அ. கசேந்திரன், ந. வேலு, மு. சுப்பிரமணியம், அ. பாவேந்தன், மு. பிரதாபன், க.புருசோத்தமன், அ. நசீர்கான், வழக்குரைஞர் தேவ குமார், கோ. அன்புச்சேரன், சண்முகம் ஆகிய தோழர் கள் பொங்கல்மலரின் படிகளைப் பெற்றனர். இவர்கள் அனைவரும் மாநாடு சிறப்பாக நடைபெற பல வழிகளி லும் துணை நின்றவர்கள் என்பது குறிக்கத்தக்கதாகும்.

பொங்கல் மலர் வெளியிடப்பட்டதையடுத்து, தோழர் வே. ஆனைமுத்து அவர்கள் எழுதிய “திருக்குறளும்

தமிழர் வாழ்வியலும்'' என்ற நூலை புலவர் கி.த. பச்சையப்பன் அவர்களும், ''காவிரி-தமிழ் மொழி உரிமை, கருநாடகத் தமிழரும் தமிழகத் தமிழரும்'' எனும் நூலை பெங்களூர் தி.சு. இளங்கோவன் அவர் களும் வெளியிட்டு, அந்நூல்கள் குறித்து உரையாற்றினர்.

பொங்கல் மலர் வெளியீட்டு விழாவில், வேலூர் மாவட்டச் செயலாளர் மோ.சி. சங்கர், மா.பெ.பொ.க. துணைப் பொதுச் செயலாளர் சி. பெரியசாமி, கடலூர் மாவட்டச் செயலாளர் பா.மோகன், பெரம்பலூர் மாவட்டச் செயலாளர் வரகூர் மா. நாராயணசாமி, அரியலூர் மாவட்டச் செயலாளர் புலவர் இரா. கலியமூர்த்தி, வேளாண் அணித் துணைச் செயலாளர் கோ. கோதண்டராமன், திருவண்ணாமலை மாவட்டச் செயலாளர் பொ. சுப்பிர மணியன், திருச்சி மாவட்டச் செயலாளர் இரா. கலிய பெருமாள், நாகை மாவட்டச் செயலாளர் முத்து. அன்பழகன், சேலம் மாவட்டச் செயலாளர் செ. ஆனையப்பன், விழுப்புரம் மாவட்டச் செயலாளர் ஆ.கு. ஆறுமுகம் ஆகிய தோழர் கள் உரையாற்றினர்.

பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்திருந்த மா.பெ.பொ.க. தோழர்கள், பல்வேறு இயக்கத் தோழர்கள், வாணி யம்பாடி பொது மக்கள் என மாநாட்டு அரங்கு நிரம்பி இருந்தது. சிந்தனையாளன் அலுவலக மேலாளரும், பொங்கல் மலரில் விளம்பரங்கள் சீரிய முறையில் இடம்பெறுவதற்கு அரும்பணியாற்றியவருமான தோழர் ப.வடிவேலு நன்றி உரை ஆற்றினார். மாநாட்டு மண்டபத்தில் காலைச் சிற்றுண்டியும், பகல் உணவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பகல் உணவுக்குப்பின் பிற்பகல் 2.30 மணிக்குக் காஞ்சி இசைக்குழுவினரின் எழுச்சிப் பாடல்களுடன் இரண்டாம் அமர்வு தொடங்கியது. புதிய கல்விக் கொள்கை எதிர்ப்பு, மருத்துவ பொது நுழைவுத் தேர்வு எதிர்ப்பு, இந்தி ஆதிக்கம் - சமற்கிருதத் திணிப்பு எதிர்ப்பு மாநாட்டுக்கு மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் வே. ஆனைமுத்து தலைமை தாங்கினார். காஞ்சி மாவட்டச் செயலாளர் சி. நடராசன் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார்.

தமிழக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் தோழர் பொழிலன் மாநாட்டைத் தொடங்கி வைத்து எழுச்சிமிகு உரையாற்றினார்.

தொழிலாளர் அணிச் செயலாளர் சா. குப்பன், மாணவர்-இளைஞர் அணிச் செயலாளர் முனைவர் ஆ. முத்தமிழ்ச்செல்வன், சென்னை மாவட்டச் செயலாளர் வாலாசா வல்லவன், மகளிரணிச் செயலாளர் வழக்குரைஞர் கோவி இராமலிங்கம், வாணியம்பாடி பாலாறு பாதுகாப்பு இயக்க முன்னணித் தோழர் ஏ.சி. வெங்கடேசன், மா.பெ.பொ.க.மாணவர்-இளைஞரணித் துணைச் செய லாளர் தி.துரைசித்தார்த்தன் இந்தியப் பொதுவுடைமைக் கட்சித் தோழர் இரா. முல்லை, புதுச்சேரி மாநிலச் செயலாளர் இரா. திருநாவுக்கரசு, காஞ்சி பாலாறு பாது காப்புக் கூட்டியக்கத் தோழர் காஞ்சி அமுதன், வாணியம் பாடி தமிழக மக்கள் முன்னணியின் தோழர் ந. செவ்வேள், மா.பெ.பொ.க. இளைஞரணியின் தோழர் இரா.பகுத்தறிவாளன், மாணவர்-இளைஞரணி நாகை மாவட்டத் தோழர் சோ. அண்ணாதுரை, தலைமைக் குழு உறுப்பினர் க. முகிலன் ஆகியோர் மாநாட்டின் கருப்பொருள் குறித்துக் கருத்துரை வழங்கினர்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் ஆளூர் ஷாநவாஸ் மாநாட்டின் நோக்கங்கள் குறித்து விரிவாக விளக்கி எழுச்சிமிகுந்த தோர் சிறப்புரை ஆற்றினார். இறுதியில் தோழர் வே. ஆனைமுத்து அறிவார்ந்த நிறைவுரை நிகழ்த்தினார். விழாக் குழுவின் தலைவர் நா. மதனகவி நன்றி கூறினார். மாநாட்டு நிகழ்ச்சிகள் இரவு 8 மணிக்கு முடிவுற்றன.

வாணியம்பாடி மாநாடு சிறப்புற நடைபெற்றமைக்கு முதன்மையான பங்களிப்பு செய்த நா. மதனகவி, அவருக்கு உற்றதுணையாக நின்ற வேலூர் மாவட்டச் செயலாளர் மோ.சி. சங்கர், சா. குப்பன், வாணியம்பாடி நகரைச் சேர்ந்த பல்வேறு கட்சிகள், இயக்கங்களைச் சேர்ந்த தோழர்களுக்கு மா.பெ.பொ.க. சார்பில் நெஞ் சார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறாம்.

**- ஆசிரியர் குழு**

## மொழிப்போர் நாள் வீரவணக்கப் பேரணி




தமிழ் உரிமைக் கூட்டமைப்பின் சார்பில் மொழிப்போர் நாள் வீரவணக்கப் பேரணி 25.1.2017 புதன் காலை 10 மணிக்கு சென்னை தங்கசாலை வள்ளலார் மணிகூண்டி லிருந்து புறப்பட்டு மூலக்கொத்தளம் இடுகாட்டில் உள்ள நடராசன்-தாளமுத்து நினைவிடம் வரை புலவர் கி.த. பச்சையப்பன் தலைமையில் நடைபெற்றது. காஞ்சி அமுதன் வரவேற்புரையாற்றினார். வாலாசா வல்லவன் தொடக்கவுரையாற்றி னார். பல தோழர்களின் உரைகளுக்குப்பின்பு நண்பகல் 12 மணிக்கு முடிவுற்றது. இராசேந்திரசோழன், பொழிலன், தமிழ்நேயன், அருணபாரதி, குடந்தை அரசன், வழக்குரைஞர் புகழேந்தி, வழக்குரைஞர் கோ. பாவேந்தன், பா. இறைஎழிலன், அன்புவாணன், வெற்றிச்செல்வி, அ. பத்மநாபன், பேரா. ப. சிவக்குமார், பேராசிரியர் மு. திருமாவளவன், அ. சின்னப்பா தமிழர், உதையை வீரய்யன், வீ. இறையழகன், புலவர் இரத்தினவேலன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

1

2

# 3

4

# 5

6

7

8

*மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில், வேலூர் மாவட்டம் வாணியம்பாடியில் பத்மாவதி-அண்ணாமலை திருமண மண்டபத்தில் 07.01.2017 சனியன்று நடைபெற்ற*

# இந்திய அரசின் புதிய கல்விக் கொள்கை எதிர்ப்பு மருத்துவப் படிப்புக்கான பொதுநுழைவுத் தேர்வு எதிர்ப்பு இந்தி ஆதிக்கம் – சமற்கிருதத் திணிப்பு எதிர்ப்பு

# மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

## *இரங்கல் தீர்மானங்கள்*

**தீர்மானம் - 1**

இரஷ்யாவில் நிறுவப்பட்டிருந்த சார் குடும்ப அரசாட்சியை அகற்றி, உலக அளவில் முதன்முதலாக சமதரும ஆட்சியை 1917இல் நிறுவிய இலெனின் 1924இல் மறைந்தார். சீன நாட்டில் புகழ் பெற்ற மாபெரும் நீண்ட நடைப்பயணத்தை நடத்தி, அங்கிருந்த அரசாட்சியை 1949இல் அகற்றி சமதரும ஆட்சியை நிறுவிய மாசேதுங் 1979இல் மறைந்தார்.

இவற்றை அடுத்து, கியூபாவில் நிறுவப்பட்டிருந்த பாடிஸ்டா அரசை எதிர்த்தும், அமெரிக்காவின் மாபெரும் சூழ்ச்சிகளை முறியடித்தும் பிடல் காஸ்ட்ரோவும் புரட்சியாளர் சே குவேராவும் இணைந்து மாபெரும் புரட்சியை நடத்தி கியூபாவை சமதரும நாடாக 1959இல் அமைத்தனர். அமெரிக்காவின் தடைகளையும், நூற்றுக் கணக்கான தடவைகள் அமெரிக்காவால் நடத்தப்பட்ட கொலை முயற்சிகளையும் தாண்டி, ஒரு குட்டி நாடான கியூபா அரசு சமதரும ஆட்சியை வெற்றிகரமாக நடத்தியது.

உலகத்தரம் வாய்ந்த கல்வியையும், அனைவருக்கும் வேண்டப்பட்ட உயர்தரம் வாய்ந்த மருத்துவத்தையும் இலவயமாக இன்றுவரை அளித்துவரும் அரசு உலகில் கியூபா அரசு மட்டுமே ஆகும். அத்தகைய அரசை நிறுவிய ஃபிடல் காஸ்ட்ரோ கியூபாவின் அதிபர் பொறுப்பிலிருந்து, உடல்நிலை காரணமாக விலகிக் கொண்டாலும் உலகப் பெருந்தலைவர்களால் கண்டு பேசப்படும் சமதருமத் தத்துவ மேதையாக விளங்கி வந்தார். அத்தகைய சமதருமப் புரட்சியாளர் ஃபிடல் காஸ்ட்ரோ அவர்கள் 26.11.2016 அன்று மறைவுற்றது உலக அளவில் மார்க்சிய - இலெனினிய - மாவோயியக் கொள்கையாளர்களுக்கு ஒரு பின்னடைவே ஆகும் என இம்மாநாடு மனமாரக் கருதுகிறது. கியூபா நாட்டு மக்களுக்கும் உலகில் உள்ள பொதுவுடைமை இயக்கங்களுக்கும் ஏற்பட்டுவிட்ட இந்தப் பேரிழப்பைக் கருதி இம்மாநாடு மனம் கசிந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதுடன் மறைந்த புரட்சியாளர் ஃபிடல் காஸ்ட்ரோவுக்குச் செவ்வணக்கத்தை உரித்தாக்குகிறது.

**தீர்மானம் - 1அ**

மார்க்சியப் பொரியாரியப் பொதுவுடைமைக் கட்சி 08.08.1976இல் நிறுவப்பட்டது. 1978 முதல் மா.பெ.பொ.க.வின் கிளை வேலூர் மாவட்டத்தில் சிறப்பாக இயங்கி வருகிறது. வேலூர் மாவட்டத்தில் வேலூர் துரைசாமி - அம்புசம் இணையரின் மகனாகப் பிறந்த து. மூர்த்தி, தமிழில் பட்ட மேற்படிப்பைக் கற்ற அதே நேரத்தில் இளமையிலேயே மார்க்சியம், பெரியாரியம் அம்பேத்கரியம், பாவேந்தம் இவற்றில் நாட்டங்கொண்டு இளைஞர்களுக்கும் கல்வி மறுக்கப்பட்டவர்களுக்கும் தாம் சார்ந்த கட்சித் தோழர்களுக்கும், மார்க்சியப் பெரியாரியத்தை விளக்கிச் சொல்வதிலும் விளக்கி எழுதுவதிலும் தனித்திறமை பெற்றவராக விளங்கினார். அவரைப் பெற்ற தமிழ்நாடு அக்கல்வியாளரைப் புறக்கணித்தபோதும் உத்தரப்பிரதேசத்தில் உள்ள அலிகர் முசுலிம் பல்கலைக் கழகத்தில் நவீன இந்திய மொழிகள் துறையில் தமிழைக் கற்பிக்கும் பேராசிரியராக 30 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றினார். 2016இல் அத்துறையின் தலைவராகப் பதவி உயர்வு பெற்றார். இந்நிலையில் அண்மையில், முற்றிய புற்று நோய்க்கு ஆளாகி-அலிகரில் அறுவை செய்து கொண்ட போது 24.10.16 அன்று அங்கேயே சில மணி நேரங்களில் உயிரிழந்தார் என்பது தமிழகத்தில் அவரை அறிந்த எல்லோருக்கும் அதிர்ச்சி தருவதாக இருந்தது. அப்புரட்சியாளரை இழந்து துயருறும் அவருடைய குடும்பத்தினருக்கும், மார்க்சிய-பெரியாரிய-அம்பேத்கரியக் கொள்கையாளர்களுக்கும், தமிழ் இயக்கங்களுக்கும் இம்மாநாடு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதுடன் மறைந்த மாமறவர் முனைவர் து. மூர்த்தி அவர்களுக்கு இம்மாநாடு செவ்வணக்கத்தை உரித்தாக்குகிறது.

**தீர்மானம் - 1ஆ**

மானிட உரிமைக் காப்பாளராகவும் மனித சமத்துவத்தை நிலைநாட்டுபவராகவும் மத மறுப்பாளராக

வும், சிறந்த மார்க்சிய-இலெனினிய உணர்வாள ராகவும் விளங்கிய - சாகுல் அமீது எனப் பெயர் கொண்ட புரட்சிப் பாவலர் இன்குலாப் அவர்கள் தம் பொதுவாழ்வுக்காலம் முழுவதிலும் மார்க்சியம், பெரி யாரியம், அம்பேத்கரியம் இவற்றை அடக்கிய பாடல் களை இயற்றுபவராகவும், அப்பாடல்களின் கருத்துக் களைப் பரப்புநராகவும் தமிழ்ப் பேராசிரியராகவும் விளங்கினார். நீரிழிவு நோய்க்கு ஆட்பட்ட அப்பெரு மகனார் அண்மை ஆண்டுகளில் ஒரு காலை இழந்த நிலையிலும் பொது மேடைகளில் தம் கருத்துக்களைப் பரப்புவதில் முன் நின்றார். அத்தகைய மக்கள் கவிஞர் இன்குலாப் அவர்கள் *01.12.2016* அன்று மறைந்து விட்டது கருதி இம்மாநாடு வருத்தம் தெரிவித்துக் கொள்கிறது. அன்னாரை இழந்துத் துயருறும் அவரது குடும்பத்தார்க்கும் முற்போக்கு இயக்கங்களைச் சார்ந்தவர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதுடன் மறைந்த இன்குலாப் அவர்களுக்கு இம்மாநாடு செவ்வணக்கத்தை உரித்தாக்குகிறது.

**தீர்மானம் - 1இ**

கடந்த *05.12.2016*அன்று மறைவுற்ற தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு ஜெ.ஜெயலலிதா, *07.12.2016* அன்று மறைந்த துக்ளக் ஆசிரியர் சோ. இராமசாமி, *10.12.2016*இல் மறைந்த பேரறிஞர் பொறியாளர் வா.செ. குழந்தைசாமி, *01.12.2016*இல் மறைந்த இந்தியப் பொதுவுடமைக் கட்சித் தோழர் இரா. நல்லக்கண்ணு அவர்களின் துணைவியார் இரஞ்சிதம் அம்மையார், *26.12.2016*இல் மறைந்த தலைசிறந்த தி.மு.க எழுத் தாளரும் பேச்சாளருமான தி.கோ. சீனிவாசன் அவர்களின் துணைவியார் தி.கோ.சீ. சரசுவதி, சோழமண்டலத் தி.மு.க காவலர் கோ.சி.மணி, பெங்களூரில் வாழ்ந்து *15.12.2016* அன்று மறைந்த தனித்தமிழ்க் காப்பாளர் மகிபை பாவிசைக்கோ, *05.12.2016* அன்று மறைந்த காஞ்சிபுரம் கீழம்பி மா.பெ.பொ.க தோழர் வ. வேத கிரியின் தந்தையார் நா. வரதப்பன் ஆகியோரின் மறை வுக்கு இம்மாநாடு வருந்துவதுடன் மனங்கசிந்த இரங் கலை உரித்தாக்குகிறது.

**பா.ச.க. அரசின் புதிய கல்விக் கொள்கை எதிர்ப்பு**
**தீர்மானம் - 2**

பாரதிய சனதாக் கட்சியின் இந்திய ஆட்சி *2016*இல் அறிவித்துள்ள "புதிய கல்விக் கொள்கை" என்பது இரண்டு பிற்போக்கான நோக்கங்களைக் கொண்டது ஆகும். முதலாவது நோக்கப்படி, பத்தாம் வகுப்புத் தேர்வில் வெற்றி பெறும் மாணவ-மாணவியரை மதிப் பெண் அடிப்படையில் அ-(A) தரப்பிரிவினர் என்றும் ஆ-(B) தரப்பிரிவினர் என்றும் இரண்டு வகையாகத் தரம் பிரிக்கும் நோக்கம் கொண்டுள்ளது. அ-(A) தரம் பெற்றவர்கள் மட்டும் மேற்கொண்டு எந்த வகையான படிப்பையும் பெறுவதற்குத் தகுதி படைத்தவர் என்றும், ஆ - (B) தரம் பெற்றவர்கள் அவரவர் பெற்றுள்ள மதிப்பெண்ணுக்கு ஏற்பச் சான்றிழ்ப் படிப்பு, பட்டயப் படிப்பு முதலான கீழ்நிலைப் படிப்புகளையே படிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட வழி செய்வதாக இருக்கிறது. இந்தியா முழுவதிலும் - தமிழகத்திலும் தரமற்ற கல்வி கற்பிக்கும் பள்ளிகளும், கல்லூரிகளும் குவிந்துள்ள இன்றைய நிலையில், ஆ-(B) தரத்திற்குத் தள்ளப்படுபவர்களில் *100*க்கு *90* பேர் எல்லா மதங் களையும் சார்ந்த பிற்படுத்தப்பட்டோராகவும் இன்னும் தீண்டப்படாதவராகக் கருதப்படும் பட்டியல் வகுப்பின ராகவும், பழங்குடியினராகவும் இருப்பர். இதனால், இவர்கள் *16* அகவையிலேயே உயர்கல்வி பெறுவதற்கு நாட்டம் கொள்ளாமல் செய்யப்பட்டு நால்வருண - உள்சாதி அடிப்படையில் கல்வி உரிமை மறுக்கப்பட்ட வர்களாகவே தொடர்ந்து வைக்கப்படுவார்கள் என இம்மாநாடு அஞ்சுகிறது.

**தீர்மானம் - 3**

இரண்டாவது நோக்கப்படி, இந்தியப் பண்பாட்டின் அடையாளமாகச் சமற்கிருத மொழியை எல்லாப் பள்ளி களிலும், கற்பிப்பது திட்டமாகும். இன்று இந்தியாவில் உள்ள *127* கோடி மக்களுள் வெறும் *25* ஆயிரம் பேர்களால் பேசப்படுவதாகவும், மணவினை, பிணவினை, கோயில் பூசை, சோதிடம் இவற்றைக் கற்றுத் தருவ தற்கு மட்டுமே பயன்படும் மொழியாகவும் உள்ள சமற்கிருதத்தைப் பள்ளிகளில் தொடங்கி கல்லூரிகள் வரையும் கட்டாயப் பாடமாக வைத்துக் கற்பிக்கப் படும் திட்டத்தைக் கொண்டுள்ள இந்தப் புதியக் கல்விக் கொள்கையை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

மேலும், தமிழ்நாட்டில் வாழும் ஏழரைக் கோடி மக்களாலும், உலக நாடுகளில் வாழும் ஒரு கோடி தமிழ் மக்களாலும் பேசப்படுகிற செம்மொழியானத் தமிழ் மொழி இருக்க அதைவிடுத்துச் சமற்கிருதம் பயிற்றுவிப்பது என்பது தமிழ்மக்களுக்கு மானக்குறை வும் இழிவும் ஆகும் என்பதை உணர்ந்து, தமிழர்கள் எல்லோரும் மதம், சாதி, இயக்கம், கட்சி, இவற்றை மறந்து ஒற்றைக்குரலில் "சமற்கிருதம் ஒழிக!" என்று முழக்கம் எழுப்பித் தெருவுக்கு வந்து போராட வேண்டும் என்று தமிழ் மக்களை வணக்கத்துடன் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

**தீர்மானம் - 4**

அடுத்து, ஒன்று முதல் *5*ஆம் வகுப்பு வரை அவரவர் தாய் மொழியில் கல்வியும் - தமிழர் தமிழ் வழியில் கல்வி கற்கலாம் என்பதே உறுதியானது என்றும்; ஆறாம் வகுப்புக்கு மேல் விரும்பினால் ஆங்கிலத்தில்

படிப்பது நல்லது என்றும் புதிய கல்விக் கொள்கை கூறுவது வெவ்வேறுபட்ட 300 தாய்மொழிகளைப் பேசும் 127 கோடி இந்திய மக்களுக்கும், குறிப்பாகத் தமிழர்களுக்கும் இழிவானதும், மானக்குறைவும் ஆகும் என இம்மாநாடு கருதுகிறது. இந்தியாவிலுள்ள மான முள்ள எல்லா மாநில மக்களும், தமிழர் ஒவ்வொரு வரும் ஆங்கில மொழிவழிக் கல்வியை முற்றிலுமாக எதிர்க்க வேண்டும் என்று இம்மாநாடு கேட்டுக் கொள் கிறது. மேலும், பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகப் படிப்பு வரை அவரவர் தாய்மொழி வழியில் பாடங் கள் கற்பிக்கப்படாததால்தான் - இந்தியப் பல்கலைக் கழகங்களுள் ஒன்றுகூட, 2016-17 கல்வி ஆண்டிலும் உலகத்தரம் வாய்ந்த 200 உலகப் பல்கலைக்கழகப் பட்டியலில் இடம் பெற முடியாத மானக்குறைவான நிலை ஏற்பட்டுள்ளது என்பதை எல்லாக் கல்வியாளர் களுக்கும் மாணவர்களுக்கும் இம்மாநாடு சுட்டிக்காட்ட விரும்புகிறது. எனவே, இளைய தலைமுறையினரும், எல்லாத் துறைக் கல்வியாளர்களும் இணைந்து “ஆங்கில மொழிவழிக்கல்வி ஒழிக” என்று கோரி தெரு வுக்கு வந்து போராடவேண்டும் என்று இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

## மருத்துவக் கல்விக்கான அனைத்திந்தியப் பொதுநுழைவுத் தேர்வு எதிர்ப்பு

### தீர்மானம் - 5

“மருத்துவக் கல்விக்குப் பொது நுழைவுத் தேர்வு” என்பது, முதன் முதலாக இந்திய அரசினாலும் உச்ச நீதிமன்றத்தாலும் எல்லா இந்தியர்கள் மீதும் திணிக் கப்படுகிறது. இந்தியா முழுவதிலும் எல்லா மாநிலங் களிலும் இந்திய நடுவண் அரசின் மேல்நிலைப் பள்ளிக் களுக்கான கல்வித்திட்டம், மாநில அரசுக்கான கல்வித் திட்டம் என இரு வேறுபட்ட கல்வித்திட்டங்கள் நடை முறையில் உள்ளன. இருப்பினும், இந்திய அரசின் நடுவண் இடைநிலைக் கல்வி வாரியத்தின் (CBSE) பாடத்திட்டம் கொண்டுள்ள பள்ளிகள் மிகவும் குறை வாகவும், அந்தந்த மாநில அரசின் பாடத்திட்டப்படி கற்பிக்கும் பள்ளிகளே அதிகமாகவும் உள்ளன. மேலும், நடுவண் இடைநிலைக் கல்வி வாரியத்தின் கீழ் நடைபெறும் பள்ளிகளில் ஆங்கிலமொழி வழி யிலும் இந்தி மொழி வழியிலும் மட்டுமே பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. எனவே, இந்திய அளவில் நடை பெறும் போட்டித் தேர்வுகள், பொது நுழைவுத் தேர்வு கள் போன்ற எல்லாத் தேர்வுகளின் வினாத்தாள்களும் ஆங்கிலத்திலும், இந்தியிலும் மட்டுமே இருந்து வந்தன. இந்த ஏற்பாட்டுக்கு மக்களிடம் அண்மையில் பேரெதிர்ப்புத் தோன்றிய உடனே, இந்தி, ஆங்கிலம், அஸ்ஸாமி, வங்க மொழி, குசராத்தி, மராத்தி, தமிழ் மற்றும் தெலுங்கு ஆகிய 8 மொழிகளில் விடைகளை மட்டும் எழுத 2017 தேர்வில் வழி செய்யப்படும் என, மோடி அரசு அறிவித்துள்ளது. இதிலுள்ள சூழ்ச்சி என்ன வெனில், எப்போதும் வினாத்தாள்கள் ஆங்கிலமொழி யிலும், இந்தி மொழியிலும் மட்டுமே இருக்கும்; ஆனால், விடை எழுதும் மாணவர்கள் அவரவர் தாய் மொழியிலும் எழுதலாம் என்பது, இந்தி பேசாத மக்கள் மீது இந்தியைத் திணிப்பதும், மற்ற மொழிகளைச் சார்ந்தவர்கள் வினாவைப் புரிந்து கொண்டு அதற்கு விடை எழுத முடியாமல் செய்வதும் ஆகும். இது கல்விபெறும் மாணவர்களின் சம வாய்ப்பு உரிமைக்கு எதிரானது. எனவே, தேசியக் கல்வியின் தரத்தை உயர்த்து வது என்ற பெயரால் நடத்தப்படுகிற பல்வேறு தேசிய இனங்களை - தாய்மொழிகளைக் கொண்ட வெகுசன மக்களுக்கு எதிரான “தேசியத் தகுதிகாண் நுழைவுத் தேர்வு” (National Eligibility Entrance Test - NEET) எனும் மருத்து வக் கல்விக்கான அனைத்திந்திய பொதுநுழைவுத் தேர்வு நடத்தப்படுவதை இந்திய அரசு நீக்கும் வரை யிலும் - உச்சநீதிமன்ற அரசியல் சட்ட அமர்வின் தீர்ப்பு முறியடிக்கப்படும் வரையிலும் இந்திய அளவில் போராட வேண்டும் என இம்மாநாடு அனைவரையும் கேட்டுக் கொள்கிறது.

### தீர்மானம் - 6

இப்போதைய வேலூர் மாவட்டம், கிழக்கு மேற்காக ஏறக்குறைய 227 கி.மீ தொலைவு கொண்டதாகவும், 9 வட்டங்கள், 13 சட்டப்பேரவைத் தொகுதிகள், 31 இலட்சம் வாக்காளர்களைக் கொண்டாதகவும் மிகப் பெரிய மாவட்டமாக உள்ளது. பொதுமக்கள் தங்களின் குறை தீர்வுக்காக, மாவட்டத் தலைநகரான வேலூரில் உள்ள பல்துறை அலுவலகங்களுக்குச் சென்றுவர, மாவட்டத்தின் மேற்கு எல்லை ஊரான விளக்கல் நத்தத்திலிருந்து 80 கி.மீக்கு மேலும், கிழக்கு எல்லை ஊரான பேரம்பாக்கத்தில் இருந்து 100 கி.மீ.க்கு மேலும் பயணம் செய்து ஒரு முழு நாளைச் செலவிட வேண்டியுள்ளது. எனவே, பொதுமக்கள் நலன் கருதி யும், நிருவாக வசதிக்காகவும் வேலூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரிவினை செய்ய வேண்டும் எனத் தமிழ் நாட்டரசினை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது. இரண்டாவதாக அமைக்கப்பட உள்ள மாவட்டத்திற்கு, தற்போது கோட்டத் தலைமையிடமாக உள்ள திருப்பத் தூரைத் தலைநகரமாக்கிடவும் இம்மாநாடு தமிழக அரசினையும், வேலூர் மாவட்ட மக்களையும் கேட்டுக் கொள்கிறது.

### தீர்மானம் - 7

சென்னை-பெங்களூர்த் தேசிய நெடுஞ்சாலையை (எண். 48-பழைய எண் 46) ஆறு வழிச்சாலையாக அகலப் படுத்துவதற்கு நிலங்களைக் கையகப்படுத்தியபோது,

பழைய நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின்படி குறைந்த அளவு இழப்பீட்டுத் தொகையே நில உரிமையாளர் களுக்குக் கொடுக்கப்பட்டது. இழப்பீட்டுத் தொகையை உயர்த்தி வழங்க வேண்டும் என்று மேல்முறையீடு செய்த நில உரிமையாளர்களுக்கு மட்டும் இழப் பீட்டுத் தொகை உயர்த்தி வழங்கப்பட்டிருக்கிறது. இது ஆங்கிலேயரின் காலனி ஆட்சிக் காலத்து நடை முறை ஆகும். ஆகவே, இழப்பீட்டுத் தொகைகளை மறுமதிப்பீடு செய்து அனைத்து நில உரிமையாளர் களுக்கும் இழப்பீட்டை உயர்த்தி அளித்திடுமாறு தமிழ் நாட்டரசையும், இந்திய அரசையும் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

**தீர்மானம் - 8**

பெண்ணை ஆற்றின் குறுக்கே, கிருட்டினகிரியில் உள்ள அணைக்கு, மழைக்காலத்தில் வரும் உபரி நீரை வாணியம்பாடிக்கு மேற்கில் பாலாற்றில் இணைப் பதற்குத் தமிழ்நாடு அரசு ஏற்கெனவே திட்டமிட்ட படி முன்னுரிமை அளித்துச் செயல்படுத்த வேண்டும் என்று இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

**தீர்மானம் - 9**

வாணியம்பாடி நகரில் நியூ டவுன் பகுதியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை, வரும் 2017-18 கல்வி ஆண்டிலேயே, ஆண்-பெண் இருபாலாரும் படிக்கத் தக்க வகையில் அரசு மேல்நிலைப்பள்ளியாக ஆக்கிட வேண்டும் எனத் தமிழ்நாட்டு அரசினை இம்மாநாடு கோருகிறது.

வாணியம்பாடி நகரில் ஆண்-பெண் இருபாலாரும் படிக்கும் வகையில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றினை 2017-18 கல்வி ஆண்டிலேயே தொடங்கவேண்டும் என்று தமிழ்நாடு அரசினை இம் மாநாடு கேட்டுக் கொள்கிறது.

**ஆற்றுமணல் கொள்ளைக்குத் தடை**

**தீர்மானம் - 10**

தமிழ்நாடு தழுவிய அளவில் தாமிரபரணி ஆறு தொடங்கிப் பெண்ணையாறு, கொசத்தலை ஆறு வரை உள்ள எந்த ஆற்றிலும் எந்தப் பணிகளுக்காக வும் தனியாரோ, அரசோ ஆற்று மணலை அள்ளு வதைத் தமிழக அரசு அடியோடு தடை செய்ய வேண்டும் என்று இம்மாநாடு கோருகிறது. இதில் கேரள அரசை எடுத்துக்காட்டாகக் கொள்ள வேண்டும் என்றும் தமிழக அரசினரை வேண்டிக் கொள்கிறது.

நிலத்தடி நீரை உறிஞ்சிக் குடிநீர்புட்டி மற்றும் சுவைநீர்ப்புட்டி உருவாக்கத்திற்காக கோகோ கோலா, பெப்சி கோலா மற்றும் பன்னாட்டு நிறுவனங்களுக் குத் தமிழக அரசு 99 ஆண்டுக்குத்தகைக்கு நிலம் கொடுத்திருப்பதால் அவர்கள் சென்ற பல ஆண்டு களாக நிலத்தடி நீரை உறிஞ்சிவிட்டனர். தமிழக ஆறு களில் மணல் எடுப்பதாலும், தனியாரால் உறிஞ்சப் பட்டதாலும் நிலத்தடி நீர் 1000 அடிக்குக் கீழே போய்விட்டது. இதனை உடனே தடுத்து நிறுத்துவது இன்றியமையாதது. எனவே, ஆறுமாதகால முன்னறி விப்புக் கொடுத்து இந்த உரிமங்களை அடியோடி நீக்க வேண்டும் என்று இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

நீராதாரங்களைக் காப்பாற்றிடக் கோருதல்

**தீர்மானம் - 11**

தமிழ்நாடு முழுவதிலும் ஏரிகள், குளங்கள் மற்றும் வேளாண் நிலங்கள், தரிசு நிலங்கள், பாதுகாக்கப் படாத காடுகள் ஆகியவற்றில் சீமைக் கருவேல மரங் கள் கடந்த 60 ஆண்டுகளில் பெரும் காடுகள் போல் வளர்ந்துவிட்டன. அம்மரத்தின் வேர் நிலத்தடியிலி ருந்தும் பக்கவாட்டில் உள்ள மரம், செடிகளிலிருந்தும் நீரை உறிஞ்சிக் கொள்ளும் தன்மை உடையது. அதிக மான கரிவளியை (கார்பன்-டை-ஆக்சைடு) 24 மணி நேரமும் வெளியே கடத்திவிட்டு, காற்று மண்டலத் திலுள்ள நீர்வளியை (ஹைட்ரஜனை) இழுத்துக் கொள்ளும் தன்மையுடையது.

இந்த மரங்களை விரைவில் வேரோடு அழிக்காமல் இனியும் காலம் தாழ்த்தினால் காற்று மண்டலம் நஞ்சாக மாறுவதையும் நிலத்தடி நீர் வற்றுவதையும் தடுக்க முடியாது. ஆகையால் தமிழக அரசும், தமிழகப் பெரு மக்களும், மாணவர்களும் போர்க்கால அடிப்படை யில் இயந்திரங்களைப் பயன்படுத்தி வேரோடு உழுதுத் தள்ளி இம்மரங்களை அழித்திட இம்மாநாடு வலியுறுத் திக் கேட்டுக் கொள்கிறது.

**தீர்மானம் - 12**

1972க்குப் பிறகு தமிழ்நாட்டில் உள்ள 41,127 பெரிய, சிறிய ஏரிகளையும், அதனதன் கொள்ளளவுக்கு (ஆயக்கட்டு) நீர்பிடிக்கும் தன்மையில் தூர் வாராத தாலும், நீர்வரத்து வாய்க்கால் - நீர்ப்போக்கு வாய்க் கால்களையும் தூர்வாராததாலும் குளங்களிலும், குட் டைகளிலும், ஆகாயத்தாமரை, பாசி, ஊர் அழுக்குகள் கலந்து நீர் கெட்டு விட்டதாலும் வேளாண் பாசனத் திற்கு ஒரு போகத்திற்குக் கூட நீர்கிடைக்கவில்லை. மக்கள் குடிநீருக்கான நீர் ஆதாரங்கள் வற்றிவிட்டன. ஆடு, மாடுகள் குடிப்பதற்கு நீரின்றியும் குளிப்பதற்குக் குட்டையின்றியும் நோய்வாய்ப்படுகின்றன; பால் வற்றி விடுகின்றன; கன்றுகளை ஈனுவதும் குறைந்து வருகிறது. இவ்வளவு இடர்ப்பாடுகளையும் மனத்திற்கொண்டு தமிழக அரசினரும், அரசியல் கட்சிகளும், சமூக நல அமைப்புகளும், படித்த இளைஞர்களும் சீமைக் கரு வேல மரங்களை அழிப்பதிலும், ஆற்றுமணல் எடுப்பதை

முற்றிலுமாகத் தடுப்பதிலும், ஏரிகளைத் தூர்வாரச் செய்வதிலும் எல்லோரும் முனைப்பாகச் செயல்பட வேண்டும் என இம்மாநாடு அனைத்துப் பிரிவினரையும் கோருகிறது.

**தீர்மானம் - 13**

பார்த்தினியம் எனும் நச்சுச்செடி அயல் நாட்டிலிருந்து இங்குப் பரப்பப்பட்டுள்ளது. அதில் ஆடு தின்பவை, ஆடுதின்னாதவை என இரண்டு வகைகள் உண்டு. இரண்டு வகைப் பார்த்தினியச் செடிகளின் இலையோ, பூவோ மனிதர்களின் உடம்பில் உரசினால் உயிருக்கு உலை வைக்கும் ஒவ்வாமை நோயையும், தோல் அரிப்பு நோயையும் மனிதர்களுக்கும் கால்நடைகளுக்கும் உண்டாக்குகின்றன. எனவே, ஒவ்வொரு ஊரிலும் உள்ள மாணவர்களும் இளைஞர்களும் ஊர்ப் பொதுமக்களும் இணைந்து ஒரே நேரத்தில் இச்செடிகளை வேரோடு பிடுங்கி எரித்துவிடவேண்டும் என்று பேரன்போடு அனைத்துப் பிரிவினரையும் இம்மாநாடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறது.

## வேளாண்மையையும் வேளாண் தலைமக்களையும் காக்கக் கோருதல்

**தீர்மானம் - 14**

*2016-17*ஆம் ஆண்டில் தென்மேற்குப் பருவமழையும், வடகிழக்குப் பருவ மழையும் பொய்த்து விட்டதாலும், கருநாடக அரசின் பிடிவாதத்தால் காவிரியில் நீர் விடப்படாததாலும் தமிழ்நாடு வேளாண் பயிர்கள் *25* மாவட்டங்களில் அடியோடு அழிந்து விட்டன. நன்செய்ப் பயிர்கள் கருகிவிட்டன. புன்செய்ப் பயிர்கள் சாவி ஆகிவிட்டன. பயிர்கள் நாசமடைந்துவிட்டதைக் கண்டு மனங்கொதித்தும், நெஞ்சு வெடித்தும், நஞ்சு உண்டும் தஞ்சை, நாகை, திருவாரூர், திருவண்ணாமலை, இராமநாதபுரம், பெரம்பலூர், அரியலூர் ஆகிய மாவட்டங்களில் *05.01.2017*க்குள் *200*க்கும் மேற்பட்ட வேளாண் தொழில் தலைமக்கள் மடிந்துவிட்டார்கள். இது *1876*இல் தமிழகத்தில் ஏற்பட்ட தாதுப் பஞ்சத்தை நினைவூட்டுகிறது.

எனவே, வேளாண் மக்களின் இழப்பீடுகளுக்கு நன்செய்க்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. *40,000*/-உம் புன்செய் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.*25000*/-உம் வழங்க வேண்டும் என்பதுடன் உயிரிழப்புகளுக்கு ஆளான குடும்பங்களுக்கும் ஒரு குடும்பத்திற்கு மிகக் குறைந்தது ரூ.*2.5* இலக்கம் வழங்குமாறும் தமிழக அரசினையும், இந்திய அரசினையும் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

தமிழ்நாட்டில் வேளாண் தொழிலாளர்கள் எண்ணிக்கை *60* விழுக்காடு ஆகும். பயிர்கள் கருகிப் போனதால் வேலை இழந்த வேளாண் தொழிலாளர்கள் வறுமையில் செத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் குடும்பம் ஒவ்வொன்றிற்கும் ஐம்பதாயிரம் வழங்கிட வேண்டும் என இம்மாநாடு தமிழக அரசையும், இந்திய அரசையும் கேட்டுக் கொள்கிறது.

## தாய்மொழி வழிக் கல்வி

**தீர்மானம் - 15**

பாரதிய சனதா கட்சி தலைமையிலான இன்றைய இந்திய ஆட்சி, இந்தியாவில் ஒற்றை ஆட்சி என்கிற பெயரால் ஒரு சர்வாதிகார ஆட்சியை நிலை நாட்டுவதையும், இராமராச்சியம் அமைப்பதையும் கொள்கையாகக் கொண்டுள்ளது. இதற்கு ஏற்றாற்போல் இந்தியா முழுவதிலும் ஒற்றைக் கல்வித் திட்டத்தைத் திணித்து ஆங்கிலம் அல்லது இந்தியைப் பாடம் கற்பிக்கும் மொழியாக்கிடவும் பகவத்கீதை, இராமாயணம், பாரதம், சோதிடம் முதலானவற்றைப் பள்ளிக் கல்வி முதல் பல்கலைக்கழகம் வரை பாடத்திட்டங்களில் புகுத்தவும் கடந்த இரண்டரை ஆண்டுகளாக முயல்கிறது. இதற்கு ஏற்ற தன்மையில் ஏற்கெனவே மாநில அதிகாரப் பட்டியலில் (State List) இருந்த கல்வித் துறையை நடுவண் அரசுக்கும், மாநில அரசுக்கும் உரிமையுடைய பொது அதிகாரப் பட்டியலுக்கு (Concurrent List) அப்போதைய அரசு *03.01.1976*இல் மாற்றிவிட்டது.

கல்வி பொதுப்பட்டியலில் சேர்க்கப்பட்டதன் விளைவாக, கல்வியை முற்றிலுமாக நடுவண் அரசு அதிகாரப் பட்டியலில் உள்ள துறை (Union List) கல்வியில் கை வைக்க மேலதிகாரம் பெற்றதாகக் கருதி, இந்திய அரசு *03.01.1976* முதல் இப்போது வரை நடந்துகொள்கிறது. அதன் விளைவாகத்தான் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு (UGC), தேசியப் பண்பாட்டுக் கல்வி ஆராய்ச்சி நிறுவனம் (NCERT), நடுவண் இடைநிலைக் கல்வி வாரியம் (CBSE) முதலான அதிகாரம் வாய்ந்த நிருவாக அமைப்புகள் நடுவண் அரசில் தோன்றின. இவற்றின் விளைவாகத்தான், இன்றைய மோடி அரசு இந்தியா முழுவதற்குமான கல்விக் கொள்கையையும், தேசியத் தகுதிகாண் நுழைவுத்தேர்வு நடத்துவதையும் மற்றும் பள்ளிகளில் சமற்கிருதம் கற்பிப்பதையும் திணிக்க முற்பட்டுள்ளது. இவை இந்தியாவில் உள்ள எல்லா மொழி மக்களின் உரிமையையும் மாநிலங்களின் உரிமையையும் அடியோடு பறிப்பதில் முடிந்து விடும்.

இந்த வெளிச்சத்தில் இவை அனைத்தும் அனைத்திந்தியத் தன்மையிலான சிக்கல்கள் ஆகும். இதை எதிர்த்து முறியடிக்க அனைத்திந்திய அளவில் விழிப்புணர்வுப் பரப்புரை மேற்கொள்ளுதல், பேரணிகள் - போராட்டங்கள் - மாநாடுகள் நடத்துதல், ஆங்கிலம் உட்பட்ட எல்லா மொழிகளிலும் விளக்கக் குறுநூல்கள் (Pamplets) வெளியிடல் வேண்டும் என்றும் தமிழக

மக்களையும், தமிழகக் கல்வியாளர்களையும் இம்மா நாடு வேண்டிக் கொள்கிறது.

இதற்கு உறுதியான நடவடிக்கையாக *26.01.1950* முதல் *02.01.1976* வரையில் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் கண்டிருந்தபடி மாநில அரசு அதிகாரப் பட்டியலுக்குக் கல்வித் துறையை மாற்றுவது ஒன்று தான், இடைக்காலத் தீர்வாக அமையும் என இம் மாநாடு உறுதியாக நம்புகிறது. இந்தப் பார்வையை எல்லோரும் வரவேற்று, எல்லாப் பிரிவினரும் ஒன்று பட்டு அனைந்திய அளவில் செயல்பட முன்வர வேண்டு மென இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது. இத்தன்மை யான கோரிக்கையை மற்ற அமைப்பினரும் மேற் கொண்டுள்ளது மிகவும் வரவேற்புக்குரியது.

### மாநில மொழியே மாநிலத்தின் ஆட்சிமொழி - இந்திய அரசின் அலுவல் மொழி

**தீர்மானம் - 16**

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் எட்டாவது அட்ட வணையில் கண்டுள்ள *22* மொழிகளும் வெறுமனே "மொழிகள்" (Languages) என்ற தலைப்பில் அரசமைப் புச் சட்ட விதிகள் *344(1)* மற்றும் *351* ஆகியவற்றின் படி வைக்கப்பட்டுள்ளன. இவை பேசப்படும் மொழி களாகவும் தாய்மொழிகளாகவும் இருக்கின்றன. பல மாநிலங்களில் இவை ஆட்சி மொழிகளாகவும் இருக் கின்றன. எனவே, இந்த *22* தாய்மொழிகளுள் ஒன்றான இந்தி மொழியை மட்டும் இந்திய நடுவண் ஆட்சி அலகுகளின் "அலுவல்மொழியாக" (Official Language) அரசமைப்புச் சட்டப்படி ஆக்கியுள்ளது என்பது, இந்தி பேசும் மக்களின் மேலாதிக்கம் இந்தியா முழுவதும் பரவுவதற்கு வழிவகுக்கும் என இந்தியா முழுவதிலும் உள்ள இந்தி பேசாத மக்களைப் புரிந்து கொள்ளச் செய்யவேண்டும். எனவே, 8ஆவது அட்டவணையில் இன்றுவரை பட்டியலிடப் பட்டுள்ள *22* மொழிகளு டன் குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மேற்பட்ட மக்களால் பேசப்படும் மற்றெல்லா இந்திய மொழிகளையும் இப்பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும். மேலும், இந்தி மட்டுமே இந்திய அலுவல் மொழியாவதைத் தடுப்பதுடன் இப்போதுள்ள அரசமைப்புச் சட்டவிதி கள் *343* முதல் *351* வரையில் உள்ளவை அடியோடு நீக்கப்பட்டு 8ஆம் அட்டவணையில் கண்டுள்ள இந்தி உள்ளிட்ட எல்லா மொழிகளும் அலுவல் மொழிகளாக ஆக்கப்படும் வகையில் புதிய விதிகள் சேர்க்கப்பட வேண்டும். இதற்கு உடனடியாக ஆவன செய்யவேண் டும் என இந்திய அரசினரையும் மற்ற மாநில அரசு களையும், தமிழ்நாட்டு அரசினரையும் மற்றும் எல்லாக் கட்சிகளையும் இம்மாநாடு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

**தீர்மானம் - 17**

தமிழ்நாட்டில் கல்வி மொழியாக, ஆட்சி மொழி யாகத் தமிழ் மட்டுமே இருக்கவேண்டும் என்றும், தமிழிலிருந்து மதத்தைப் பிரித்துவிட வேண்டும் என்றும் தம் மொழிக்கொள்கை பற்றித் தந்தை பெரியார் அவர் கள் *28.06.1964*இல் விடுதலை தலையங்கத்தில் தெளி வாகக் குறிப்பிட்டுள்ளார். தந்தை பெரியார் பெய ரையும், அறிஞர் சி.என். அண்ணாத்துரை பெயரை யும் மூச்சுக்கு முந்நூறு முறை உச்சரிக்கும் திராவிடக் கட்சிகள் தாம் *06.03.1967* முதல் *06.01.2017* வரை *50* ஆண்டுகள் தமிழ்நாட்டில் ஆட்சி நடத்திக்கொண் டுள்ளன. ஆனால், தமிழ் நாட்டில் அரசுத் தொடக்கப் பள்ளிகள் சிலவற்றிலேயே எல்லாப் பாடங்களும் ஆங்கில மொழி வழியில் இன்று கற்பிக்கப் படுவதும், அரசுப் பள்ளிகளில் மட்டும் பெரும்பாலான பள்ளி களில் *12*ஆம் வகுப்பு வரை தமிழிலும், ஆங்கிலத்தி லும் கற்பிக்கப்படுவதும் மற்றும் பல்லாயிரக்கணக்கான தனியார் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆங்கில மொழி வழியில் மட்டுமே கல்வி கற்பிக்கப்படுவதும், தமிழ்நாட்டு தலைமைச் செயலகம் தொடங்கி ஊராட்சி வரையிலும் தமிழ் மட்டுமே ஆட்சிமொழி என்கிற நிலை உருவாக்கப்படாமல் இருப்பதும், தமிழ்நாடு உயர்நீதிமன்றத்தில் தமிழ் வழக்காடு மொழியாகவும் தீர்ப்பெழுதும் மொழியாகவும் இல்லாத நிலை இருப் பதும், தமிழ்நாட்டரசின் மேற்பார்வையில் உள்ள *58,000* இந்துக் கோயில்களில் *2017*இலும் தமிழன் தமிழில் வழிபாடு (பூசை) செய்ய முடியாமல் இருப்ப தும், தமிழகத்தில் உள்ள எல்லாத் தமிழர்க்கும், இந்தியா வில் உள்ள எல்லாத் தமிழர்க்கும், உலகில் உள்ள எல்லாத் தமிழர்க்கும் இழிவும், மானக் குறைவும் ஆகும். இந்த இழிநிலையைப் போக்கிடத் தமிழ்நாட்டில் உள்ள எல்லாக் கட்சிகளும் இயக்கங்களும் மக்களைத் திரட்டி போராட்டம் நடத்த வேண்டும் எனவும் இம்மாநாடு முழுமுதற் கோரிக்கையாக, மக்கள் முன் வைக்கிறது என்பதை அன்புடனும், பணிவுடனும் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறது.

### இயற்கை வேளாண் விஞ்ஞானி கோ.நம்மாழ்வார் 3ஆம் ஆண்டு நினைவேந்தல் விழா

காஞ்சிபுரத்தில் 30-12-2016 அன்று காலை 10 மணிக்கு இயற்கை வேளாண் விஞ்ஞானி கோ.நம்மாழ்வார் அவர் களின் 3ஆம் ஆண்டு நினைவேந்தல் மற்றும் படத்திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு பா.பேரின்பன் தலைமை தாங்கினார். காஞ்சி அமுதன் வரவேற்புரை ஆற்றினார். விவசாயிகள் சங்கத் தலைவர் கு.எழிலன் நம்மாழ்வார் படத்தைத் திறந்து வைத்தார். மா.பெ.பொ.க. மாவட்டச் செயலாளர் சி.நடராசன் மற்றும் பல தோழர்கள் உரையாற்றினர். தீ.கோபால கிருட்டிணன் நன்றி கூறினார்.

செய்தி : **தீ.கோபாலகிருட்டிணன்**

கட்டுரைத் தொடர்-48

# திராவிடர் இயக்கங்கள்; தமிழ்த் தேசியத்திற்குத் தடைக்கல்லா? படிக்கல்லா?

- வாலாசா வல்லவன்

(1938இல் திசம்பரில் சென்னையில் நடைபெற்ற நீதிக்கட்சியின் மாநில மாநாட்டில் பெரியாரின் தலைமையுரை-சென்ற இதழ் தொடர்ச்சி...)

தோழர்களே!

நம் தற்கால நிலைமையைச் சற்று யோசித்துப் பாருங்கள்.

மேலும் அரசியல் துறையில் நாம் மிகப் பிற்போக் காளர்கள் என்றும், உத்தியோக வேட்டைக்காரர்கள் என்றும் தேசீய உணர்ச்சியற்றவர்களென்றும் ஜமீன்தார் கட்சியினர் என்றும் நம் எதிரிகள் நம்மை அழைக்கின்றனர். அரசியலில் நாம் எவ்வகையில் பிற்போக்காளர்கள்? நமது அடிப்படையான அரசியல் கொள்கை எல்லா மக்களும் சம நீதியும், சம உரிமையும், சம சந்தர்ப்பமும் பெற வேண்டுமென்பதே. இக்கொள்கையை இந்நாட்டுத் தீவிர அரசியல் கட்சியான காங்கிரஸ் கைக்கொண்டிருக்கின்றதாவென்று கேட்கின்றேன்? அப்படியிருந்தால் இன்று காங்கிரசில் பார்ப்பனர்களே ஆதிக்கம் பெற்றிருக்கவும், மற்றவர்கள் கைதூக்க மாத்திரம் உரிமை கொண்டவர்களாகவும் இருக்க யாது காரணம்?

அரசியல் துறையில் காங்கிரஸ்காரர்கள் அந்நியர்கள் இந்நாட்டை விட்டு விரட்டப்பட வேண்டுமென்று சொன்னால் நாங்கள் வேண்டாமென்கிறோமா? காங்கிரஸ்காரர்கள் பூரண சுயேச்சை வேண்டுமென்றால் நாங்கள் கூடாது; கால் சுயேச்சை, அல்லது அரை சுயேச்சையே போதுமென்கிறோமா? காங்கிரஸ்காரர்கள் குடிகளுக்கு வரியே போடக்கூடாதென்றால், நாங்கள் வரி போட்டுத் தான் ஆகவேண்டுமென்று சொல்லுகிறோமா? காங்கிரஸ்காரர்கள் மக்கள் எல்லாம் எழுதப் படிக்கத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால், நாம் அது தப்பு; ஒரு ஜாதி மட்டுந்தான் படிக்க வேண்டும்; மற்றவர்கள் படிப்பது குற்றமென்கின்றோமா? காங்கிரஸ்காரர்கள் ஜாதி வேற்றுமை கூடாது; எல்லோரும் ஒரு குலம் என்றால், நாங்கள் ஜாதி வேற்றுமை இருக்கத்தான் வேண்டும் என்கின்றோமா? காங்கிரஸ்காரர்கள் மக்களெல்லாம் கோவிலுக்குள் யாதொரு தடையுமின்றி நுழையலாம் என்றால், அது தவறு என்று கூறுகிறோமா? காங்கிரஸ்காரர்கள் இந்நாட்டில் வரிகொடுக்கும் சகல ஜாதி, மத, வகுப்புக்களுக்கும் நிர்வாகத்திலும், நீதியிலும், பதவியிலும் சம உரிமையளிக்கப்பட வேண்டும்; அதற்குள்ள குறைகள் தகர்க்கப்பட வேண்டும் என்றால், அது கூடாது என்கிறோமா? எந்த வகையில் நாம் பிற்போக்காளர் என்பதை அவர்கள் தக்க ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டுவார்களா?

நாம் உத்தியோக மோகங்கொண்டவர்கள் என்று குறை கூறப்படுகின்றோம். ஆனால் நமக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய விகிதாசாரத்திற்கு அதிகப்படியான உத்தியோகம் பெறவேண்டும் என்று விரும்புகின்றோமா? பார்ப்பனர்கள் தங்கள் விகிதாச்சாரத்துக்குப் பெற்றுள்ள அளவுக்கு மேல் உத்தியோகம் பெறவோ, அன்றி உத்தியோகங்களெல்லாம் நமக்குமாத்திரந்தான் இருக்க வேண்டு மென்றோ ஆசைப்படுகின்றோமா? அல்லது கடந்த 17 வருட ஆட்சியில் எந்த வகுப்பார்களை அவர்களுக்கு நியாயமாகச் சேர வேண்டிய விகிதத் தைப் பெறமுடியாமல் செய்துவிட்டோம்? அல்லது அவ்விகிதாசாரத்தைக் குறைத்து விட்டோம்? உத்தியோகம் பெற அனை வர்க்கும் உரிமை உண்டு. எல்லோரும் அதற்குத் தகுதியுடை யவர்களாக வேண்டியவர்களேயாவார்கள்.



உத்தியோகத்திற்குரிய அதிகாரம், பொறுப்பு, செல்வாக்கு எல்லாம் நாட்டு மக்களை நன்கு நடத்தவும், அவர்களுக்குத் தொண்டாற்றவுமேயாகும். உத்தியோகத்திற்கு ஏற்பட்டுள்ள சம்பளம் இந்நாட்டு மக்கள் கொடுக்கும் வரிப் பணத்திலிருந்தே கொடுக்கப்படுகின்றது. அத்தகைய உத்தியோகத்தைப் பெற விரும்புவது நாட்டிலுள்ள எல்லா வகுப்பு மக்களின் பிறப்புரிமை என்று சொல்வதும் உத்தியோகம் பெற முயற்சிப்பதும் எப்படி உத்தியோக வேட்டையாகு மென்பது நமக்கு விளங்கவில்லை.

நமக்குத் தேசீய உணர்ச்சியில்லையா? 'தேசீய' என்ற ஆரிய (வட) மொழிச் சொல்லுக்குச் சரியான ஆங்கில மொழிச் சொல் நேஷனல் (National) என்பதாகும். 'நேஷனல்' என்ற சொல்லுக்கு 'ஜாதியம்' என்பதுதான் சரியான கருத்து எனக் கற்றோர் கூறுகின்றனர். அகராதியும் சொல்லுகிறது.

ஐரோப்பாக் கண்டம் என்ற ஒரு பூபாகத்தில் ஜெர்மனி நேஷன் வேறு; இத்தலி நேஷன் வேறு. ஐரோப்பிய மகாயுத்தத்திற்கு முன்பு போலிஷ் ஜனங்கள் தனி நாடின்றி ருஷிய, ஆஸ்திரிய, பிரஷிய ஆதிக்கங்களுக்குட் பட்டிருந்தும் தங்களை ஒரு நேஷன் என்று சொல்லி வந்தனர். யூதர்களுக்கெனத் தனிப்பட்ட நாடொன்று தற்போது இல்லாவிடினும் யூதர்களும் ஒரு நேஷனே.

மேலே காட்டியபடி நேஷன் என்ற வார்த்தைக்கும் பொருள் கொண்டு பார்த்தால் இந்தியாவை ஒரு நேஷன் என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்? மொழிகளை அடிப்படையாக வைத்துப் பிரித்தால் இந்தியாவை அநேக நேஷன்களாகப் பிரிக்கலாம். அல்லது அங்கமச்ச அடையாளத்தின் மீது பாகுபாடு செய்தாலும் ஆரியர்கள், திராவிடர்கள், மங்கோலியர்கள் எனப் பல (நேஷன்) பிரிவுகளாகும். பழக்கவழக்க சமுதாயக் கோட்பாடுகளைக் கொண்டு பிரித்தாலும், அதுவும் பார்ப்பனர், பார்ப்பன ரல்லாத இந்துக்கள் எனப் பல ஜாதி வகுப்புக்களாகப் பிரிக்கப்படும். மற்றும் எவ்வகையில் பார்த்தாலும் 'இந்திய நேஷன்' என்பதற்கு இந்தியா முழுமையும் சேர்ந்த நிலப்பரப்பு மாத்திரம் என எவ்வாறு பொருள்படும்?

ஆந்திர தேசியவாதிகள் சென்னை மாகாணத்தை விட்டுப் பிரிந்து தனி மாகாணமொன்று ஏற்படுத்தி அதன் நிர்வாகத்தைத் தாங்களே மேற்கொள்ள வேண்டுமென்று முயற்சிக்கின்றனர். அவ்வாறே ஒரிசாவும், சிந்துவும் தனித்தனி மாகாணமாய் விட்டன. பர்மாக்காரர்கள் இந்தியாவிலிருந்து பிரிந்து 'பர்மா பர்மியருக்கே' (Burma for Burmans) என்று தீவிர கிளர்ச்சி செய்து வெற்றி பெற்றது நாம் அறிந்ததே. இலங்கைக்காரர்களும் இப்படியே. மற்றொரு வகையில் வடமேற்கெல்லை முஸ்லீம்கள் இந்துக்களிடமிருந்து பிரிந்து கொண்டார்கள். இப்படியே ஒரே மதத்தினரும், ஜாதியினரும் கூடத் தனித்தனி பிரிந்துபோக ஆசைப்படும்போது, இந்திய தேசிய சங்கம் என்னும் காங்கி ரஸும் இதை அனுமதிக்கும்போது, ''தேசீயம்'', ''தேசீயம்'' என்று பறையறைவதின் அர்த்தந்தான் என்ன என்பது எனக்கு விளங்கவில்லை.

வங்காளிகளிடமிருந்தும், குஜராத்திகளிடமிருந்தும், காஷ்மீரி களிடமிருந்தும், சிந்திகளிடமிருந்தும், தமிழ்நாட்டினர், ஆந்திர நாட்டினர், மலையாள கன்னட நாட்டவர் பிரிந்து போக வேண்டு மென்று எண்ணுவது தேசீயத்திற்கு விரோதமா? அதேபோல் ஆரியர்களிடமிருந்தும் மங்கோலியர்களிடமிருந்தும், திராவிடர்கள் பிரிந்துபோக நினைப்பது தேசீயத்திற்கு விரோதமாகுமா? வெள்ளையர் ஆட்சியின்கீழ் இல்லாவிட்டால் அந்நியர் படையெடுப்பினின்று நம்மைக் காத்துக் கொள்ள முடியாதெனக் கூறப்படுமானால் சிலோன், பர்மா இவைகளைப் போலவோ அன்றி கனடா, ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா இவைகளைப் போன்றோ தமிழ்நாடோ திராவிட நாடோ பிரிந்திருக்கலா மல்லவா? வெள்ளையர் ஆட்சியின் கீழேயே இருக்கலாகாது; பூரண சுதந்தரம் பெற்ற தேசமாக இருக்கலாம் எனப்படுமானால் ஐரோப்பாவில் 3 கோடி 4 கோடி ஜனத்தொகை கொண்ட பெல்ஜியம், ஹாலண்டு, ஸ்விட்ஸர்லாண்டு, டென்மார்க் போல சென்னை மாகாணமோ, தமிழ்நாடோ தனித்த நாடாக இருப்பது அசாத்தியமா?

அப்படிக்கின்றி இந்திய தேசீய சபையின் சர்வாதிகாரி குஜராத்தி நேஷனைச் சேர்ந்தவர்; பெருந்தலைவர் களிலே ஒருவர் காஷ்மீரி நேஷனைச் சேர்ந்தவர்; மற்றொருவர் வங்காளி நேஷனைச் சேர்ந்தவர். நிர்வாக சபையினர் அனைவரும் தமிழர்களோ, தமிழ் நாட்டினரோ அல்லாமல் இதரர்களாயிருந்துகொண்டு தேசீயம் பேசுவதென்றால் காங்கிரஸ் உண்மையில் எவ்வாறு தேசீய சபையாகும்? அன்றியும் இந்தியா முழுவதும் ஒரே நாடு என்று தான் எவ்வாறு சொல்வது? அவ்வாறு கூறுவதற்குப் பூகோளப் படம் தவிர வேறு என்ன ஆதாரமிருக்கிறது? ஐரோப்பிய பூகோளப் படத்தைப் போலவே இந்தியப் பூகோளப் படமும் வருடத்திற்கு ஒருமுறையில்லாவிட்டாலும் அடிக்கடி திருத்தப்படு வதை நாம் பார்க்கிறோம். இரண்டு ஜில்லாக்கள் ஒரு ஜில்லா வாகின்றன; பெரிய மாகாணங்கள் சிறியனவாகவும், சிறியன பெரியனவாகவும், மாற்றியமைக்கப்படுகின்றன. சென்னைக் காரனும் வங்காளியும் சுரண்டுவதை பர்மாக்காரன் பொறுக்க முடியாமல் துடிக்கிறான். தென்னாட்டான் சுரண்டுவதைப் பொறுக்கமாட்டாமல் சிங்களத்தான் சீறுகிறான். குஜராத்தி சுரண்டலும் இந்து மார்வாடி சுரண்டலும் தமிழ்நாட்டைப் ''பாப்பரா''க்குகிறது. இதற்கு நாம் துடிதுடித்தால் தேசீயத்திற்கு விரோதமாய் விடுகிறது! திராவிட மக்கள் (தமிழ் மக்கள்) மீது ஆரீய மதம் சுமத்தப்பட்டு அத்தமிழர் உழைப்பின் பலனையெல் லாம் தமிழரல்லாத ஒரு சிறு கூட்டத்தவர்கள் பகற்கொள்ளை போல் சுரண்டுவதை, உறிஞ்சுவதை, இது நீதியா, முறையா, அடுக்குமா என்று கேட்கப் புகுந்தால் அது தேசீய துரோக மாவதுடன் ராஜதுவேஷமும், வகுப்புத் துவேஷமுமாகி விடுகிறது. இம்மாதிரி தேசீய வேஷம் போட்டு நாம் அழிந்து போவதா? அல்லது அதைக் கண்டு பயந்து தற்கொலை செய்து கொள்வதா? தோழர்களே! ஆழ்ந்து யோசியுங்கள்.

உலக ஒற்றுமையை நான் வெறுப்பவனல்ல. உலக மக்கள் சமதர்ம வாழ்வை மேற்கொள்வதை வேண்டாமென்று கூறவில்லை. மக்கள் யாவரும் விகிதாசாரம் உழைத்து அவ்வுழைப்பின் பலனை விகிதாசாரம் பகிர்ந்து, தத்தம் தகுதிக்கும் தேவைக்கும் அவசியமான அளவு அனுபவிப்பதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் தேசீயம் என்றும், தேச சேவையென்றும், தேச பக்தி என்றும், தேச விடுதலை என்றும், தேச ஒற்றுமை என்றும், ஆத்மார்த்தம் என்றும், பிராப்தம் என்றும் பல பல சொற்களைக் காட்டி மெய்வருந்திப் பாடுபட்டுப் பொருளீட்டும் பொது மக்களை, கட்டின ஆடை கசங்காமல், மெய்யில் வெய்யில் படாமல் வாழ்க்கை நடத்தும் ஒரு சிறு கூட்டத்தார், வஞ்சித்து, ஏமாற்றி வயிறு வளர்ப்பதை, ஏன்? உழைப்பாளிகளைவிட அதிகச் சுகமான வாழ்வு வாழ்வதை அடியோடு ஒழிக்க வேண்டுமென்பதற்காகவே நான் இதைச் சொல்லுகிறேன். ஆகவே தேசீயம் என்கின்ற பேச்சு ஆத்மார்த்த விஷயத்தில் மோக்ஷம் வாங்கித் தருவது என்ற கூற்றுக்குச் சரியான கருத்தைக் கொண்டதேயாகும்.

### நாம் செய்தவை

தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் என்னும் பார்ப்பனரல் லாத மக்களடங்கிய ஸ்தாபனத்தின் பெயரால் 1920ஆம் ஆண்டு தொடங்கி 17 வருடகாலம் அரசியல் அதிகாரத்திலே ஆலோசனை கூறுபவர்களாகவும், சில இலாக்காக்களின் நிர்வாகத் தலைவர் களாகவுமிருந்து நம்மவர் நாட்டிற்குச் சேவை செய்துவந்த காலத்தில் சுயராஜ்யம் பெருவதற்குத் தடையாக அவர்கள் செய்த காரியம் யாவை என்றும், நாட்டு மக்கள், நலத்திற்குச் செய்ய வேண்டுவனவற்றில் செய்யத் தவறியன யாவை என்றும் யாராவது சொல்ல முன்வருவார்களா என நான் அவர்களை அறைகூவி அழைக்கின்றேன்.

சமுதாயத்தில் ஜாதிபேதக் கொடுமைகளை ஒழிக்க அரும்பாடுபட்டு, மக்களாயிருந்தும் கேவலம் விலங்குகள் போல நடத்தப்பட்ட, தெருவிலும் நடக்கத் தகுதியற்றவர்கள் எனக் கொடுமைப்படுத்தப்பட்ட மக்களுக்குச் சமுதாய உரிமைகளை வாங்கிக் கொடுத்தது யார்? சகல ஜாதி, மத வகுப்பினருக்கும் சமுதாய சேவையிலும், அரசாங்க சேவையிலும் பங்கெடுத்துக் கொள்ளச் சந்தர்ப்பம் அளித்தது யார்? கல்வித் துறையில் பிற்போக்கடைந்திருந்த மக்களுக்கு பலவகை வசதிகளையுண்

டாக்கி அவர்களும் கல்விபெற்று எத்தகைய பணிக்கும், பதவிக்கும், சேவைக்கும் அருகதையுடையவர்களாகும்படி செய்தது யார்? ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகளல்லவா?

1920ஆம் ஆண்டில் 1,25,00,000 ரூபாய் கல்விக்காக நம்மாகாணத்தில் சர்க்காரால் செலவு செய்யப்பட்டது. அத் தொகையில் பெரும்பாகம் மேல் ஜாதிப் பிள்ளைகள் படிக்கும் உயர்தரப் படிப்பிற்கே செலவிடப்பட்டு வந்தது. கல்வியிலாகா நிர்வாகமும், உத்தியோகமும் இந்துக்களில் 100க்கு 95 விகிதம் பார்ப்பனர் கையிலேயே இருந்து வந்தது. இக்காரணத்தால் பார்ப்பனரல்லாத மக்களின் பிள்ளைகள் ஆரம்பப் படிப்பு கூடப் படிக்க முடியாமற் போய்விட்டது. ஜஸ்டிஸ் மந்திரிகள் காலத்தில் தாங்கள் விரும்பியபடி நிர்வாகத்திலும் உத்தியோகங்களிலும் போதிய அளவு மாறுதல்கள் செய்ய இயலவில்லை யெனினும் முன்பு கல்விக்குச் செலவு செய்யப்பட்ட தொகையைவிட இரண்டு மடங்கு தொகையான ரூ.2,50,00,000 செலவிட்டிருக் கின்றார்கள். 1937இல் கல்விக்காக 2,55,00,000 ரூபாய் செலவிட்டிருக்கின்றனர். இத்தொகையில் பெரும்பாகம் ஆரம்பக் கல்விக்கே செலவிடப்பட்டது. இம்மாதிரியே சுகாதாரம், வைத்தியம் முதலிய இலாக்காக்களும் பலவழிகளிலும் அவர்களாட்சியில் முன்னேற்றமடைந்து வந்திருக்கின்றன.

**பொருளாதாரம்**

சர்க்கார் அதிகாரிகள் சம்பளச் செலவில் சுமார் ஒரு கோடி ரூபாய் குறைப்பதற்கு வேண்டிய பிரயாசையை ஜஸ்டிஸ் கட்சியார் பதவிக்கு வந்தவுடன் எடுத்துக் கொண்டனர். வரி விஷயத்தில் 100க்கு 25 விகிதம் வரையில் குறைக்க ஏற்பாடு செய்தனர். பல துறைகளிலும் அபிவிர்த்தியும் செய்துகொண்டு, வரியையும் குறைப்பதென்றால் அதுவும் இன்று இருப்பதுபோல் பூரண அதிகாரமும், சட்டப்படி உரிமையும் இல்லாத காலத்தில் எவ்வளவு சிரமம் என்பதை ஆலோசியுங்கள். இதற்குமேல் அவர்களிட மிருந்து அதிகமாக யார் எதிர்பார்க்கக்கூடும்?

**இன்றைய மந்திரிகள்**

பூரண அதிகாரம் பெற்ற இன்றைய மந்திரிகளோ பள்ளிக்கூடங்களை எடுக்கின்றார்கள். பிள்ளைகள் சம்பளங்களை உயர்த்துகிறார்கள். கல்வி விஷயத்தில் பிற்போக்கான ஜாதி யார்களுக்கு இதுவரை இருந்து வந்த சில வசதிகளையும் குறைக்கின்றனர். பல உத்யோகங்களையும் நீக்குகின்றார்கள். ஆனால் கூடவே புது வரியும் போடத்தவறுவதில்லை. வரவு செலவுத் திட்டத்தைச் சரிப்படுத்த முடியாமல் புதுப் புதுக் கடன்கள் வாங்கி வருகின்றார்கள். ஏற்கனவே 18 மாதத்தில் 4 கோடி ரூபாய் கடன் வாங்கியாகிவிட்டது.

**நிர்வாகத் திறமை**

ஜஸ்டிஸ் மந்திரிகளுக்கு நிர்வாகத் திறமையில்லை யெனக் குறைகூறினார்கள். இன்று காங்கிரஸ் மந்திரிகள் தங்களால் நிர்வாகம் செய்ய முடியவில்லையே என வெளிப்படையாகவே சொல்லிக் கொள்ளுகின்றனர். தாங்கள் போட்ட நிர்வாக உத்தரவுகளை அடிக்கடி மாற்றிவருவதும் நாம் அறிந்ததே. அவர்கள் செய்யும் காரியங்கள் வகுப்புணர்ச்சியைக் கொண்டு செய்யப் படுவதாகப் பொது ஜனங்களால் குறைகூறப்படவும் அதைச் சரியென ஒப்புக்கொண்டு தங்கள் காரியங்களைத் திருத்திக்கொண்டு வருவதையும் யாரே உணராதார்? உத்தியோகங்களைச் சிருஷ்டிப்பதிலும், உத்யோகஸ்தர்களை நியமிப்பதிலும், தள்ளுவதிலும் வகுப்புணர்ச்சி ததும்பி நிற்பதை நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம். தங்களுக்கும் பிரிட்டி ஷாருக்கும் அதிகமான நட்பும் நம்பிக்கையும் வளரும் படியே நிர்வாகம் நடத்துகிறார்கள். இந்த அரசியலைத் தகர்த்துப் பொடி பண்ண தாங்கள் தான் தகுதியுள்ளவர்கள் எனத் தமுக்கடித்து ஓட்டுப் பெற்ற இவர்கள் அரசியலை நடத்துவதற்குத் தங்களாலன்றி வேறு யாராலும் முடியாதென பெருமை பாராட்டிக் கொள்ளுகிறார்கள். வைஸ்ராய் பிரபு, கவர்னர் பிரபு இன்னுமுள்ள இதர ஆங்கில அதிகாரிகளும் பலே பேஷ்! சபாஷ்! நல்ல அடிமைகள்! என மெச்சித் தட்டிக்கொடுத்து வருகின்றார்கள். தங்களால் நிர்மாணிக்கப்படாத எந்த அரசியல் திட்டத்தையும் தாங்கள் ஒப்புக்கொண்டு நடத்த முடியாது என்று வீம்பு பேசியவர்கள் எப்படிப்பட்ட மோசமான, பிற்போக்கான திட்டமானாலும் எங்களால் நடத்தமுடியுமென்று ஜம்பம் பேசுகிறார்கள். நம்மை வகுப்புவாதிகள் என்றும் தங்களுக்கு வகுப்புவாத உணர்ச்சியே கிடையாதென்றும் சொல்லி வந்த இவர்கள் மந்திரிசபையமைப்பில், கிறிஸ்தவர்களைப் புறக்கணித் தார்கள். தொழிலாளர் வகுப்புகளைப் புறக்கணித்தார்கள். பெண்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்கவில்லை. அம்மட்டோ? இவர்களுடைய நலன்களைப் பாதிக்கும் விதத்திலும் நடந்து வருகிறார்கள்.

"ஜஸ்டிஸ் கட்சி ஜாதி அபிமானமுடையது; கட்டுப் பாடற்றது" என்றெல்லாம் குறைகூறினவர்கள் காங்கிரஸுக்கே இழிவு தேடினவர்களையும் காங்கிரசுக்குத் துரோகம் செய்தவர்கள் என்று காங்கிரஸ்காரர்களாலேயே குற்றஞ் சாட்டப்பட்டுத் தண்டிக்கப்பட்டவர்களையும் அவர்களிடமிருந்து மன்னிப்புக் கூடப் பெறாமல் கட்டுப்பாட்டை உதறித்தள்ளிவிட்டு சுயஜாதி அபிமானத்தால் மந்திரிகளாக்கிக் கொண்டனர்.

ஸ்தல ஸ்தாபனங்களில் முனிசிபல் கமிஷனர்களை ஏற்படுத்தியதைக் குறைகூறினார்கள். ஜில்லா போர்டுகளை எடுக்க வேண்டுமென்றார்கள். இவர்கள் பதவிக்குவந்து பதினெட்டு மாதங்களாகியும் பல காங்கிரஸ் மகாநாடுகளில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தும் மேற்கண்ட மாறுதல்களைச் செய்யவோ அல்லது செய்யப் போவதாகச் சொல்லவோ முன்வரவில்லை. சகல துறைகளிலும் நடைபெற்றுவரும் பழைய முறையே சரியெனச் சொல்லிக் கொண்டு அம்முறைகளைத் தங்கள் வகுப்பிற்கு அனுகூலம் தரத்தக்க முறையில் மட்டும் மாற்றிக்கொண்டு ஆட்சி நடத்தி வருகின்றார்கள். தேர்தல் காலத்தில் பொது மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளெல்லாம் காற்றில் தூற்றிவிடப்பட்டன. காங்கிரஸ் திட்டங்களுக்கும், பொது ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கும் நேர்மாறான பல காரியங்களை மட்டும் செய்து வருகின்றனர். பொதுஜன அபிப்பிராயத்தையோ, உணர்ச்சியையோ ஒரு சிறிதும் பொருட்படுத்துவதாகக் காணோம்.

**- தொடரும்**

# திராவிட இயக்க முன்னோடி டாக்டர் சி. நடேசன்

மரு. க. சோமாஸ்கந்தன், எம்.டி.

அன்பும் அருளும் தயையும் நிறைந்த பெருந்தகை, பகையும் வஞ்சமும் இன்றி ஒளிர்ந்த ஒப்பற்ற மனிதர், பணம், பட்டம், பதவி, ஆட்சி அதிகாரம் என எதைப் பற்றியும் சிந்தியாது பொது நலமே தன் நலம் என்று வாழ்ந்த மாமனிதர், பிராமணரல்லாத மக்களின் வாழ் வியல் உரிமைகளுக்காகத் தம் வாழ்நாள் முழுவதும் உழைத்த உத்த மர் டாக்டர் சி. நடேசன் அவர்கள், திராவிட இயக்கத்தின் முன்னோடித் தலைவர்களில் முதல்வராகத் திகழ்ந்த வர்.



திருவல்லிக்கேணி பெரிய தெரு எனப்படும் வீரராகவ முதலியார் தெருவில் வாழ்ந்த கிருஷ்ணசாமி முதலியாரின் புதல்வராக, 1875இல் நானிலம் போற்றும் நடேசன் பிறந்தார். திருவல்லிக்கேணியில் தொடக்கப் பள்ளியில் பயின்ற அவர் சென்னைப் பல்கலைக்கழகத் தில் இளங்கலை (BA) பட்டம் பெற்றார். பின்னர், ஆர். வெங்கடரத்தினம் நாயுடு தலைமையில் நடந்துவந்த பித்தாபுரம் மகாராஜ கல்லூரியில் உடலியல் (Physiology) விரிவுரையாளராகச் சிறிது காலம் பணியாற்றினார்.

### மருத்துவச் சேவை

ஏழை எளியோர்க்குத் தொண்டு புரிய வேண்டும் என்ற எண்ணம் அவரிடம் மேலோங்கி நின்றது. சேவை புரிதற்குரிய துறை மருத்துவத் துறை என உணர்ந்தார். சென்னை மருத்துவக் கல்லூரியில் பயின்று மருத்துவராகிச் சென்னை திருவல்லிக்கேணியில் தனது மருத்துவச் சேவையைத் தொடங்கினார். சாதி மத வித்தியாசமின்றியும், ஏழை, பணக்காரன் என்ற பேதமின்றியும், அனைத்துத் தரப்பு மக்களுக்கும் இன்முகத்துடன் சேவை புரிந்து வந்தார். எல்லா மக்களும் டாக்டரைக் கொண்டாடி மகிழ்ந்தனர். புகழும் செல்வமும் பெற்றார். மக்கள் மனதில் நின்றார். தான் படித்துச் சேமித்து வைத்திருந்த நூல்கள் அனைத்தையும் சென்னை மாநகராட்சிக்குப் பரிசாகக் கொடுத்தார். அவை ரிப்பன் மாளிகையில் பல நாள்கள் இருந்தன.

டாக்டர் ஆல்பர்ட் சுவிட்சர் ஆப்பிரிக்காவில் அந்நியர் ஆதிக்கத்தால் படிப்பிலும் சுகாதாரத்திலும் பிற்போக்கடைந்த அந்நாட்டு மக்களுக்குப் பல்லாண்டுகளாக மருத்துவப் பணிபுரிந்தார். அதேபோன்று டாக்டர் நடேசனாரும் மருத்துவத் தொண்டு செய்து வந்தார்.

### சென்னை மாநகர அவையில் சேவை

இவர் மாநகர உறுப்பினராகி, முக்கியமாக சுகாதாரம், கல்வி, தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம் ஆகியவற்றிற்காக இடைவிடாது உழைத்தார்.

சென்னை மாநகர அவையில் 25 ஆண்டுகளாக உறுப்பினராயிருந்து சென்னை மக்களுக்குத் தொண் டாற்றி வந்துள்ளார். அவருடைய வட்டத்தினர் மட்டு மல்லாமல், மற்ற வட்டத்தினரின் குறைகளையும் நிவர்த்தி செய்து வந்துள்ளார். பள்ளிக் கூடங்களிலும், மருத்துவமனைகளிலும் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டியிருந்தால், டாக்டர் நடேசனாரிடம் கூறிவிட்டால் உடனடியாக அவை நிறைவேற்றப்பட்டுவிடும். நகர மக்களிடம் அன்பும் அக்கறையும் கொண்டு பணியாற்றிவந்த ஒரு சிலரில் முதன்மையானவராக டாக்டர் நடேசன் விளங்கி வந்துள்ளார்.

இவர் நகராட்சி மன்றத்தில் உறுப்பினராக இருந்த பொழுது நகரில் குவியும் குப்பைக் கூளங்களை நகர எல்லைக்கப்பால் புறநகரப் பகுதிகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதியின் அருகில் கொட்டிவிடலாம் எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அப்பொழுது டாக்டர் நடேசன், “குப்பைகளைத் தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருப்புக்கருகில் கொட்டினால், அங்கு வாழும் மக்களின் வாழ்க்கை நரகமாகும்; குப்பைகளிலிருந்து எழும் துர்நாற்றத்தால் மேலும் அம்மக்களின் உடல்நலம் பாதிக்கப்பட்டு நோய்கண்டு துன்புறுவர்; சுற்றுச்சூழலுக்கும் மாசு ஏற்படும்; எனவே, குப்பைகளை மக்கள் வாழ்விடங்களைத் தவிர்த்து வேறு மாற்று இடங்களில் கொட்டுதல் வேண்டும்” என்று தீர்மானத்தை எதிர்த்து வாதிட்டு, ஏழை மக்களின் சுகாதாரக் காவலராக விளங்கினார். அவர் நகராட்சி மன்றத்தின் பொது நலக் கமிட்டித் (Standing Committee for Health) தலைவராகவும் இருந்து பல சீர்திருத்தங்களையும் செய்துள்ளார்.

பல மருத்துவ மாநாடுகளில் அவர் பங்குகொண்டார். 1927இல் கிழக்கு ஆசிய மருத்துவ சம்மேளனம் கல்கத்தாவில் நடைபெற்றது. அதில் இவர் சென்னை நகராட்சியின் பிரதிநிதியாகப் பங்கேற்றுக் கூறிய கருத்துகள் போற்றப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன.

**திராவிடர் சங்கம்**

டாக்டர் நடேசன், பிராமணரல்லாத மக்கள் சமூக அரசியல் பொருளாதார நிலைகளில் மிக மிகத் தாழ்ந்த நிலையில் இருப்பதை உணர்ந்து மனம் நெகிழ்ந்தார். இந்த அவல நிலையைப் போக்கிட சங்கம் ஒன்றினை உருவாக்கிட உறுதி கொண்டார்.

அந்நாளில் அரசுப் பணிகளில் பெரும்பாலும் பிராமணச் சமுதாய மக்களே இடம்பெற்று ஆதிக்கம் பெற்றிருந் தனர். அவர்களின்கீழ்ப் பணிபுரிந்த பிராமணரல்லாத ஊழியர்களைத் தரக்குறைவாகவும், இழிவாகவும் நடத்தினர். அந்த ஊழியர்கள் தங்கள் குறைகளை வெளியிடவும், உரிமைகளைப் பெற்றிடவும் வழிவகை காணிடவும் அமைப்பொன்று தேவை என்று உணர்ந்து, பிராமணரல்லாத அரசு ஊழியர்கள் ஒன்றிணைந்து. 1912இல், "சென்னை ஐக்கிய சங்கம்" (Madras United League) என்ற அமைப்பினைத் தொடங்கினர். பொதுநல ஆர்வலர் டாக்டர் நடேசன் இச்சங்கத்தின் செயலாளராக இருந்து, இச்சங்கத்தினை வலிவும் பொலிவும் பெற்றிட வளர்த்தெடுத்தார். இச்சங்கத்தின் கூட்டங்கள் திருவல்லிக்கேணியில் டாக்டர் நடேசன் மருத்துவமனைத் தோட்டத்தில் நடைபெற்று வந்தன.

**இச்சங்கத்தின் முதலாவது சமூகப்பணி, முதியோர் கல்வியாகும். இரவு நேரங்களில் நடந்த இவ்வகுப்புக்களில் அரசு அலுவலர்களே ஆசிரியர் களாக அமைந்து பாடங்களை நடத்தினர்.**

இச்சங்கத்தின் முதலாம் ஆண்டு விழா 1913இல் டாக்டர் நடேசன் மருத்துவமனைத் தோட்டத்தில் சிறப்பாக நடைபெற்றது. அப்பொழுது சங்கத்தின் பெயர் "திராவிடர் சங்கம்" (Dravidian Association) என மாற்றப்பட்டது.

திராவிடர் சங்கம், டாக்டர் நடேசன் தலைமையில் சிறப்புற நடைபெற்று வந்தது. திராவிடர் சங்கத்தின் ஆண்டு விழாக்களில் ஆண்டுதோறும் கல்லூரிகளில் பயின்று பட்டம் பெற்ற பிராமணரல்லாத மாணவர் களுக்கு வரவேற்பும் விருந்தும் அளித்துச் சிறப்புச் செய்யப்பட்டது.

திராவிடர் சங்கத்தின் முதல் ஆண்டு விழா திரு வல்லிக்கேணியில் இந்து உயர்நிலைப் பள்ளியில், 1914இல் நடைபெற்றது. பிராமணரல்லாத பட்டதாரி மாணாக்கருக்கு வரவேற்பு நிகழ்ச்சியும் நடைபெற்றது.

நீதிபதி சி. கிருஷ்ணன் (Chief Judge of Small Cause Courts) தலைமையேற்று, சிந்தனையைத் தூண்டும் அறிவுரை வழங்கினார். டாக்டர் டி.எம். நாயர் கலந்து கொண்டு ஆற்றிய உரை திராவிட மாணவர்களுக்கு எழுச்சியை ஊட்டியது. அவரது உரையின் முடிவில், திராவிட இளைஞர்களை நோக்கி, "விழி! எழு! இன்றேல் என்றென்றும் வீழ்ந்து படுவாய்!" (Arise, Aware or be for ever fallen) என எழுச்சி உரையாற்றினார்.

வாரந்தோறும் டாக்டர் நடேசனாரின் தோட்டத்தில் திராவிடர் சங்கத்தின் சார்பில், பார்ப்பனரல்லாதார் இன எழுச்சிக் கூட்டங்களும், இலக்கியக் கூட்டங்களும் நடைபெற்று வந்தன.

திராவிடர் சங்கத்தில் சிந்தனைச் சிற்பி ம. சிங்கார வேலு, திராவிட லெனின் டாக்டர் டி.எம். நாயர், வெள்ளுடை வேந்தர் தியாகராயர், திரு.வி.க. போன்ற பெருந்தகை கள் பங்கேற்று, சுயமரியாதை உணர்வு எழும்படி உரையாற்றியுள்ளனர். பொதுவாக திராவிடர் சங்கம், திராவிட மக்களின் தலைமைப் பாதுகாவல் இடமாகத் திகழ்ந்தது.

**திராவிடர் சங்கத்தின் சார்பில், 1915இல், டாக்டர் நடேசனாரின் நிதி உதவியுடன "திராவிடப் பெரு மக்கள்" (Dravidian Worthies), "பிராமணரல்லா தார் கடிதங்கள்" (Non-Brahmin Letters) என்ற இரண்டு நூல்கள் வெளியிடப்பட்டன.**

**"திராவிடர் இல்லம்"**

திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த ஏழை மாணவர் கள் கல்லூரியில் படிக்க சென்னைக்கு வரும் பொழுது அவர்கள் தங்கிப் படிப்பதற்கும் உணவு உண்ணு தற்கும் விடுதிகள் இன்றி அல்லலுற்றனர். பிராமணர் விடுதிகளில் இவர்களை அனுமதிப்பதில்லை. திராவிட மாணவர்களின் நலனில் அக்கறை கொண்ட டாக்டர் நடேசன், இரவீந்திரநாத் தாகூரின் சாந்திநிகேதத் தைப்போல், 1916 சூலைத் திங்கள் திருவல்லிக்கேணி அக்பர் சாயபு தெருவில் திராவிடர் இல்லத்தினைத் தொடங்கி திராவிட மாணவர் தங்கி படிப்பதற்குத் துணை புரிந்தார். வசதியுள்ள மாணவர்கள் பணம் கட்டியும், வசதியில்லாதவர் பணம் கட்டாமலும் தங்கிப் படிக்கலாம். உணவு விடுதியோடு மாணவர்களுக்கான நூலகமும் அங்கே அமைந்திருந்தது. இங்கே தங்கிப் படித்த ஆர்.கே. சண்முகம், பிற்காலத்தில், விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் நிதி அமைச்சராகவும், எஸ். சுப்பிர மணியம் உயர்நீதிபதியாகவும், தி.மூ. நாராயண சாமி அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந் தராகவும் உயர்வு பெற்றார்கள்.

"திராவிடர் சங்கம்", "திராவிடர் இல்லம்" என இரண்டு அமைப்புகளை, பிராமண அல்லாத மக்களின் நல்வாழ்விற்காகத் தனிமனிதனாக நின்று தொடங்கித் தொண்டாற்றிய டாக்டர் சி. நடேசன், பிராமணர் அல்லாத மக்கள் கல்வி, வேலை வாய்ப்புகளையும் பெற்று நல்வாழ்வினைப் பெற்றிடத் தனி அரசியல் அமைப்பு தேவை என்பதை உணர்ந்து வந்தார். அதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டு வந்தார்.

ஆதித் திராவிடர் நலனில் டாக்டர் சி. நடேசனாரை விடத் தீவிரமாகப் பாடுபட்டவர்கள் எவரும் இலர். மகாத்மா காந்தியின் "ஹரிஜன் இயக்கம்" தொடங்கு

வதற்கு முன்பே, டாக்டர் சி. நடேசன், ஆதித் திராவிடர் நலனில் மிக்க அக்கறை கொண்டிருந்தார்.

இத்திராவிடர் சங்கத்தின் வியத்தகு பணியால் கவரப்பட்டவர்கள் முதுபெருந்தலைவர்களான வெள்ளுடை வேந்தர் சர். பிட்டி. தியாகராயரும், பெரியாரால் திராவிட லெனின் எனப் புகழப்பட்ட டாக்டர் டி.எம். நாயரும் ஆவர். அவர்கள், இத்திராவிடர் சங்கத்தைவிட வலிமையும் ஆற்றலும் மிக்க நாடு தழுவிய இயக்கத்தின் தேவையை உணர்ந்தனர்.

வெள்ளுடை வேந்தர் சர். பிட்டி. தியாகராயரும், டாக்டர் டி.எம். நாயரும் முதலில் காங்கிரஸ் பேரியக்கத்தில் இருந்து அரசியலில் தொண்டுபுரிந்து வந்த நிலையில், 1915 செப்டம்பர் 25இல், அன்னிபெசண்ட் அம்மையார் ''ஹோம் ரூல்'' (Home Rule) இயக்கத்தைத் தோற்றுவித்தார். அன்னிபெசண்ட், 'சுயஆட்சி' என்ற போர்வையில் ஸ்மார்த்த பிராமணர்களின் ஆதரவைப் பெற்றார்; நால்வருணக் கொள்கையை ஆதரித்தார்; சமஸ்கிருத வளர்ச்சி, இந்துமதப் பரப்புரை ஆகியவற்றை முன்னின்று நடத்திவரலாயினார்.

காங்கிரஸ் இயக்கம் வடநாட்டார் ஆதிக்கமும், தென்னாட்டுப் பிராமணர் ஆதிக்கமும் கொண்ட இயக்கம் என்பதை சர். பிட்டி. தியாகராயரும், டாக்டர் டி.எம். நாயரும் நன்கு உணர்ந்திருந்தனர். தென்னிந்திய திராவிட மக்களுக்கு காங்கிரசு அநீதி இழைத்து வருவதை அறிந்து அவ்வியக்கத்தினின்றும் விலகியிருந்தனர். இந்நிலையில் பிராமணர் அல்லாதாரின் நலன்களுக்கு அச்சுறுத்தலாக ஹோம் ரூல் இயக்கம் தோன்றியதால், அவ்வியக்கத்தையும் திராவிடர் நலன் கருதி எதிர்க்க வேண்டிய கட்டாயத்தில் பிராமணரல்லாத தலைவர்கள் இருந்தனர்.

### இருபெரும் தலைவர்களின் பிணக்கு

ஆனால் இந்த இருபெரும் தலைவர்களும் சென்னை நகர சபை உறுப்பினராக இருந்தகாலை - 1913-களில் நடைபெற்ற சில நிகழ்வுகளால் கருத்து வேறுபாடு கொண்டிருந்தனர். ஒருவரோடொருவர் பேசிக் கொள்வது கூட இல்லை.

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் தெப்பக் குளம் பாசிபடர்ந்து பாழடைந்து கிடந்தது. கொசுப் பெருக்கத்தால் நோய் பரவ வாய்ப்பாய் அமைந்திருந்தது.

சென்னை மாநகராட்சியின் உறுப்பினராய் இருந்த டாக்டர் டி.எம். நாயர், ''நகர மக்களின் சுகாதாரத்தை மனதில் கொண்டு, பார்த்தசாரதி கோயில் குளத்தை மண்கொட்டி மூடிவிட்டு, அங்கே பூங்காவை நிறுவிட வேண்டும்'' என்று தீர்மானம் கொண்டு வந்தார்.

''தெப்பக்குளத்தைச் சுத்தம் செய்து செப்பனிடுவதை விட்டுவிட்டு, அதை மூடுவதா?'' என்று சர். பிட்டி. தியாகராயர் வெகுண்டெழுந்து, நாயரின் தீர்மானத்தைத் தோற்கடித்தார். இதனால் இருவரிடையே காழ்ப்புணர்வு ஏற்பட்டு நட்பில் தொய்வு ஏற்பட்டது.

சில ஆண்டுகள் பேசிக்கொள்ளாமலிருந்த டாக்டர் டி.எம். நாயரையும், சர். பிட்டி. தியாகராயரையும் ஒன்றிணைய வைத்தவர் டாக்டர் சி. நடேசன் அவர்களே ஆவார்.

பொது நலனின் பொருட்டு சொந்த ஆசைகளையும், கோப தாபங்களையும் அடக்கி ஆளக்கூடிய பெருமக்களாக டாக்டர் டி.எம். நாயரும், சர். பிட்டி. தியாகராயரும் விளங்கினார்கள். தங்களுக்குள் மாறுபட்ட கருத்துக்கள் இருந்தாலும், பிராமணரல்லாத மக்களின் வாழ்வியல் உரிமைகளைக் காப்பாற்றும் கொள்கையின் பொருட்டு வேற்றுமைகளைக் களைந்து ஒன்றுபட்டனர்.

### ''தென்னிந்திய நல உரிமைச் சங்கம்'' தோற்றம்

இவ்விரு பெரும் பிராமணரல்லாத தலைவர்கள் ஒன்றுபட்டதன் விளைவாக, 1916 நவம்பர் 20ஆம் நாளன்று சென்னை விக்டோரியா பொது அரங்கில், சர். பிட்டி. தியாகராயர், டாக்டர் டி.எம். நாயர், டாக்டர் சி. நடேசன், மேலும் ஏறத்தாழ 30 பார்ப்பனரல்லாத பிரமுகர்கள் கூடி, ''தென்னிந்திய நல உரிமைச் சங்கம்'' (South Indian Liberal Federation) என்ற அரசியல் அமைப்பினைத் தொடங்கினர்.

இக்கட்சியின் சார்பில் 'ஜஸ்டிஸ்' (Justice) என்ற ஆங்கில ஏடு தொடங்கப்பட்டது. தமிழில் 'திராவிடன்' என்ற நாளிதழும், தெலுங்கில் 'ஆந்திரப்பிரகாசிகா' என்ற நாளிதழும் வெளியிடப்பட்டன.

இந்திய அரசின் 1919ஆம் ஆண்டைய வகுப்புரிமைச் சட்டப்படி, 1920 நவம்பர் 20இல், சென்னை மாகாணப் பொதுத் தேர்தல் நடைபெற்றது. இரட்டையாட்சி (Diarchy) முறையை எதிர்த்து காங்கிரஸ் தேர்தலில் பங்கேற்கவில்லை. ஹோம் ரூல் இயக்கத்திற்கும், நீதிக்கட்சிக்கும் இடையே கடும் போட்டி நிலவியது. நீதிக்கட்சி பெரும்பான்மை பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது. நீதிக்கட்சியின் முதலாவது அமைச்சரவை 1920 டிசம்பர் 17இல் பதவியேற்றது.

### சென்னை சட்டமன்றத்தில் டாக்டர் சி. நடேசன்

டாக்டர் நடேசன், 1920, 1923, 1926, 1931 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றி பெற்று சட்டப்பேரவையில் திராவிட சமுதாயத்தவர்களுக்காகக் குரல் கொடுத்துப் பல தீர்மானங்களை நிறைவேற்றித் திராவிட சமுதாயம் முன்னேறிட வழிவகை செய்தார்.

இந்தியாவிலேயே சென்னையில்தான் முதன் முதலில் தொழிற்சங்கம் தோன்றியது. தொழிற்சங்கம்

தொடங்குவதற்கு டாக்டர் நடேசன், தமிழ்த்தென்றல் திரு.வி.க.விற்கு உறுதுணையாக இருந்தார்.

1921 சூன் திங்கள் பக்கிங்காம் கர்நாடிக் ஆலைத் தொழிலாளர் வேலை நிறுத்தம் நடைபெற்றது. தொழிலாளர்களிடையே குழப்பம் ஏற்பட்டுக் கலவரம் மூண்டது. ஆதித் திராவிடத் தொழிலாளர்களுக்கும், மற்ற தொழிலாளர்களுக்கும், மனக்கசப்பு ஏற்பட்டுக் கொடிய கலவரம் நடந்தது; துப்பாக்கிச் சூடும் நடைபெற்றது. உயிரிழப்பும் ஏற்பட்டது. 'புளியந்தோப்புக் கலவரம்' என்று இதை வரலாறு குறிப்பிடுகிறது. அங்கே, உயிருக்கு அஞ்சாது நடேசனாரும், தியாகராயரும், முதல்வர் பனகல் அரசரும் சம்பவ இடத்திற்கே நேரில் சென்று தொழிலாளர்களிடையே சமரசம் பேசினர், தொழிலாளர்களின் நலனையும் பாதுகாத்தனர்.

**சென்னை சட்டமன்றத்தில் டாக்டர் நடேசன், "பிராமணரல்லாதாருக்கு நியாயமாய்க் கிடைக்க வேண்டிய விகிதாசார அளவுக்கு அரசு வேலை வாய்ப்புகள் கிடைக்கும் வரையில் அரசுப் பணிகளுக்கு பிராமணரல்லாதாரை மட்டுமே தேர்வு செய்திடல் வேண்டும்" என்று, 1921 ஆகஸ்டு 5இல் தீர்மானம் கொண்டுவந்தார். இதன் விளைவாக, 16-9-1921இல் எல்லாச் சமூகத்தினரும் ஏற்றம் பெறும் வகையில் மக்கள் தொகையின் அடிப்படையில் அரசுப் பணிகள் வழங்க வேண்டும் என்ற ஆணை, பெரும் எதிர்ப்புக்கிடையே பிறப்பிக்கப்பட்டது. ஆனால் அரசு உயர் அலுவலர்கள் இவ்வாணையை நடைமுறைப்படுத்தாமல் புறக்கணித்தனர்.**

அரசு அலுவலகங்களில் ஏற்படும் காலி இடங்களில் இலாக்கா தலைமையின் ஆணைப்படி, அலுவலர் இடங்களை நிரப்பி வந்தனர். அதனால் பிராமணரல்லாதார் வாய்ப்புகள் பறிபோயின. இந்நிலையைப் போக்கிட 'அரசுப் பணியாளர் தேர்வுக்குழு' (Staff Selection Board) ஏற்படுத்தவும், பதவி உயர்வுகளிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் வற்புறுத்தினார், டாக்டர் நடேசன்.

சென்னை மாகாண அரசின் தலைமைச் செயலகத்தில், பிராமணரல்லாதார் மிகச் சொற்ப எண்ணிக்கையில் பணியாற்றி வந்தனர். பிராமணர்களே உயர் அதிகாரிகளாக மிகுந்திருந்தனர். இருவகுப்பாருக்கும் இடையே சமநிலை ஏற்படும்வரை 3 ஆண்டுகளுக்கு பிராமணரல்லாத சமூகத்திலிருந்தே உயர் அலுவலர்களையும் எழுத்தர்களையும் பணியில் அமர்த்த வேண்டும் என்று வலியுறுத்தி ஒரு தீர்மானத்தை ஓ. தணிகாசலம் முன்மொழிய, நடேசன் வழிமொழிந்தார். இத்தீர்மானம் மிகுந்த கண்டனத்திற்குப் பின் நிறைவேறியது. அதன் காரணமாகவே தலைமைச் செயலகத்தில் பிராமணரல்லாதார் நுழையவும் செல்வாக்குப் பெறவும் முடிந்தது.

சென்னைப் பல்கலைக்கழக செனட் (Senate = பேரவை) உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிக்கச் சட்டம் இயற்றத் துணை நின்றார். இப்புதிய அரசியலில், "சொத்து, படிப்பு, வரி செலுத்தும் தகுதியுடையவர் கட்கே வாக்குரிமை என்று கூறியவர்களுக்கு - ஏழை மக்கள் வரி கொடுக்காமல் இருக்கலாம்; ஆனால் அவர்கள் உழைப்பில் விளைந்த செல்வத்தைக் கொண்டுதான் செல்வர்கள் வரி செலுத்துகிறார்கள். ஆகவே, முன்னேறிய நாட்டில் வாக்குரிமை யாவர்க்கும் பிறப்புரிமையாகும்" என்று எடுத்துக்காட்டி ஏழை எளிய மக்களுக்காக வாதாடினார்.

அவர் சட்டமன்றத்தில், கலந்துகொண்டு பேசாத பொருள் என்று எதுவும் இருந்ததில்லை. அவர் சிறப்பாக, கல்வி, பொதுநலம், நீர்ப்பாசனம், நிர்வாகம் ஆகியவைகளைப் பற்றிய விவாதத்தில் முக்கியப் பங்கெடுத்துக் கொண்டார். நீர்ப்பாசன விவாதங்களில் பங்கேற்ற அவரது உரைகளை சர். சீனிவாச ஐயங்கார் மெச்சியுள்ளார்.

சுகாதார விஷயங்களில் அவர் சிறந்த கருத்துகளைக் கூறுவார்; கூட்டுறவு விஷயங்களில் மக்கள் நலத்துக்காக வாதாடினார். கட்டாய ஆரம்பக் கல்வியில் மிகுந்த ஆர்வம் கொண்டார். சென்னை வாடகைக் குடித்தனக்காரர் பாதுகாப்புச் சட்டத்தை (City Tenants Protection Bill) வெற்றிகரமாக நிறைவேற்றினார்.

இந்து அறநிலையங்களில் உள்ள உபரி நிதியை மக்கள் நல்வாழ்வு கருதி பொதுநலக் காரியங்களுக்குச் செலவிட வகை செய்யும் "இந்து அறநிலையப் பாதுகாப்பு மசோதா", 6.12.1922இல் நிறைவேற்றப்பட, நடேசனார் அதை ஆதரித்து வாதாடினார். கடும் எதிர்ப்புக்கிடையே அம்மசோதா நிறைவேறியபோதிலும் ஆளுநரால் நிராகரிக்கப்பட்டது. மீண்டும், 1923 ஏப்ரல் மாதத்தில், பனகல் அரசர் முதலாவது அமைச்சராக மசோதாவை சட்டமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றினார்கள்.

டாக்டர் நடேசனார் எல்லோரிடமும் நட்பு பாராட்டினார்; அன்புடனும் பண்புடனும் நடந்துகொண்டார்; கொள்கையில் உறுதியாக இருந்தாலும், நண்பர்களுக்கு விட்டுக்கொடுக்கும் மனம் உள்ளவர்.

அவர் சென்னை மாநகராட்சித் தலைவர் பதவிக்கு 3 முறை போட்டியிட விரும்பினார். இருமுறை சர். ஏ. இராமசாமி முதலியாருக்கும், மூன்றாம் முறை எம்.ஏ. முத்தையா செட்டியாருக்கும் விட்டுக்கொடுத்தார்.

தகுதியும் திறமையும் கல்வியும் செயல்திறனும் இருந்தும், கடைசி வரையில், கட்சி அவருக்கு உரிய இடத்தைத் தரவில்லை. உதவித் தலைவர் இடத்தைத் தான் தந்தார்கள். அமைச்சர் பதவிக்கும் அவர் ஆசைப்

படவில்லை. ஒருமுறை தேர்தலில் தனித்து நின்று வெற்றி பெற்று எதிரணியில் வீற்றிருந்த போதிலும் நீதிக்கட்சியின் கொள்கைகளைக் கைவிடவில்லை. அதுதான் அவரது நேர்மைக்கு எடுத்துக்காட்டாகும்.

தனக்கென்று எதையும் சேர்த்து வைத்துக்கொள் ளாத டாக்டர் நடேசனார், தமது ஒரே மகன் கிருட்டிண சாமி பி.ஏ. ஆனர்ஸ் அவர்களை இளமையில், பறிகொடுத்துவிட்டார். அதனால் மனமுடைந்து உடல் மெலிந்து துக்கமடைந்தார். எனினும், பொது காரியங் களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளத் தவறியவர் அல்லர், அவர்.

தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த அம் மாமனிதர் 18.2.1937 அன்று இம்மண்ணுலகை நீத்தார்.

அவர் நினைவாக திருவல்லிக்கேணி விவேகானந்தர் இல்லம் அருகில், நடேசன் சாலையும், தியாகராயர் நகரில் டாக்டர் நடேசன் பூங்காவும் உள்ளன.

அவரது தங்கை திருமதி. சின்னம்மாளின் மகள் வழிப் பெயரன் டாக்டர் சி.யு. வேல்முருகன் சென் னையில் புகழ்மிக்க நரம்பியல் மருத்துவராக உள்ளார்.

டாக்டர் நடேசனார் மறைவு குறித்து, தந்தை பெரி யாரின் உளமார்ந்த இரங்கல் அறிக்கையைப் படித்தால், டாக்டர் நடேசனாரின் எளிமையும் தொண்டும் எளிதில் விளங்கும். பெரியாரின் இரங்கல்:

``டாக்டர் சி. நடேச முதலியார் நலிந்தார் என்ற சேதி கேட்டு நம் நாட்டில் திடுக்கிடாத பார்ப்பனரல்லாத தமிழ்மக்கள் எவரும் இருக்கமாட்டார்கள். அவரது சேவையைப் பாராட்டி அவருக்கு நன்றி விசுவாசம் காட்டக் கடமைப்படாத தமிழ் மகன் எவனும் எந்நாட்டிலு மிருக்க மாட்டான். தோழர் நடேச முதலியாரிடம் உள்ள அருங்குணங்களில் சூது, வஞ்சகம் அற்ற தன்மையே முதலாவதும் இரண்டாவதும் மூன்றாவதுமாகும்.

சூதற்றவனும், வஞ்சகமற்றவனும் உலகப் போட்டியில் ஒரு நாளும் வெற்றி பெறமாட்டான் என்கிற தீர்க்கதரிசன ஆப்த வாக்கியத்திற்கு எடுத்துக்காட்டாக இருந்த நடேசன் அவர்கள், தனது தொண்டிற்கும், ஆர்வத்திற்கும், உண்மையான கவலை கொண்ட ஊக்கத்திற்கும் உள்ள பலனை தன் சொந்தத்துக்கு அடையாமல் போனதில் நமக்குச் சிறிதும் ஆச்சரிய மில்லை. ஏன்? தனக்கென வாழாதார் தான் பிறர்க்கு என வாழ முடியும். ஆதலால் நடேசன் அவர்களால் தமிழ் மக்களுக்கு எண்ணரிய நன்மைகள் ஏற்பட்டி ருப்பதை அவரது எதிரிகளும் மறுக்கார்.

நாம் ஒவ்வொருவரும் நடேசனே ஆக நாடு வோமாக!''

**(18.2.1937, டாக்டர் சி. நடேசன் அவர்கள் மறைந்த நாள்)**

## 2017 சனவரி 26இல் 26ஆவது ஆண்டு - மாணவர்களுக்கு பரிசளிப்பு



26.1.2017 வெள்ளிக்கிழமை, திருவண்ணாமலை மாவட்டம், கீழ்ப்பென்னாத்தூர் வட்டம், சிறுநாத்தூர் கிராமத்தில் உள்ள நடுநிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் ப. வேலு அவர்கள் தலைமையில் 68ஆவது குடியரசு தின விழா நடைபெற்றது.

விழாவில் மாணவர்கள், தங்கள் ஆசிரியர்கள் கொடுத்த பயிற்சியின் அடிப்படையில் மிகச் சிறப்பாகப் பேச்சு மற்றும் பாடல்கள் வாயிலாகத் தங்கள் திறமையை வெளிப்படுத்தினர். நிகழ்ச்சியை ஆசிரியர் சி.அ. முருகன் தொகுத்து வழங்கினார்.

சிறப்பு விருந்தினராக முன்னாள் தலைமை ஆசிரியர் கோ. கோதண்டராமன் மற்றும் முன்னாள் மாணவர் ப. வடிவேலு கலந்து கொண்டனர். மாணவர் களுக்கு 26ஆவது ஆண்டாகப் பள்ளியின் முன்னாள் மாணவர் ப. வடிவேலு பரிசுகள் வழங்கினார்.

தொடர்ந்து முன்னாள் இந்திய இராணுவ வீரர் தமிழரசன், முன்னாள் மாணவி லதா சுப்பிரமணியன், வேட்டவலம் மறுவாழ்வு பயிற்சி மையத்துடன் இணைந்து திருவண்ணாமலை ரோட்டரி கிளப்பும் சேர்ந்து பரிசுப் பொருள்களை மாணவர்களுக்கு வழங்கினர்.

முன்னாள் மாணவர் ஆறுமுகம் அவர்கள், 6 முதல் 8 வரை உள்ள மாணவர்களுக்குச் சாதிச் சான்று இணையத்தில் படிவமெடுத்து வழங்கியதும் நிகழ்ச்சியின் சிறப்பாக அமைந்தது. சிறப்பு விருந்தி னர்கள் கோ. கோதண்டராமன், ப. வடிவேலு உரைக் குப் பின்பு, தலைமை ஆசிரியர் தலைமை உரையாற்றி னார். ஆசிரியர் சி.அ. முருகன் நன்றிகூறிய பின், மாணவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

(குறிப்பு : 26ஆவது வருடமாக முன்னாள் மாணவர் ப. வடிவேலு பரிசளித்து வருவதைத் தொடர்ந்து இந்த ஆண்டு மேலும் சிலர் மாணவர்களுக்கு ஊக்கம் கொடுக்க முன்வந்துள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது).

செய்தி : **ப. கிருஷ்ணன்**

# ஆமிஷ் சமூகம்

- இராமியா

**கி.பி.** 1695ஆம் ஆண்டில் சுவிட்சர்லாந்து நாட்டில், ஜேக்கப் ஆம்மான் என்பவர் கிருத்துவ மதத்தில் ஒரு புதிய பிரிவைத் தேற்றுவித்தார். அவரைப் பின்பற்றியவர்கள் (ஆம்மான் என்ற பெயரை ஒட்டி) ஆமிஷ்கள் என அழைக்கப்பட்டனர். இவர்கள் 18ஆம் நூற்றாண்டில் போர், பஞ்சம், வேலை தேடுதல் போன்ற பல காரணங் களை முன்னிட்டு, அமெரிக்காவில் உள்ள பென்சில் வேனியா மாநிலத்தில் குடியேறினர். இவர்கள் பேசும் மொழி பென்சில்வேனியா டச்சு மொழி என்றும், பென்சில் வேனியா ஜெர்மன் மொழி என்றும் அழைக்கப்படுகிறது. 18ஆம் நூற்றாண்டில் பென்சில்வேனியா மாநிலத்தில் குடியேறிய இவர்கள் தொடர்ந்து அங்கேயே வசித்து வருகிறார்கள்.

இந்த மதப் பிரிவினருடைய முதன்மையான கொள்கை என்னவென்றால், விவிலியத்தில் (பைபிளில்) கூறப்பட்டுள்ளவற்றை அப்படியே பின்பற்ற வேண்டும் என்பதும், அதில் கூறப்படாத எதையும் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்பதும் தான். ஆகவே இவர்கள் விவிலியத்தில் கூறப்படாத புதுமைகளை, அறிவியல் வளர்ச்சிகளை, மின்சாரத்தை, கன்னெய் (பெட்ரேல்) வாகனங்களை இன்னும் பலவற்றை ஏற்றுக் கொள்வது இல்லை. சமையலுக்கு விறகுகளைப் பயன்படுத்துகின்றனர். பயணத்திற்குக் குதிரை வண்டிகளையும், இரவில் எண்ணெய் விளக்குகளையுமே பயன்படுத்துகின்றனர். இதனால் இவர்கள் மற்ற சமூக மக்களிடம் இருந்து விலகித் தனிமைப்பட்டு வாழ்கின்றனர்.

இவர்கள் அறிவியல் புதுமைகளை ஏற்காததால், இச்சமூகத்தில் குழந்தை மரணம் அதிகமாக உள்ளது. ஆனால் இவர்கள் விவிலியத்தில் "பலுகிப் பெருகுங்கள்" என்று கூறி உள்ளபடி, அதிகக் குழந்தைகள் (ஒவ்வொரு பெண்ணும் 6-7 குழந்தைகள் வரை) பெற்றுக் கொள்வதால் இவர்களது மக்கள் தொகை கூடிக் கொண்டு இருக்கிறது. 1920ஆம் ஆண்டில் 5,000 ஆக இருந்த இவர்களுடைய மக்கள் தொகை, படிப்படியாக உயர்ந்து 2016ஆம் ஆண்டில் 3,08,030 ஆக உயர்ந்து உள்ளது.

இவர்கள் பொதுவாக, இவர்களே நடத்தும் பள்ளிகளில் 8வது வகுப்பு வரை மட்டுமே படிக்கிறார்கள். வாழ்க்கை வாழ்வதற்கு இப்படிப்பே போதும் என்று நினைக்கின்றனர். 16வது வயதில் விவசாயம், குதிரை வளர்த்தல், தச்சுப் பட்டறை, இரும்புப் பட்டறை போன்ற தொழில் கல்வியைக் கற்கின்றனர்.

**பள்ளிக்கூடம், விவசாயப் பண்ணை**

ஒவ்வொரு ஆணும் பெண்ணும் 25 வயதிற்குள் திருச்சபையில் ஞானஸ்நானம் செய்து கொள்ள வேண்டும். திருமணம் செய்து கொள்வதற்கு ஞானஸ் நானம் செய்து கொண்டு இருக்க வேண்டும் என்பது கட்டாயமாகும்.

சமூகக் கட்டுப்பாடுகளை மீறி நடப்பவர்கள் சமூகத்தை விட்டு விலக்கி வைக்கப்படுவதுடன், ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாவார்கள். இச்சமூகச் சூழலில் வளர்ந்தவர்கள் வெளியே சென்று வாழ்வது சிரமம் என்பதால் சமூகக் கட்டுப்பாடுகளை மீறுபவர்கள் மிக மிக அரிதே.

அறிவியல் வளர்ச்சியின் நலன்களை நுகர்ந்த மக்கள், ஆமிஷ் மதப் பிரிவில் இணைவார்கள் என்பதை எண்ணிப் பார்ப்பதே கடினம். ஆனால் இவர்களுடைய வாழ்க்கை முறையில் மன அமைதி கிடைக்கிறது என்று கூறி 1950ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை 75 பேர்கள் இம்மதப் பிரிவில் இணைந்து உள்ளனர், இவர் களுள் 1990ஆம் ஆண்டில் இணைந்த 20 இரஷ்யர் களும் அடங்குவர். சோவியத் ஒன்றியம் சிதைந்த பின், அங்கு நிலவிய அமைதி இன்மையில் இருந்து தப்பிக்க, அவர்கள் இவ்வழியைத் தேடினார்கள் போலும்.

இவர்களுடைய மக்கள் தொகை மிகக் குறைவாக இருப்பதால், இரத்த உறவுள்ள உறவினர்களையே திருமணம் செய்து கொள்ள நேரிடுகிறது. இதனால் உடல் நலமும், மனநலமும் குன்றிய குழந்தைகள் பிறக் கின்றன. இரத்த உறவு இல்லாதவர்களைத் திருமணம் செய்து கொள்வதால் நற்பயன்கள் விளைகின்றன என்பதை இவர்கள் தெரிந்து கொண்டு இருந்தாலும், தங்கள் மதப் பிரிவையும், சமூகக் கட்டுப்பாடுகளையும் காப்பாற்றும் பொருட்டு வெளியாரைத் திருமணம் செய்து கொள்வதைத் தவிர்த்து வருகின்றனர்.

இவர்களது வாழ்க்கை முறையைப் பார்க்கச் சுற்றுலாப் பயணிகள் இவர்கள் வாழும் பகுதிக்குச் செல்வது உண்டு. அண்மைக் காலமாக, இச்சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக உணவு விடுதிகளை நடத்து கின்றனர். இங்கும் இவர்கள் புதுமையைத் தவிர்க் கின்றனர்; அவர்களுடைய பாரம்பரிய உணவுகளை மட்டுமே பரிமாறுகின்றனர். ஆனால் எந்த வகையிலும் தாங்கள் வாழும் பகுதியில் பிறரை ஆக்கிரமிக்க விடுவது இல்லை. இச்சமூக மக்கள் தங்கள் பகுதியில் இருந்து வெளியிடங்களுக்குச் செல்லும் போதும் குதிரை வண்டி களிலேயே செல்வதால், பேக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படுகிறது. இதனால் மற்ற மக்களின் வெறுப்புக்கு உள்ளாகின்றனர். அது மட்டும் அல்லாமல் இவர்கள் வாழும் முறையினால் அரசுக்கு எந்த வரியும் செலுத்தாமல் இருக்க முடிகிறது. ஆனால் நாட்டில் உள்ள உள்கட்டமைப்பு வசதிகள் இவர்களுக்கும் சேர்த்துத் தான் வடிவமைக்கப்படுகின்றன. இதுவும் மற்ற மக்கள் இவர்கள் மீது வெறுப்புணர்வை ஏற்படுத்துகிறது. இருந்தாலும்,

இவர்களால் பென்சில்வேனியா மாநிலத்தின், அமெரிக்க நாட்டின் சமூக இயக்கத்திற்கு இடையூறு ஏதும் இல்லை என்று கூறி, இவர்களுடைய வாழ்க்கை முறையில் அரசுகள் குறுக்கிடுவது இல்லை. ஆகவே இம்மக்கள் தங்கள் நம்பிக்கையின் அடிப்படையில் வாழ்க்கையைத் தொடர முடிகிறது.

**போக்குவரத்துக்கு இடைஞ்சலாகக் குதிரை வண்டியில் பயணித்தல்**

ஆனால் நம் நாட்டில் வாழும் பழங்குடி மக்களைப் பாருங்கள். அவர்கள் ஆமிஷ் சமூகத்தவரைப் போல நாட்டின் பிற பகுதி மக்களுடன் ஒத்துழைக்க மறுப்பது இல்லை. அது மட்டும் அல்ல; தேன், மூலிகைகள் போன்ற காட்டு விளைபெருட்களை நம் பயன்பாட்டிற்காக அளித்தும் வருகின்றனர். தங்கள் வாழிடங்களையும், வாழ்வாதாரங்களையும் பாதிக்காத பட்சத்தில், பிற பகுதி மக்களுக்கு மனமுவந்து உதவி செய்ய ஆயத்தமாக உள்ளனர்.

ஆனால் நாம் இவர்களை எப்படி நடத்துகிறோம்? உலகின் மிக மிகப் பெரும்பான்மையான மக்களுக்கு அவசியத் தேவையாக இல்லாத, ஒரு சிலரின் ஆடம்பர வாழ்வுக்குத் தேவைப்படும் பொருட்களை உற்பத்தி செய்வதற்காக, கனிம வளங்களை வெட்டி எடுப்பதற்கு, இந்நாட்டின் மண்ணின் மைந்தர்களை அவர்களுடைய வாழிடங்களில் இருந்து துரத்துகிறோம். அவர்களுடைய வாழ்வாதாரங்களைப் பறித்து, வாழ வழி இல்லாமல் செய்து, அவர்களை அழித்து ஒழித்து வருகிறேம்.

இத்திருப்பணியை நாம் செய்யவில்லையா? பன்னாட்டுப் பெருமுதலாளிகளின் ஆணைக்குக் கட்டுப்பட்டு, இந்திய அரசு தான் செய்கிறதா? அது சரி! இந்திய அரசைத் தேர்தல் மூலம் நாம் தானே தேர்ந் தெடுத்தோம்? அது மட்டுமா? இந்திய அரசு எடுக்கும் நட வடிக்கைகள் எதையும் நாம் எதிர்த்து நிறுத்துவதே இல்லையே? அப்படி இருக்கும் போது பழங்குடி மக்களின் வாழ்வாதரரங்களைப் பறித்து, அவர்களுடைய வாழிடங் களில் இருந்து துரத்துவது நாம் தான் என்ற மன உறுத்தலும் ஏற்படவில்லையே? ஏன்?

## சிந்தனையாளன் இதழுக்குச் செய்திகள் அனுப்புபவர்கள் கவனத்துக்கு

சிந்தனையாளன் இதழுக்குச் செய்திகளை அஞ்சல் வழியாக அனுப்பும் தோழர்கள் கீழ்க்கண்டுள்ள முகவரிக்கு அனுப்புங்கள்

**வாலாசா வல்லவன்**
எண். 2/12, சி.என்.கே.சந்து, சேப்பாக்கம்,
சென்னை - 600 005.
**பேசி : 7299214554, 944431902**

*- ஆசிரியர் குழு*

## இராணிப்பேட்டையில் திருவள்ளுவர் பிறந்த நாள் விழா



வேலூர் மாவட்டம், இராணிப்பேட்டையில் திரு வள்ளுவர் பிறந்த நாள் விழா 15.1.2017 ஞாயிறு காலை 9 மணிமுதல் நடைபெற்றது. இராணிப்பேட்டை வி.ஆர்.வி., எல்.எப்.சி., காரை நடுநிலைப்பள்ளி மாணவியர் திருக்குறள் ஒப்புவித்தல், திருவள்ளுவர் வாழ்க்கை வரலாறு, நாட்டுப்புற பாடல்களுக்கு நடனம் ஆகியவை நடைபெற்றன. ஆறு பேருக்குத் திருவள்ளு வர் விருதுகள் வழங்கப்பட்டன. இராணிப்பேட்டைத் தமிழ்ச் சங்கத் தலைவர் ஏ. தனபால் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திருவலம் சந்தா சாமிகள், வாலாசா வல்லவன், முனைவர் பன்னீர்செல்வம் உள்ளிட்டோர் திருக்குறள், திருவள்ளுவர் நான் சிறப்பு கள் குறித்து உரையாற்றினர். த.தினகரன் நிகழ்வை ஒருங்கிணைத்தார்.

## மடல் பகுதி

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு, வணக்கம். சிந்தனையாளன் தொடர்ந்து படிக்கிறேன். தமிழ் நாட்டில் மக்கள் தொகையில் சரிபாதியாக உள்ள விவ சாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் வாழ்வு வளம் பெற்றால், பாதி பிரச்சனைகள் தீர்ந்துவிடும்.

நூலக அறிவு அதிகமானால் பிரச்சனைகளுக்கு அவனே தீர்வு காண்பான்.

சமூகத்தின் பண்பாடு மாறாமல் அரசியல் மாற்றம் வராது. எனவே பண்பாடுகளை மாற்றியமைத்திடும் நூல்களை அறிமுகம் செய்திடுங்கள்.

மாவீரன் திப்புசுல்தான் கட்டுரை சிறப்பானது. ‘தின்று தீர்க்க’ பாவலர் வையவன் கவிதை நெருப்பாக எரிகிறது. மனது அமைதியாகிறது.

தில்லி மாசு - தீர்வு கிராமமயமாக்கல்; பரவலாக்கப் பட்ட பொருளாதாரம் - பசுமைப் பொருளாதாரம் மட்டுமே தீர்வு.

நன்றி : **ப.தி. ராசேந்திரன்,** கலசபாக்கம்

# இனி மெல்லச் சாவோம்

- கோ. கோதண்டராமன்

ஒரு தேசிய இனத்தின் பண்பாடு, மொழி, கலாச் சாரம், உணவுப் பழக்கவழக்கம் இவற்றை அழித்தால் போதும், அந்தத் தேசிய இனம் அழிந்து போகும். தமிழ்த்தேசிய இனத்தின் மொழி அழிக்கப்படுவது எப்படி?

**1. பிறமொழி ஆதிக்கம் :**

இந்தி, சி.பி.எஸ்.சி. பள்ளிகளில் பெற்றோர்கள் விரும்பா மலேயே மறைமுகமாக இந்தித் திணிக்கப்படுகிறது. சமசுகிரு தம் திணித்தல் (இந்தியா முழுவதிலும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் 14135 பெயர்கள் மட்டுமே) பெயரால், வாஸ்து என்ற மிகப்பெரிய சமசுகிருத மொழி ஊடுருவல் நடைபெறு கிறது. தமிழ்க் குடும்பங்களில் பெயரால், தமிழ்க் குடும்பங் களில் தமிழ்ப்பெயரை மாற்றுதல், அவன் வணங்கும் தெய் வங்களின் பெயர்களை மாற்றுதல், அவன் பண்டிகையின் தன்மைகளை மாற்றுதல்.

**2. கலாச்சார அழிப்பு :**

உணவுப் பழக்கவழக்கங்களில் மாற்றம் அடையச் செய்தல், தமிழக உணவகங்களில் இட்லி கிடைக்கிறதோ இல்லையோ, பரோட்டா, பீட்சா, பர்க்கர் கிடைக்கும். நம் முன்னோர்கள் மசாலா உணவுகளை இரவில் உண்ண மாட்டார்கள். அல்லது தவிர்த்து வந்தார்கள். இப்போது அதிக மசாலா பொருட்கள் பயன்படுத்தப்படுகிறது. உடையில் மாற்றம் - வேட்டி சென்றது ஜீன்ஸ் வந்தது. (ஒரு ஜீன்ஸ் பேன்ட் உருவாக்க 10,999 லிட்டர் தண்ணீர் தேவைப்படு கிறது). சுடிதார் பள்ளியின் வாயிலாகத் திணிக்கப்படுகிறது. அதையே பொதுமக்களும் பின்பற்றுகிறார்கள். பாவாடையும் தாவணியும் ஒழிந்தது. சேலை, கிராமங்களில்கூட மறைந்து போகும் நிலையில் உள்ளது. அவன் வணங்கும் முருகன்-சுப்பிரமணியன் ஆனான். அவன் வணங்கும் அண்ணா மலையைார்-ஸ்ரீஅருணாச்சல ஈஸ்வரர் ஆனார். அவன் வணங்கும் பிள்ளையார் விக்னேஸ்வரன் ஆனான். இப்படி பல தெய்வங்களின் பெயர்கள் மாற்றப்பட்டன.

அவன் தமிழ்மொழியின்மேல் உள்ள பற்றால் இனிய தமிழில் செந்தமிழன், செந்தமிழ்ச்செல்வி, இப்படி தமிழ்ப் பெயர்களே வைத்து அழகுபார்த்தான். ஆனால் இன்றோ அவன் பெயரன் பெயர்த்திகளுக்கு பெயர் வைக்க வந்துவிட்டது, வாஸ்து. அதனால் ரமேஷ், சுரேஷ், ஷாலினி, பிரிதிஷா, மோனிஷா இப்படி பொருளற்ற, விளங்காத பெயர்களை வைத்திருக்கிறார்கள். வாஸ்துவைப் பற்றி சொல்லவரும் ஒரு நபர் வாஸ்துவைச் சொல்லி அதைப் படித்தவர், படிக்காதவர் கள் மற்றும் பாமர மக்களை நம்பவைத்து வீட்டையே இடித்து நாசம் செய்துவிடுகிறார். அவன் வாஸ்து சொல்லுவதால் தான் வேண்டுமானாலும் செல்வந்தராகலாம்; ஆனால் அதைப் பின்பற்றுவோர் ஓட்டாண்டியாகத்தான் போகிறார்கள். அது மட்டுமா, அவன் அணியும் உடையின் நிறம், உண்ணும் உணவு, குடிக்கும் பானம், வைக்கும் பொட்டு, எந்தப் பக்கம் வேலைக்குப் போக வேண்டும், அதற்கு மாற்று இவை அனைத்தும் வாஸ்துவில் அடக்கம். உலகிற்கே வழிகாட்டி யாக வீடுகட்டி வாழ்ந்த இனம் தமிழினம் (சிந்துவெளி, அரப்பா நாகரிகம், மதுரை அருகே கீழடி நாகரிகம்). இவனுக்கு வாஸ்து வழிகாட்டுகிறது.

கிராமங்களில் மண்பாண்டத்தில் சமைத்துச் சுவை யுடனும், கெடாமலும் நோய்த்தடுப்பும் உள்ள மண்பாண் டத்தை மறந்து, அலுமினிய, எவர்சில்வர் பாத்திரங்களில் உணவைச் சமைத்து உடலைக் கெடுத்துக் கொள்கின்றனர். மேலை நாட்டு மோகத்தால் அடிமை விளையாட்டான கிரிக்கெட்டைப் பிடித்துக் கொண்டான். நம் தமிழ்நாட்டுப் பாரம்பரிய விளையாட்டுகள் கிட்டிபுல், பம்பரம், சடுகுடு, சிலம்பம், வாள்சண்டை மற்ற தற்காப்புப் பயிற்சிகள் போன்ற வையும் சல்லிக்கட்டு, எருது பிடித்தல், எருதாட்டம் போன்ற வையும் அழியும் தருவாயில், சட்டுக்கட்டு மட்டும் மீட்டுரு வாக்கம் பெற இலட்சக்கணக்கான மாணவர்கள், இளைஞர் கள் போராடி வருகின்றனர்.

இயற்கையாக விளைவித்த அல்லது விளைந்த உணவுப் பொருள்களை மண்பாண்டத்தில் இட்டு சமைக்கும் பொழுது அத்தெரு முழுக்க மணம் வீசும். இன்று கோழிக்குழம்பு கூட வாசம் வருவதில்லை. ஏனென்றால், இன்று வேதிப்பொரு ளால் வளர்க்கப்பட்ட இனம் சிறுவணிகரை அழித்து, பெருவணிகரையும் அழித்து பன்னாட்டு வணிகம், சிறு விவசாயத்தை அழித்து, பெரு விவசாயத்தையும் அழித்துக் கார்ப்பரேட் நிறுவனங்கள் வந்துவிட்டன. சிறு, குறு விவசாயிகள் நிலத்தை இழந்து கார்ப்பரேட் நிறுவனத்திடம் வேலை கேட்டுப் படையெடுக்கின்றனர். இதெல்லாம் எதனால்? கிராமத் தொழில் அழிக்கப்பட்டதும், அவன் செய்த இயற்கை விவசாயம் அழிந்ததும், கிராமத் தொழில்கள் அழிந்ததும், கிராம வணிகம் அழிந்ததுமே ஆகும்.

விவசாயி இயற்கையை விட்டதால், விவசாயம் அழிந்தது. சிறுவணிகம் கிராம மக்களிடம் உள்ள பொருள்களைச் சந்தை விலைக்கு வாங்கி விற்காமல் அப்பொருள்கள் நகரத்திற்குச் சென்று மீண்டும் கிராமங்களுக்கே வருகின்றன. அதை வாங்கி விற்பதால் அந்தப் பொருளின் தன்மை மாறுகிறது. விவசாயி நலிவடைகிறான். கிராமத்தான் என்று ஏமாற்றாமல் “வாங்குவதும் மிகைகொளாது விற்பதும் குறைகொளாது” என்று பண்டைய கால வணிகர்கள் வாழ்வைப் பின்பற்றி நடந்தால் வீடும் நாடும் செழிக்கும்; கிராமப் பொருளாதாரம் மேம்படும்; நகரமும் வாழும்; மக்களும் மகிழ்ச்சி அடைவர். இல்லையேல் இனி மெல்லச் சாவோம்.

## சனவரி 2017இல் சல்லிக்கட்டுப் போராட்டத்தால் ஏற்பட்ட விளைவுகள்

இளைஞர்களை ஒன்றுசேர்த்து, உலகமே வியக்கும் அளவுக்குப் போராடத் தூண்டியது மிக மிகச் சிறந்த விளைவு.

இனி நடக்கும் போராட்டங்கள் (ஆற்று நீர் பிரச்சனை, தாய்மொழிவழிக் கல்வி மற்றும் சமச்சீர் கல்வி பிரச்சனை, நல்ல மருத்துவம் போன்ற பல பிரச்சனைகள்) அனைத்தும் இளைஞர்கள் மூலம் கூட்டாக நடக்க வழிவகுக்கும் என்பது உறுதியாகிவிட்டது சிறந்த விளைவு.

இந்தியாவுக்கு வெளிநாட்டுக் கலப்பின மாடுகளை இறக்குமதி செய்வது, பேரழிவை ஏற்படுத்தும். தொழில் நிறுவனங்களை அமைப்பதை எதிர்த்தும், உடல் நலத்தைக் கெடுக்கும் குளிர்பானங்களைத் தடைசெய்யக் கோரியும், நம் இளைஞர்கள் போராட்டத்தின் மூலம் வெளிப்பட்டுள்ளது, மிக மிகச் சிறந்த விளைவு.

அவசரச் சட்டம் மூலம் உருபாய் நோட்டுகளை சில மணிநேரத்தில் மாற்றி, ஊழலை ஒழிக்க முயன்ற மத்திய அரசு, ஏன் நீண்டகாலமாக உள்ள காவிரி ஆற்று நீர் பிரச்சனை, முல்லைப் பெரியாறு பிரச்சனை, மருத்துவப் படிப்புக்கான நுழைவுத் தேர்வு போன்ற பல பிரச்சனைகளைத் தீர்க்க முடியவில்லை?

அடுத்தவர்களுக்காக நாமும் நம் பாரம்பரியத்தை விட்டுவிடக்கூடாது என்ற எண்ணம் எல்லாத் தரப்பினரிடமும் உருவானது சிறந்த விளைவு.

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களும், ஒன்றுபடச் செய்ததும் இந்தப் போராட்டத்தின் விளைவே ஆகும்.

**இளைஞர்கள் எங்கே நம்மை ஒதுக்கி விடுவார்களோ என்ற பயத்தை ஏற்படுத்தியதும், சுய இலாபத்தையே கருத்தில் கொண்டு போராடிய அரசியல் கட்சிகளின் எண்ணத்தை மாற்றியதும் மிக மிகச் சிறந்த விளைவு.**

இதுநாள்வரையில், பொறுக்கிகளும் அரசியலுக்கு வரலாம் என்று இருந்த வாய்ப்பை முறியடிக்கும் வண்ணமாக - அறிஞர்களும், துணிந்து செயல்படும் இளைஞர்களும் அரசியலுக்கு வரவேண்டும் என்ற கண்ணோட்டத்தில் சல்லிக் கட்டுப் போராட்டம் அமைந்தது மிக மிகச் சிறந்த விளைவு.

பல மாற்றங்களுக்கு இந்தப் போராட்டம் அடிப்படையாக அமையும் என்பது உறுதியாகியதும் சிறந்த விளைவே!

**- உழவர் மகன் ப.வ.**

### சிந்தனையாளன் வளர்ச்சி நிதி பிப்ரவரி-2017

| | | |
|---|---|---|
| **கண்ணையன்** | சென்னை | 5000/- |
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| **இரா. குப்புசாமி** | கரூர் | 1000/- |
| **க. ஆதிமூலம்** | கீழ்பென்னத்தூர் | 1000/- |
| **ச. சுந்துஜா** | காஞ்சிபுரம் | 1000/- |
| **பொ. வெங்கடேசன் சமரசம்** | பெரம்பலூர் | 1000/- |
| **தமிழேந்தி** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| பூவாலூர் **ஜெகநாதன்** | பூவாலூர் | 500/- |
| **சாமி கங்காதரன்** | திருச்சி | 500/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 300/- |
| **பகுத்தறிவாளன்** | திருப்பத்தூர் | 250/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| பேரா. **ச.பொ.சீனிவாசன்** | மூணாறு | 200/- |
| **வீ. இராசாப்பிள்ளை** | சிதம்பரம் | 200/- |
| **மரு. வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| செண்ட்ரிங் **இரா.ப. கோவிந்தன்** | தாம்பரம் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **நா. மதனகவி** | வாணியம்பாடி | 100/- |
| **இ. கபிலன்** | சிதம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **இரா. பத்மநாபன்** | மாதவரம் | 100/- |
| **ஜே. பொழிலன்** | கீழவெளி அரியலூர் | 100/- |
| **சி. தென்றல்** | கீழவெளி அரியலூர் | 100/- |
| **சி. தமிழ் நிலவு** | அரியலூர் | 100/- |
| **புலவர் பூ.வெ.சொக்கலிங்கம்** | அத்திமாஞ்சேரிபேட்டை | 100/- |

### மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - சனவரி-2017

| | | | |
|---|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... | 100/- |
| **க. குப்புசாமி** | சோளிங்கபுரம் | .... | 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... | 100/- |
| **கு.சூரியன்** | பெங்களூர் | .... | 100/- |
| **கு.பாரி** | சோளிங்கபுரம் | .... | 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் | .... | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... | 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர், எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு, அம்பத்தூர், சென்னை - 53.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-53. ☎ : 044-2625 2119